வாலிவதம் சரியா?

முரு. பழ. இரத்தினம் செட்டியார்

மீனாட்சி பதிப்பகம்

வாலி வதம் சரியா?

(ஒரு திறனாய்வு நூல்)

ஆசிரியர்

புலவர்மணி, சித்தாந்த வித்தகர்

முரு. பழ. இரத்தினம் செட்டியார்

அணிந்துரை

வாகீச கலாநிதி

கி. வா. ஜகந்நாதன்

மீனாட்சி பதிப்பகம்

கீழ இராசவீதி :: புதுக்கோட்டை.

வெளியீடு வரிசை எண் 14

முதற்பதிப்பு : ஜூன் 1975

விலை ரூ. 3-00

அச்சிட்டோர்

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.

கருத்துரை

வாகீச கலாநிதி உயர்திரு. **கி. வா. ஜகந்நாதன் M. A.**
(ஆசிரியர், கலைமகள்)

இந்த நாட்டில் இராமகாதை பரவியிருக்கும் அளவுக்கு வேறுஎந்த நாட்டிலும் யாருடைய கதையும் பரவியிருக்கவில்லை. பாமரர்கள் கூட இராமன் கதையை ஒருவாறு அறிந்திருப்பார்கள். இலக்கியமாகவும், இசைப் பாட்டாகவும், நாடோடிப் பாடலாகவும் இராமனுடைய கதை பல மொழிகளிலும் வழங்குகிறது.

ஆதி காவியம் என்று புகழ்பெற்ற வடமொழி இராமாயணத்தை வால்மீகி முனிவர் இயற்றினர். அதைத் தழுவி இந்திய நாட்டு மொழிகளில் இராமாயணங்கள் எழுந்தன. அவ்வாறு வந்த இராமாயணங்களில் காவியம் என்ற முறையில் மிகச்சிறந்து விளங்குவது கம்பராமாயணம். எம்மதத்தினரும் விரும்பிப் படிக்கும் சுவைகள் நிரம்பியதாக இருக்கிறது, அந்தக் காப்பியம்.

முன்பெல்லலாம் கம்பராமாயண விரிவுரைகள் ஆங்காங்கே நிகழ்ந்து வந்தன. பல ஆண்டுகளாக அந்த விரிவுரைகளோடு கருத்தரங்கும், ஆராய்ச்சி அரங்கும், பட்டிமண்டபமும் கம்பராமாயணம் பற்றி நிகழ்கின்றன. நாளாக ஆகக் கம்பனைப்பற்றிய ஆராய்ச்சி விரிவடைந்து வருகிறது.

வால்மீகி ராமாயண மாகட்டும், கம்பராமாயணமாகட்டும் இரண்டிலும் பொதுவாக இராமனுடைய கதையிலேயே என்று சொல்லிவிடலாம்—இரண்டு நிகழ்ச்சிகள் இன்னும் வாதப் பிரதி வாதங்களுக்கு உட்பட்டு நிற்கின்றன. இந்த இரண்டிலும் முடிந்த முடிபாக, இதுதான் சரி என்று யாவரும் ஒப்புக் கொள்ளும் வகையில், விளக்கம் இன்னும் வரவில்லை. ஒன்று இராமன் வாலியை வதைத்தது முறையா என்பது.

மற்ருென்று வீடணன் தன் தமையனே விட்டு வந்தது முறையா என்பது. முதலில் உள்ளது காப்பிய நாயகனுகிய இராமனுக்கே இழுக்குக் கூறும் நிகழ்ச்சி. இராமன் வாலியை மறைந்து கொன்றது அவன் குணநலன்களில் படிந்த மாசு என்றே மேதை ராஜாஜி முதலிய சில அறிஞர்கள் எழுதியிருக்கிருர்கள்.

வாலிவதத்தைப் பற்றிய ஆராய்ச்சி பல பட்டிமண்டபங் களிலும் வழக்காடு மன்றங்களிலும் நடந்து வருகிறது. சிலர் அதுபற்றி நூல்கள் எழுதியிருக்கிருர்கள். வாலிவதம் தவறு அன்று என்பதைத் தங்கள் தங்களுக்குத் தோன்றிய நியாயங் களேக் கூறி அந்நூல்களே எழுதியிருக்கிருர்கள்.

புலவர் மணி, சித்தாந்தவித்தகர் திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியாரவர்கள் ''வாலி வதம் சரியா?'' என்ற தலைப்புடன் செய்த திறனாய்வின் முடிபை இந்தப்புத்தக வடிவில் வெளியிட்டிருக்கிருர். இதுவரையில் எழுந்த ஆராச்சிகளின் முடிவை இவர் எடுத்துக் காட்டி அவை சரியான சமாதானமாக இல்லே என்றுகூறுகிருர். மற்றவர்கள் காட்டிய முறையினின்றும் இவர் வேறுபட்டு ஒரு புதிய கோணத்தில் இதனே ஆராய்கிருர். பிறன்மனே நயந்த பெருங்குற்றத்தைச் செய்தவன் வாலி. அந்தக்குற்றம் மன்னிக்க முடியாத பெரிய பாதகம்; அதற்குரிய தண்டனேயை வழங்கியே தீரவேண்டும்; 'பிறன் மனே நோக்காத பேராண்மை சான்ற' இராமன் தன் அவதாரத்தின் முக்கியகொள்கையாக இதை மேற்கொண்டிருக்கிருன்; இராவணனுடைய வதமே அதன் பொருட்டாக அமைந்தது தான்; ஆகவே வாலியைக் கொன்றது நியாயமே. இவ்வாறு இவ்வாசிரியர் நிறுவுகிருர்.

அவனே மறைந்து நின்று கொன்றது முறையா?—இந்தக் கேள்விக்குக் கம்பன் இலக்குவன் வாயிலாகக் கூறும் கருத்தையே காரணமாகக் கூறுகிருர். வாலி இராமனேச் சரணுகதி அடைந்தால் அவனேத் தண்டிக்க முடியாது. ஆகையால் வேறுவழியின்றி மறைந்து கொல்ல வேண்டியது அவசியமாயிற்று.

போர் அறத்துக்கு மறைந்து நின்று கொல்லுதல் இழுக்காயிற்றே என்ருல், பிறன்மனை நயந்தவனை ஒறுத்தலாகிய பேரறத்தைப் பேணும் பொருட்டு இராமன் போரறத்தினின்றும் சிறிது வழுவினுன். தன் குழந்தையைக் காப்பாற்ற வேண்டி அதனைக் கொல்ல வந்த பசுவைக் கொல்லுவது எப்படி நியாயமோ, அப்படி இந்தச் செயலும் நியாயம் என்று இவ்வாசிரியர் விளக்குகிருர்.

இருவேறு அறங்கள் ஒன்றுக் கொன்று முரணுக அமையும்படி வாய்ப்பதைத் தருமசங்கடம் என்பார்கள். அப்போது வலிமையான அறத்தைப் பேணி மற்றதை விட்டு விடலாம் என்ற நியாயம் உண்டு. 'தன்னைக் கொல்ல வந்த பசுவைக் கொல்லலாம்' என்று இதற்கு எடுத்துக் காட்டுச் சொல்வார்கள். அந்த முறையில் இராமன் பேரறம் காக்கப் போரறம் கைவிட்டான் என்று கூறி, இத்தகைய சங்கடம் விளைந்ததற்காக இராமனே வருந்தி நோற்ருன் என்று சில மேற்கோள்களைக் காட்டுகிருர்.

மறைந்து கொன்றது இராமன் உள்ளத்தை உறுத்திலும் அதுபெரிய தவறு அன்று என்றும், பேரறத்தை நிலைநாட்ட அந்த அறத்தைத் தியாகம் செய்ய வேண்டிய இன்றியமை-யாமை உண்டாயிற் றென்றும் இவ்வாசிரியர் கூறுவது சிந்திப் பதற்குரியது. ''போரின் வில்லறம் துறந்து வாழ்வேன்'' என்று இராமன் கூறுவதற்கு இவர் கொள்ளும் உரை, இவருடைய வாதத்துக்கு அரண் செய்கிறது. ஆனல் அதற்கு வேறு பொருள் கொள்பவர்களும் இருக்கிருர்கள்.

அன்பரவர்கள் எழுதிய இந்தநூல் ஒரு புதிய கோணத்தில் இருப்பதால் புலவர்கள் சிந்தனைக்கு விருந்தாக இருக்கும். முடிந்தமுடிவு இதுதான் என்று சொல்ல முடியாவிட்டாலும் இவருடைய விளக்கங்களும், காரணங்களும் அறிவுடைய வர்களின் ஆராய்ச்சிக்கு உரியவை என்பதில் ஐயம் இல்லை.

''வாலிவதம் சரி'' என்று நிலைநிறுத்த முற்பட்ட ஆராய்ச்சி களில் இது சில புதிய கருத்துக்களைச் சொல்வது பாராட்டத் தக்கது.

சென்னை-28
29—4—75 கி. வா. ஜகந்நாதன்

முன்னுரை

புதுக்கோட்டையில், 'வாலி வதம்சரியா?' என்னும் தலைப்பில் 31-7-74 ஆம் நாள் ஒரு பட்டிமண்டபம் நடைபெற்றது. அதில் நடுவராக இருந்து தீர்ப்பு வழங்கும் வாய்ப்பு எனக்குக்கிட்டிற்று. இந்நூல் உருவாவதற்கு அஃதே காரணமாக அமைந்தது.

என் சிந்தனையைத் தூண்டி வாலியைப்பற்றி பல்வேறு கோணங்களில் ஆராயுமாறு செய்தவர்கள் புதுக்கோட்டை நகரில் வாழ்கின்ற தமிழறிஞர்கள் ஆவர். குறிப்பாக, புலவர் திரு. இரா. சொக்கலிங்கனார் B. A., திரு. கு. ப. கண்ணன் M. Sc., திரு. க. துரைபாண்டியன் M. A. திரு. கரு. செல்லமுத்து M. A., திரு. இலக்குமிநாராயணன் M. A., திரு. இரா. அரங்கசாமி B. Sc., B. L. ஆகியோர் இந்நூல் உருவாகப் பெரிதும் துணை செய்தனர். அவர்கள் அனைவருக்கும் என் நன்றி.

நூல் எழுதி முடிந்த பிற்பாடு கூட இரண்டு வினாக்களை அன்பர் திரு. துரைபாண்டியன் M. A. அவர்கள் எழுப்பினார்கள். '' வாலி, சுக்கிரீவன் ஆகியோர் ஒரே தாய்வயிற்றில் வெவ்வேறு தந்தையருக்குப் பிறந்தவர்களாக இருக்கும் போது இவர்களிடையே பிறனில் விழையாமையாகிய அறத்தை வைத்துப் பேசுவது பொருந்துமா? '' என்பது ஒருவினா. திருமணமே இல்லாத நிலையில் விளையாட்டாகப் பெண்ணுருக் கொண்ட அருணனை இந்திரனும் சூரியனும் மோகித்து வாலி சுக்கிரீவர்களைத் தோற்றுவித்தனர் எனக் கூறப்படுவதால் திருமண வாழ்க்கை முறை அமுலுக்கு வந்த கிட்கிந்தை நாட்டு அரச குடும்ப மரபுக்கு அதனை உதாரணமாகக் காட்டுவது பொருந்தாது என்பதே அதற்குரிய விடையாகும். ''சரணாகதி நாயகன் சரணாகதி அளிக்கும் வாய்ப்பை வழங்கப்பயப் படுவது சரணாகதி தர்மத்துக்குப் பொருந்துமா?'' என்பது

மற்றொரு வினு. சரணுகதி தர்மம் என்பது ஒருவன் சரணடைந்த பிற்பாடுதான் தோன்றும். சரணடைவதற்கு முன் ஏற்றபெற்றி நடந்து கொள்வது அதற்கு முரண் ஆகாது. பிறனில் விழைதல் என்னும் குற்றம் எவ்வளவு கொடியது என்பதைச் சரணுகதி அடையும் வாய்ப்பை வழங்கப் பயப்படுவதன் மூலம் இராமன் உணர்த்துகிருன் என அறிதல் வேண்டும்.

''இல்லறம் துறந்த நம்பி எம்மனேர்க்காக வில்லறம் துறந்து'' என வாலி பயன்படுத்தும் சொற்களையே சுக்கிரீவ னிடம் இராமன் பயன்படுத்துவதால், ''வில்லறம் துறத்தல்'' என்பது மறைந்து நின்று கொன்றதையே குறிக்கும் என்பது என் கருத்தாகும். வேறு வேறு பொருள் சொல்வது ஏதோ வலிந்து சொல்வதாகவே எனக்குத் தோன்றுகிறது.

இந்நூலில் கண்ட முடிவே முடிவு என நான் சொல்ல வில்லை. அதனைத் தமிழகத்தின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன். ஆனால் என்முடிவே கம்பன் கருத்திற்கு மிக அணுக்கமானது என நான் நம்புகிறேன்.

இந்நூலுக்கு மனமுவந்து வாகீசகலாநிதி உயர்திரு கி. வா. ஜ. அவர்கள் கருத்துரை வழங்கி அணி செய்திருக்கி ருர்கள். அவர்களுக்கு என் உளமார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைப் பல நெருக்கடிகளுக்கு இடையே வெளியிட்ட புதுக்கோட்டை மீனுட்சி பதிப்பகத்தார்க்கு என் நன்றி.

புதுக்கோட்டை,
1—5—1975.

முரு. பழ. இரத்தினம் செட்டியார்

பதிப்புரை

கம்ப இராமாயணத்தில் "வாலிவதை" விவாதத்திற்குரிய பகுதி. தமிழறிஞர்கள் பல பட்டிமன்றங்களில் இதுபற்றிச் சுவையான விவாதம் நடத்தி இருக்கின்றனர்; நடத்தியும் வருகின்றனர்.

இந்நூலாசிரியர் புலவர்மணி, சித்தாந்த வித்தகர் உயர்திரு முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் கம்பர் வழி நின்று விரிவான ஆராய்ச்சியின் அடிப்படையில் ஒரு முடிவு காண்கின்றார். அம்முடிவை நூலினுட் காண்க.

இவ்வாராய்ச்சி நூலைத் தமிழறிஞர்கள் முன் படைப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந் நூலாராய்ச்சியின் முடிவு குறித்து அறிஞர் பெருமக்கள் தம் கருத்தை எழுத வேண்டுகிறோம். அவற்றை மறு பதிப்பில் இணைத்து வெளியிட ஆவலாக இருக்கிறோம்.

இந்நூலில்-சில பிழைகள் ஆங்காங்கே இருப்பனவற்றை அருள்கூர்ந்து பிழைதிருத்தப்பகுதியில் கண்டபடி திருத்தி வாசித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

புதுக்கோட்டை
1—5—1975

பதிப்பகத்தார்.

வாலி வதம் சரியா?

(ஒரு திறனாய்வு)

வாலி வதம் சரியா ? இவ்வினா இராமாயணம் தோன்றிய காலம் தொட்டுக் கேட்கப்பட்டு வருகிறது. ஒரு சாரார் சரி என்றும், இன்னொரு சாரார் தவறு என்றும் கூறிவந்துள்ளனர்.

இவ்வினாவிற்கு வான்மீகத்தின் வழி நின்றோ, வேறு இராமாயணங்களின் வழி நின்றோ கம்பனின் வழிநின்றோ விடை காணலாம். எல்லா நூற்களையும் ஒன்றாகச் சேர்த்து ஆராய்ந்தால் குழப்பம் ஏற்படும். எனவே, ஏதேனும் ஒரு நூலின் வழி நின்று முறையாக ஆராய்வதே சிறப்பு. நாம் இந்நூலில் முழுக்க, முழுக்கக் கம்பனின் வழி நின்றே விடை காண முயன்றுள்ளோம். இந்நூலுக்குக் கம்பராமாயணத்தைத் தவிர வேறு இராமாயணங்கள் பிரமாணமாகா என்பதை முதற்கண் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இனிக் கம்பனின் வழி நின்று, கதை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து சென்று இவ்வினாவிற்கு விடை காண்போம்.

சீதையைத் தேடிச் சென்ற இராமபிரானும், இலக்குவனும் கவந்தன் என்னும் அரக்கனிடம் அகப்பட்டுக் கொள்கின்றனர். கவந்தனை வீழ்த்தியபோது, கந்தர்வ சரீரத்துடன் நின்ற அவன், சீதையைத் தேடுவதற்குச் சுக்கிரீவனின் துணையை நாடும்படி அவர்களுக்கு யோசனை கூறுகின்றான். சபரியிடங்கேட்டு வழி தெரிந்து போகும்படியும் சொல்கிறான். வாலியைத் துணைக் கொள்ளாமல், சுக்கிரீவனைத் துணைக் கொள்ளச் சொல்கிறான். இதற்குக் காரணம் யாது ?

வாலி அளவற்ற வலிமையுடைவன்; வாலி ஒருவனாகவே நின்று தேவர்களாலும், அசுரர்களாலும் கடையமுடியாத

மந்திர மலையைக் கடைந்து அமிர்தம் அளித்திருக்கிறன். அவனின் அளவற்ற ஆற்றலை அநுமன் பலபட வியந்து கூறியிருக்கிறன். ஆகவே, வாலியைத் துணையாகக் கொண்டு சீதையைப் பெறுவது மிக எளிது. இராமன் வாலியை அடைந்திருப்பானுனல், அவன் ஒருவனே சீதையை மீட்டுக்கொண்டு வந்திருப்பான். அவன் மீட்டுக் கொண்டு வந்திருந்தால் இராமனின் வில்லுக்குப் பெருமையில்லாமல் போயிருக்கும். சீதையை மீட்பதற்கு ஒருவன் துணையாக அமையலாம். ஆனல், அவனே காரணமாக அமையக்கூடாது இராமனுக்குக் கீழ்ப்பட்டு வேலை செய்யக் கூடியவன் சுக்கிரீவனே. இதனுல்தான் கவந்தனும் சபரியும் வாலியைத் துணைக்கொள்ளச் சொல்லவில்லையெனச் சிலர் கூறுகின்றனர், மற்றும் சிலர் பிறனில் விழைந்த வாலியிடம் இராவணன் தன் மனைவியை அபகரித்துச் சென்றிருக்கிறன் என இராமன் கூறினல், அவன் ஒரு வேளை அதற்காக அனுதாபம் கொள்ளாமல் போகக்கூடும் என அஞ்சியே அவனைத் துணைக் கொள்ளச் சொல்லவில்லை எனக் கருதுகின்றனர். ஆனல், இக் காரணங்களைக் கருத்தில் கொண்டு கவந்தனும் சபரியும் இராமனைச் சுக்கிரீவனிடத்திலே ஆற்றுப்படுத்தினர் எனக் கம்பன் சொல்லவில்லை. இராமன் பிறனில் விழைந்தானைத் தண்டிக்கப் பிறந்தவன். அவன் காரிய வெற்றிக்காகப் பிறனில் விழைந்த வாலியோடு கூட்டுச் சேர்ந்தால், அச்செயல் என்றென்றும் அவனுக்குத் தீரா வசையாகவே இருக்கும். காரிய அநுகூலத்திற்காகப் பொருந்தாக் கூட்டுச் சேரக்கூடாது. இராமனின் குழு அறவொழுக்கம் பிறழாதவர்களையே உறுப்பினர்களாகக் கொண்டிருக்க வேண்டும். இதனுலேயே கவந்தன்,

''தீயவர் சேர்க்கிலாது செவ்வியோர் சேர்த்துச்செய்தல்''

எனக் கூறுகிறன்.

கவந்தனும், சபரியும் நல்லோர் கூட்டு வேண்டும் என்னும் கருத்திலேயே சுக்கிரீவனிடம் செல்லுமாறு வழிகாட்டி இருக்கின்றனர் என்பதே கம்பன் கருத்தாகும்.

இராம இலக்குவர் இருவரும் சுக்கிரீவனைத் தேடிவரும் பொழுது அநுமன் வந்து அவர்களைச் சந்திக்கிருன். "நீ யார்? என இராமன் அவனை வினவுகிருன், "நான் சுக்கிரீவனின் ஏவலாளன்" என அநுமன் விடைபுகன்றதும், அவனைக் காணவே, தான் வந்திருப்பதாக இராமன் தெரிவிக்கின்ருன். இதனை அறிந்ததும் அநுமன் "ஐய, வாலியால் துரத்தப்பட்டுச் சுக்கிரீவன் இம்மலையில் வந்து ஒளிந்திருக்கின்ருன். அவன் செய்த பெருந்தவமே உன்னை அழைத்து வந்திருக்கிறது. நடுங்கினவர்க்கு அபயம் நல்குவதைவிட நல்ல செயல் வேறு உண்டோ? நானும் அவனும் உனக்கு அடைக்கலம்" எனக் கூறிச் சரணுகதி அடைகிருன், இங்கேதான் முதன்முதல் சரணுகதி துவங்குகிறது. சுக்கிரீவன் இராமனைக் காண்பதற்கு, முன்னமேயே அவன் சார்பாக அநுமன் சரண்புகுந்துவிடுகிருன். இதன் பின்னரே, சுக்கிரீவனை அழைத்துவர அவன் செல்கின்ருன்.

இராமனை அநுமன் கண்ணுற்றவுடன், அவனை விளித்துப் பேசுகின்ற பாடலில், வாலி வதத்திற்குரிய விதை ஊன்றப் பட்டிருப்பதைக் காண்கிரோம்.

"மஞ்செனத் திரண்ட கோலமேனிய மகளிர்க்கெல்லாம்
நஞ்செனத் தகையவாகி நளிர் இரும்பனிக்குத் தேம்பாக்
கஞ்சமொத் தலர்ந்த செய்ய கண்ணயான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றின் வந்தேன் நாமமும் அநுமன் என்ருன்"

இராமனின் கண்கள், "மகளிர்க்கெல்லாம் நஞ்சு" என்கின்ருன். 'பிறனில் நோக்காத கண்கள்' என்பது குறிப்பு. "பிறனில் நோக்காத பெருங் கொள்கையினனுகிய நீ பிறனில் விழைந்தவாலியை எவ்வாறு பொறுப்பாய்?" எனக்

குறிப்பிடுவதுபோல அநுமன் பேசுகின்றான். சுக்கிரீவனிடம் அநுமன் சென்று இராம இலக்குவர் வந்ததாகச் சொல்லும் போது, ''வாலிக்குக் காலன் வந்தான்'' என்று கூறி நடனம் புரிகின்றான். இராம இலக்குவரைப் பார்த்த மாத்திரத்தி லேயே அவர்களைக் கொண்டு வாலியைக் கொன்றுவிட வேண்டும் என அநுமன் தீர்மானித்து விடுகிறான். சுக்கிரீவ னும், அநுமனும் வாலியின் தொல்லை பொறுக்க முடியாமல் அவனைக் கொன்றுவிட வேண்டுமென்ற முடிவிற்குப்பல நாட் களுக்கு முன்னரே வந்துள்ளனர் என்றே நாம் கருத வேண் டியிருக்கிறது,

சாபத்திற்காக அஞ்சி வாலி சுக்கிரீவன் இருக்கும் மலைக்கு வராவிட்டாலும், எப்படியேனும் சுக்கிரீவனைக் கொன்றுவிட எண்ணிப் பல தொல்லைகளை அளித்திருக்கிறான் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. 'மலைமீது தம்பி இருந்துவிட்டுப் போகின்றான்', என வாலி வாளா இருந்தவனாகத் தெரிய வில்லை. இராம இலக்குவரைத் தூரத்தே கண்டதும், அவர்கள் வாலியின் ஆட்களோ எனப் பயந்து சுக்கிரீவன் ஓடி ஒளிகின்றான். வாலியின் ஆட்கள் அடிக்கடி வந்து தொல்லை கொடுத்திருக்காவிட்டால், அவன் இவ்வாறு பயந்து ஓடி ஒளிந்திருக்கமாட்டான். சுக்கிரீவனுக்கு மன்னிப்பு அளிக்கா தது மட்டுமன்றி அவனைக் கொன்றுவிட வேண்டும் என்றும் வாலி முயன்றிருக்கிறான் என்பது இதிலிருந்து புலனாகிறது.

சுக்கிரீவன் தன்னை மன்னிக்கும்படி வாலியிடம் எவ்வ ளவோ வேண்டியிருக்கிறான். வாலி அவன் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளாமல் அவனைக் கொல்ல முயன்றிருக்கின்றான். சுக்கிரீவன் தப்பி வந்து மலையில் தங்கியபின், அவன் மனம் மாறியிருக்கலாம். விடாப்பிடியாகக் கொல்ல முயன்றதே சுக்கிரீவனின் உள்ளத்தில் மிகுந்த வெறுப்பை உண்டாக்கி யிருக்கிறது. தன் மனைவியையும் அவன் அபகரித்துக் கொண் டான் என்ற நிலையில், இனி, ''அவன், தனக்கு அண்ணன்

அல்லன், பகைவனே'' என்ற முடிவுக்கு வந்திருக்கின்ருன். பிறனில் விழைந்த வாலி தன் புயவலிச் செருக்கினுல் குற்றத்தை உணராமல் தொல்லைகொடுப்பதை அநுமனுலும் சகிக்க முடியவில்லை. வாலியை ஒழிப்பதைத் தவிர வேறுவழி இல்லை எனக் கருதிய சுக்கிரீவனும் அநுமனும் இதற்குக் காலம் நோக்கி இருந்திருக்கின்றனர். இராம இலக்குவரைக் கண்டதும் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள அநுமன் முடிவு செய்து, சுக்கிரீவனிடத்தில் இராமனது சிறப்பையும், வல்லமையையும் எடுத்துக்கூறி, ''அவர்கள் சீதையைத் தேடுவதற்கு நம் துணையை நாடி வந்திருப்பதால் நாமும் வாலியைக் கொல்வதற்கு அவர்கள் துணையை நாடுவோம்'' எனக்கூறி அழைத்து வருகின்ருன்.

சுக்கிரீவன் வந்ததும், இராமன் அவனை அமருமாறு சொல்லி, சபரி வழி காட்டத் தான் வந்ததாகவும், தன் துயர் தீர்வதற்குத் துணை செய்யவேண்டும் என்றும் கூறுகிருன். இதனைக் கேட்ட சுக்கிரீவன் அண்ணனுல் தான் மிகவும் துன்பப்படுவதாகவும், தன்னைக் காக்க வேண்டும் என்றும் தெரிவிக்கின்ருன். இராமன் சீதையைத் தேடுவதற்குச் சுக்கிரீவனின் நட்புரிமையைத்தான் நாடுகின்ருன். ஆனுல் சுக்கிரீவனே வாலியைக் கொல்வதற்கு அவன் நட்புரிமையை வேண்டாமல், ''சரண் உனைப் புகுந்தேன் என்னைத்தாங்குதல் தருமம்'' என வேண்டுகிருன். நட்புக்கோடல் என்பது வேறு; சரணுகதி என்பது வேறு. நட்புரிமை என்ருல் நலந்தீங்கை ஆராய்ந்து ஒருவரையொருவர் கண்டிக்கவும், சமமாகக் கலந்தாலோசிக்கவும், இடம் உண்டு. சரணுகதி என்ருல் சரணடைந்தவன் நல்லவனுக இருந்தாலும், தீயவனுகஇருந்தாலும் அவனை ஏற்று அவனுக்குத் துன்பம் வராமல் காக்க வேண்டும். இராமன் சரணுகதிநாயகன். எனவே, சுக்கிரீவன் தன்னைச் சரணடைந்தபின் அவனை அப்படியே ஏற்று அவனுக்

குள்ள இன்ப துன்பங்கள் இரண்டிலும் தான் பங்கு கொள்ள வேண்டியவனுகின்ருன். இதனுலேயே இராமன்,

''மற்றினி உரைப்பது என்னே வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்ருர் தீயரே எனினும் உன்னேடு
உற்றவர் எனக்கும் உற்ருர் உன்கிளை எனது என் காதற்
சுற்றம் உன் சுற்றம் நீ என் உயிர்த்துணைவன் என்ருன்''

வான்மீகத்தில் இராமனும், சுக்கிரீவனும் தம்முள் நட்புரிமை கொண்டதற்கு அடையாளமாக அக்கினியை வலம் வந்து, சத்தியப் பிரமாணம் செய்து கொள்கின்றனர். அப்படிச் செய்து கொள்ளும் பொழுது, ''உனக்கு நண்பர், எனக்கு நண்பர்; உனக்குப் பகைவர் எனக்குப் பகைவர்' என ஒருவருக்கொருவர் உறுதி செய்து கொள்கின்றனர். இருதரப்பார் ஒப்பந்தம் போல வான்மீகி சொல்வதைக் கம்பன் மாற்றி விடுகிருன். தன் பகைவரைச் சுக்கிரீவனும் பகைவராகக் கொள்ள வேண்டுமென நிபந்தனை விதிக்காமல், ''உன் பகைவர் என் பகைவர்; உன் நண்பர் என் நண்பர்; ஆனுல் என் சுற்றம் உன் சுற்றம்'' என இராமன் சொல்வதாகக் கம்பன் பாடலை அமைத்திருக்கிருன். எனவே, இது சரணுகதியே அன்றி, நட்புரிமைச் சத்தியப்பிரமாணமோ, கூட்டுஒப்பந்தமோ அன்று. ''தீயரே எனினும் உன்னேடு உற்றவர் எனக்கும் உற்றவர்'' எனச் சொல்வது சரணுகதி பாவத்தின் தன்மையை விளக்குவதாகுமேயன்றித் தீயவராய் இருந்தாலும் உன் நண்பர் என் நண்பர் எனச் சொன்னதாகாது. ''தீயரே எனினும்'' என்பதால், ''நல்லவர்'' உனக்குப் பகைவராக இருந்தாலும் எனக்கு அவர் பகைவரே என இதனைத் திரித்துச் சிலர் பொருள் கொண்டுள்ளனர். சரணுகதி பாவத்தை விளக்குவதாகவே இதனைக் கொள்ள வேண்டும்.

வான்மீகம், வாலி வதை உயர்ந்த பண்பொழுக்கத்தின் அடிப்படையில் நிகழ்ந்ததாகக் கூறவில்லை. வாலி இறந்த பின்னர் அவன் மனைவியாகிய தாரையைச் சுக்கிரீவன் தன்

மனைவியாக்கிக் கொண்டான் எனச் சொல்வதால், என்னதான் அமைதி கூறினாலும் வான்மீக வாலிவதம் சிறப்புடைய ஒன்றாக அமையாமற் போகிறது. கம்பனில் தாரை கற்புக் கரசியாக மிளிர்கிறாள். சுக்கிரீவன் தாயென அவளைக் கொள்கிறான். வாலி சுக்கிரீவன் மனைவியைக் கவர்ந்து கொண்டது மன்னிக்கமுடியாத பெருங்குற்றமெனக் கம்பன் கருதுகிறான். கம்பனை வைத்தேதான் வாலி வதையை நாம் நோக்க வேண்டும். வாலி தன்னை வதைத்தது சரியென்று ஒத்துக் கொண்டபின்னர் அதனைப் பற்றி என்ன பேச்சு? என்றோ, அவதாரபுருஷனாகிய இராமனின் செயல் பற்றி ஆராய நமக்கு என்ன உரிமை, என்றோ சிலர் கேட்பதுண்டு. வாலி ஒத்துக்கொண்டது பற்றியோ, பரம்பொருளின் செயல் பற்றியோ நாம் இங்கே ஆராயவில்லை. கம்பனால், வாலி வதை சரியென நாம் ஒப்புக் கொள்ளும்படிச் செய்ய முடிகிறதா, அல்லது தவறென்றே தோன்றுமாறு அவன் செய்துவிட்டானா, என்பதையே நாம் ஆராய்கிறோம். வெற்றி தோல்வி கம்பனுக்கேயன்றிப் பரம் பொருளுக்கு அன்று.

சரணாகதி பாவ அடிப்படையில்தான் கம்பன் இங்கே கதையைத் தொடர்கிறான். யார் சரணாகதி கேட்டாலும் கொடுக்கக் கடமைப் பட்ட இராமன்,சுக்கிரீவனுக்குச் சரணாகதி கொடுத்து விடுகிறான். சரணாகதி அடைந்தவன் தன் துன்பங் களையும், விருப்பங்களையும் கூற உரிமையுண்டு. ஆனால் சரணாகதி ஏற்றவன் அவற்றின் நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு சொன்னால் சரணாகதி அடைந்தவன் ஏற்றுக் கொள்ள வேண்டுமேயன்றி மறுக்கக் கூடாது. இங்கே இராமன் சரணா கதியை ஏற்றுக் கொண்டதும், சுக்கிரீவனிடம்

“உன்பகைவர் என் பகைவர், உன் நண்பர் என் நண்பர்”

என்று சொன்னானே யொழிய, வாலியைக் கொன்று அரசுரிமை தருவதாகச் சொல்லவில்லை. சரணாகதியை ஏற்றுக்

கொண்டதாகவே தெரிவிக்கிருன். பகைவணுகிய வாலியைச் சமாதான முறையில் வழிக்குக் கொண்டுவர இந்தச் சரணகதி இடையூருக நிற்கவில்லே. சுக்கிரீவன் இது சமயம் '' நீ வாலியைக் கொல்ல வேண்டும்', என்று கேட்கவுமில்லே' சரணகதியை ஏற்றுக் கொண்டதன் மூலம் தனக்கொரு பாது காப்பு வந்து விட்டது என்னும் அளவில் அவன் மகிழ்கிருன்.

அநுமன் வேண்ட, இராம இலக்குவர் இருவரும் சுக்கிரீ வனின் இருக்கை சேர்கின்றனர். அங்கே விருந்து நடை பெறுகிறது. சுக்கிரீவன் மனேவியின்றித் தனியே விருந்து பரிமாறுவதைக் கண்ட இராமன்,

''விருந்துமாகி அம்மெய்ம்மை அன்பிஞேடு
இருந்து நோக்கி நின்று இறைவன் சிந்தியாப்
பொருந்து நன்மனேக்குரிய பூவையைப்
பிரிந்துளாய் கொலோ நீயும் பின்'' என்ருன்?

''மனேவியை நீயும் என்போலப் பிரிந்திருக்கிருயோ?'' என்பது இராமன் விஞ. ''நீயும் பின்'' என்பது ஒரு நயம். ''தன்முன்'' என அண்ணனேக் கம்பன் அயோத்தியா காண் டத்தில் சுட்டுகிருன். இதுபோல இங்கே, ''பின்'' என்பது '' பின்னவனே '' அதாவது ''என் தம்பியே'' என்று பொருள் படும். '' குன்றில் வாழ் மைந்தனுேடு அறுவரானேம் '' என்பது இங்கே பெறப்படுகிறது. தன் மனேவியின் நிலே பற்றித் தானே சொல்லச் சுக்கிரீவன் நாணுகிருன். அநுமனேத் தவிரச் சொல்வதற்கு வேறு ஆள் இல்லே. அநுமன் எழுந்து இருகை கூப்பி வாலி பற்றிய விவரங்களே இராமனிடம் கூறத் துவங்குகிருன். வாலியை இராமனுக்கு முன்னமே தெரியாது. இப்போது அநுமன் சொல்லும் விவரங்களேக் கொண்டுதான் அவனே இராமன் கணிக்க வேண்டும்.

வாலி நான்கு வேதங்களுக்கும் வேலியாக இருக்கிருன் என்று அநுமன் தெரிவிக்கிருன். பெரிய சிவபூசகன் என்றும் வரம்பிலாத ஆற்றலுடையவன் என்றும், ஒவ்வொரு நாளும்

எட்டுத் திக்கின் எல்லையிற் சென்று சிவபெருமானை வணங்கி வருபவன் என்றும், அவன் மார்பில் முருகவேள் வேல் செலாது என்றும் கூறுகிருன். தேவர்களுக்காக மந்தர கிரியைக் கடைந்து அவர்களுக்கு அமிர்தம் ஈந்த வள்ளன்மை யையும் எடுத்துக் கூறுகின்ருன். எமனும் வாலிக்கு அஞ்சு வான் என்றும் கூறுகிருன். எழுபது வெள்ளம் வானர சேனையும் அவன் ஆட்சியில் மரணபயம் இன்றி வாழ்கின்றது என்றும் தெரிவிக்கின்ருன். அநுமன் வாலியைப் பற்றிச் சொன்னவை அவன் புகழைத் தூக்கிக் காட்டுகின்றனவே யல்லாமல் இறக்கிக் காட்டவில்லை. சொல்லிவரும் பொழுது ஒரு செய்தியைத் தெரிவிக்கிருன். அது வருமாறு:-

"கிட்டு வார்பொரக் கிடைக்கின் அன்னவர்
பட்ட நல்வலம் பாகம் எய்துவான்
எட்டு மாதிரத்து இறுதி நாளும் உற்று
அட்ட மூர்த்திதாள் பணியும் ஆணையான்."

இப் பாடலில்தான் வாலி வதையின் மர்மமே அடங்கி யிருக்கிறது. வாலிக்கு நேரே நின்று அம்பெய்தால் பாதிப் பலம் போய்விடும் என்று அஞ்சியே இராமன் ஒளிந்து நின்று கொன்ருன் எனக் கருதிக் கொண்டு அப்படி ஒளிந்து நின்று கொன்றது சரியா, எனத் தமிழ்நாட்டில் பன்னெடுங்காலமாக வாதம் நடைபெற்று வருகிறது. வாலிக்கு நேரே வந்து நின்ருல் பாதிப்பலம் போய்விடும் என்று இப்பாடலில் சொல்ல வில்லை. பாதிப்பலம் போகும் என்னும் தவருன கருத்தை மனத்தில் வைத்துக் கொண்டே, இராமன் ஒளிந்து நின்ற நிகழ்ச்சிக்கு அமைதி காண முயன்ற ஆராய்ச்சி யாளர்கள் இதுவரை மூன்றே மூன்று சமாதானங்கள்தாம் சொல்லியிருக்கின்றனர். வாலி வதை பற்றி அண்மையில் வந்த திறனாய்வுகள் கூறும் சமாதானங்கள் பின்வருமாறு:—

1) வாலி கொடியவன்; கொல்லப்படவேண்டியவன்; கொல்லப் பட வேண்டியவனை எப்படிக் கொன்ருல்தான் என்ன? பாம்பை மறைந்து நின்று அடித்துக் கொல்ல

வில்லையா? கொலைசெய்தவனை முகமூடியிட்டுத் தூக்கிலிடவில்லையா? பின்புறம் இருந்து தூக்குக் கயிற்றை இழுக்கவில்லையா? 60 மைல்வேகத்தில் செல்லும் கள்ளக்கடத்தல்காரனை 80மைல் வேகத்தில் சென்று காவல் துறையினர் பிடிக்கவில்லையா? இதுபோல்தான் இராமன் வாலியை மறைந்து நின்று கொன்றான். கொடியவனை எப்படி வேண்டுமானாலும் கொல்லலாம்.

2) வாலி வரச்சூழ்ச்சி பெற்றவன். எதிர்நின்றார் பலத்தில் பாதி பெற்றுக்கொள்ளக்கூடியவன். அவனை நேர்நின்று கொல்லமுடியாது. பாதிப்பலம் வாங்கிக் கொள்கின்ற சூழ்ச்சி வரம் பெற்றவனைச் சூழ்ச்சியால்தான் கொல்ல வேண்டும். தந்திரத்தால் கொல்வது போரில் அனுமதிக்கப்பட்ட ஒன்றேயாகும். எதிரி வரத் தந்திரத்தைக் கையாளும் போது இராமனும் ஒளிந்து நின்று கொல்வதாகிய ஒரு தந்திரத்தைக் கையாள்வது தவறாகாது.

3) வாலி இந்திரனுடைய கூறு. இராவணனுக்கு எதிராக வேலைசெய்ய வேண்டிய அவன் இராவணனோடு கூட்டு சேர்ந்து கொண்டான். நடிக்க வந்த நடிகன் மாறி நடிக்கத் தொடங்கினால் உள்ளேயிருக்கும் இயக்குநர் அவனைப் பின்னிருந்தவாறே இழுத்து நாடக அரங்கத்தினுள் அடங்கி விடுமாறு செய்வதுபோல, இராமனும் வாலியை ஒளிந்திருந்து கொன்று தேவலோகத்திற்கு அனுப்பி விட்டான்.

இம்மூன்று சமாதானங்களும் நம் மனத்திற்கு நிறைவளிப்பதாகாது. கொடியவனை எப்படிக் கொன்றால்தான் என்ன என்பது ஒரு தவறான வாதமாகும், ''பொய் சொல்பவனை நாமும் பொய் சொல்லி ஏமாற்றலாம்'', என்பது நல்லோர் கருத்தாகாது. ''கொடுமைக்குக் கொடுமை; சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி'' என்பது அற நூற்கொள்கை அன்று. கீழே உள்ள ஒருவன் இலஞ்சம் வாங்குவதற்காக மேலே உள்ள

ஒருவனும் இலஞ்சம் வாங்கலாம் என்பதை நாம் ஒப்புக்கொள்வோமா? வாலி கீழானவன்; இராமன் மேலானவன். கீழானவன் செய்கின்ற செயலைப்போல மேலானவனும் செய்தால் அப்புறம் அவனுக்கும் இவனுக்கும் என்ன வேற்றுமை? இராவணன் சீதையை வஞ்சித்து எடுத்துச் சென்றான். அது போல அசோகவனத்திலிருந்து சீதையை வஞ்சகமாகத் தோளில் எடுத்துச் செல்ல அநுமன் எண்ணுகிறான். அதற்குச் சீதை

"வஞ்சித்த நாயவன், நின்ற வஞ்சனை
நீயும் நினைத்தியோ?" என விடையிறுக்கிறாள்.

''இராவணன் வஞ்சனை செய்ததற்காக நீயும் வஞ்சனை செய்தால் பிறகு உனக்கு என்ன பெருமை?'' என்பதே சீதையின் கேள்வி. இதேபோல்தான் வாலி கொடியவன் என்பதற்காக இராமன் வஞ்சனைசெய்து கொல்வது அவனுக்குப்பெருமை தராது. போரில் சூழ்ச்சி, தற்காப்பிற்கு மட்டும்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எதிரியைக் கொல்லும்பொழுது நீதி முறைகளைப் கடைப்பிடிக்க வேண்டுமெனப் போர் அற நூற்கள் தெளிவாகக் கூறுகின்றன. வரச் சூழ்ச்சிக்காக இராமனும் ஒரு சூழ்ச்சியைக் கையாண்டு கொல்கிறான் எனச் சொல்வது இராமனை மிகவும் கீழான நிலைக்குக் கொண்டு போய்விடும். துணிவுடையார் பாம்பை நேர்நின்று அடிப்பதைப் பார்க்கிறோம். முகமூடி போட்டுக் கொல்வது ஒரு புதுமையான வாதம். கொலை செய்தவனுக்கு அஞ்சி, சிறையதிகாரி அவனுக்கு முகமூடி போடுவதில்லை. கொலைசெய்தவன் பயப்படாமல் இருப்பதற்கே முகமூடிபோடப்படுகிறது. நேர் நின்று தூக்குக்கயிற்றை இழுத்தால் கொலையாளியின் உள்ளத்தில் பெரும்பயம் தோன்றும் என்று கழிவிரக்கம் கொண்டே பின்புறம் நின்று தூக்குக்கயிற்றை இழுக்கின்றனர். இங்கே வாலி பயப்படுவான் என்று இராமன் ஒளியவில்லை. வாலியின் வரபலத்திற்கு அஞ்சி ஒளிகின்றான் என்று சொல்லப்படுகிறது. எனவே முகமூடி உவமை சிறிதும் பொருந்தாமற் போகிறது.

இந்திரனுகிய வாலி தவருக நடக்கிருன் என்பதற்காக அவனைப்பின்புறம் இருந்து இழுப்பது நியாயம் என்ருல் அறத்தை நிலைநாட்டுவதற்காக வந்த இராமன் அதற்கு மாருக ஒளிந்து நின்று கொல்லும்பொழுது அவனையும் பின் புறம் இருந்து இழுத்தாகவேண்டும் என்று சொல்வார்க்கு என்ன விடையிறுப்பது? நம் வீட்டிற்குள் புகுந்து ஒருவன் திருடினுன் என்பதற்காக நாம் அவன் வீட்டில் போய்த் திருட முடியாது. திருடினுல் நமக்கும் தண்டனை உண்டு. வாலியின் கொடுமைக்குத் தண்டனை என்ருல் சூழ்ச்சியால் கொன்ற இராமனுக்கும் தண்டனை உண்டென்று சொல்ல வேண்டி யிருக்கிறது. கள்ளக் கடத்தல்காரன் அறுபது மைல் வேகத்தில் செல்லும்பொழுது அவனை எண்பது மைல் வேகத்தில் சென்று காவல் துறையினர் பிடிப்பது நியாயமே என நமக்குத் தோன்று கிறது. நெருப்பு அணைப்போரும், திருடனைப் பிடிக்கச் செல் வோரும் வேகக்கட்டுப் பாட்டிற்குரிய சட்டதிட்டங்களுக்கு உட்பட வேண்டுவதில்லை என விதி உண்டு. எனவே, அதிகாரி விதியை மீறினுர் எனச் சொல்ல வராது. அறுபது மைலுக்கு எண்பது மைல் என்பது போல வாலியின் வரபலத்திற்கு மேலான வேருெரு வரபலம் பெற்று அவனைக் கொன்றிருந்தால் நியாயம் என்றே நமக்குத் தோன்றும். விரைந்து செல்லும் கள்ளக்கடத்தல்காரன் தெருவில் நடந்து செல்லும் ஒருவனைப் பாராமல் அடித்துவிட்டுச் சென்ருல், காவல் துறையினரும் அது போல ஒருவனை அடித்துவிட்டுச் செல்வது நியாயம் ஆகுமா? வாலி வரச் சூழ்ச்சி பெற்றவன் என்பதற்காக அவனை வதை செய்வதற்கு எண்ணும் இராமன், தானும் ஒரு சூழ்ச்சி செய்து போர் அறத்தைச் சிதைப்பது பொருத்தமாகுமா? வர பலம் பெற்ற ஒருவனைப் பின் எப்படித்தான் கொல்வது எனக் கேட்கலாம். அறக் கடவுள், இத்தகைய தீயவனை மற்ருெரு தீயவனின் சூழ்ச்சியால் இறந்துபடும்படிச் செய்துவிடுவான். இதற்காக நல்லோர் சூழ்ச்சியைக் கையாள்வது அறமாகாது.

பதிலுக்குப் பதில் எதுவும் செய்யலாம் என்றும், அது ஒரு வகையில் நியாயமே என்றும் தற்போது நம் நாட்டில் ஒரு

பயங்கரக் கருத்து பரவிவருகிறது. திருனைய்வாளர்கள் தம் சாமர்த்தியமான வாதங்களால் இக் கருத்தைச் சரி என நிறுவ முயல்வதாலேயே அவர்கள் கூறும் மூன்று சமாதானங்களும் பொருத்தமற்றவையாகப் போகின்றன. வாலியின் முன் நின்ருல் பாதிப்பலம் போகும் என்னும் தவருன ஒரு கருத்தை வைத்துக்கொண்டு சமாதானம் கூறப்புகுந்தால் இந்த இடர்ப்பாடுகள் தோன்றவே செய்யும்.

அநுமன் கூறுகின்ற ''கிட்டுவார் பொரக் கிடைக்கின்'' என்னும் பாடல்தான் வாலியின் வரபலத்தைப் பற்றி முதன் முதல் சொல்லும் பாடல் ஆகும். அப்பாடலைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். கிட்டுவார்பொர—போர் செய்வதற்காகத் தன்னை நெருங்கி வருவார், கிடைக்கின் — தம் பிடிக்குள் கிடைத்து விட்டால் – அதாவது அகப் பட்டுக் கொண்டால், அன்னவர் பட்டநல் வலம் - அவர் கள் பொருந்திய நல்ல பலத்தில், பாகம் எய்துவான் — பாதிப்பலம் பெறுவான் என்பது அப்பாடலடிகளின் பதவுரை ஆகும். ''போர்செய்ய யாரும் தன் எதிரில் வந்தால்'', எனச் சொல்ல வேண்டுமானுல், ''கிட்டுவார் பொர'' என்ருலே போதும்; அது எதிரிகள் கிடைத்து விடுகிருர்கள் என்பதையும், போர் செய்ய நெருங்குகிருர்கள் என்பதையும் தானே புலப்படுத்தும். அப்புறம், ''கிடைக்கின்'' என்று சொல்லத்தேவையில்லை. இதனுல் ''கிடைக்கின் என்பதற்கு ஒரு தனிப்பொருள் இருக்க வேண்டும். வாலியோடு நெருங்கிப் போரிட்டு அவன் பிடிக்குள் அகப்பட்டால்தான் பாதிப்பலம் போகும் என்பதைத் தெளிவுறுத்தவே அநுமன் ''கிடைக்கின்'' என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிருன். ''கிட்டுவார்'' என்பது வாலியோடு மற்போர் செய்பவரைக் குறிக்குமேயன்றி, எட்டியிருந்து விற்போர் செய்பவரைக் குறிக்காது. விற்போர் செய்பவரிடத்தும் வாலி பாதிப்பலம் பெறவேண்டுமானுல், அவர்மீது பாய்ந்து பிடித்துத் தன் பிடிக்குள் அகப்படுத்த வேண்டும் என்பதுஇதனுல் பெறப்படும்.

வாலியோடு இதுவரை போர் செய்தவர்கள் மாயாவி, துந்துபி ஆகிய மற்போர்வீரர்களே ஆவர். இராவணனும் விற்போர் செய்யாமல் பின்புறம் வந்து வாலியின் வாலினைப் பிடித்தான் என்றே சொல்லப்படுகிறது. வாலி எதிரியைத் தன் கைக்குள்ளோ, காலுக்குள்ளோ, வாலுக்குள்ளோ மற் போர் செய்யும்போது அகப்படுத்துவான். அது சமயம் எதிரி யின் பலம் பாதி அவனுக்குப் போகும். வாலியோடு மாயாவி போர் செய்து தப்பி ஓடியதை அநுமன் சொல்லும் போது பின்வருமாறு கூறுகின்றான்;—

"முட்டி நின்றவன் முரண் உரத்தின் நேர்
ஒட்ட-அஞ்சி நெஞ்சு உலைய ஓடினான்
வட்ட மண்டலத்து அரிது வாழ்வெனா
எட்ட ரும்பெரும் பிலனுள் எய்தினான்."

இப்பாடலில் மாயாவி வாலியோடு போய் முட்டும் பொழுது தன்பலம் அவன் பலத்தோடு ஒட்டுவதைக் கண்டு அஞ்சி ஓடுகிறான் எனக் கூறப்பட்டுள்ளது. தன் பலத்தில் பாதி வாலிக்குப் போய்ச் சேர்ந்து விடக்கூடாது என்பதற்காகவே அவன் நெருங்காமல் அதாவது அவன் பிடிக்கு எட்டாமல் நெஞ்சுலைய ஓடுகிறான். இது வாலியின் பிடிக்குள் அகப்பட்டால் தான் பாதிப்பலம் போகும் என்னும் உண்மையை இனிது புலப்படுத்துகிறது. பிலத்துக்குள் சென்ற மாயாவியோடு வாலி 28 மாதங்கள் போரிட்டுக் கொன்றான் என்பது பிழை யாகும். வாலி கையில் மாயாவி அகப்பட்டிருந்தால், அவன் பலம் பாதி போயிருக்குமாதலால், உடனே கொன்றிருப்பான். மாயாவி பிலத்துக்குள் ஒளிந்து கொண்டதால் அவனைக் கண்டுபிடிக்க முடியாமல் 28 மாதங்கள் வரை வாலி அவனைத் தேடிக் கொண்டிருந்திருக்கின்றான்.

"ஏகி வாலியும் மிருது வேழொடேழ்
வேக வெம்பிலந்தடவி வெம்மையான்
மோக வென்றிமேன் முயல்வின் வை கிடச்
சோக மெய்தினன் துணை துளங்கினான்".

"வெம்பிலந்தடவி'' என்பதிலிருந்து வாலி மாயாவியைப் பிலத்தினுள் தேடிக் கொண்டிருந்தான் என்பது பெறப்படும்.

தனக்குப் பாதிப் பலம் போனதை இராவணனே,

''அரங்கில் ஆடுவாற்கு அன்புபூண்டு உடைவரம் அறியேன்
இரங்கி யான் நிற்ப, என் வலி அவன் வயின் எய்த
வரம்கொள் வாலிபால் தோற்றனென; மற்றுவேறுள்ள
குரங்கெலாம் எனை வெல்லும் என்று எங்ஙனம் கோடி''

எனக்கூறுகிறான்.

இது இராவணன் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும் பாடலாதலால் உண்மையென்றே கொள்ளவேண்டும். மேலும், இராவணன் அளவற்ற பலமுடையவன். கைலையங்கிரியையே தூக்கியவன். அவனோடு சிறிது நேரம்கூடப் போராடாமல் வாலி உடனே தன் வாலினால் இறுகப் பிணித்துவிட்டான் என்று சொல்லப்படுகிறது. இராவணனின் பலம் பாதி போகாமல் இருந்தால் அவனை இவ்வளவு எளிதாகப் பிணித்திருக்க முடியாது. வாலினால் இராவணனை இறுகப் பிணித்த செய்தியைக் கம்பனும் பலவிடங்களில் கூறுகின்றான். அநுமன் இராவணனைச் சந்தித்த போது, ''வாலி வலியன் கொல்?'' என்று இராவணன் வினவுகின்றான். அதற்கு விடையாக அநுமன், ''வெம்சின வாலி மீளான் வாலும் போய் விளிந்த தன்றே'' என்று கூறுகின்றான். வாலினால் வாலி இராவணனை எளிதாகக் கட்டி இருந்தமையால்தான் இவ்வாறு அநுமன் நகையாடிச் சொல்ல முடிந்திருக்கிறது. இராவணன் வாலியாற் கட்டுண்ட கதை விரிவாக உத்தரகாண்டத்தில் பேசப் பட்டிருக்கிறது. கம்பன் இதனை விரிவாகச் சொல்லாவிட்டாலும் வாலினால் கட்டப்பட்ட செய்தியைக் குறித்தே இருக்கிறான். எளிதாகக் கட்டப்பட்டான் என்றே கம்பன் வாக்கு சுட்டுவதால் பின்புறம் வந்த இராவணன் பாதிப்பலம் இழந்திருக்கிறான் என்பது உண்மையாகிறது. இராவணன்தானே

சொல்லிக் கொள்கின்ற கூற்றைத் தள்ளினாலும் அவன் பின் புறம் வந்தான் என்னும் செய்தியையும், எளிதில் கட்டப் பட்டான் என்னும் செய்தியையும் கம்பன் வாக்கைக் கொண்டே நோக்கும்பொழுது இராவணன் பாதிப்பலம் இழந் திருக்கிறான் என்பது தெளிவாகிறது. இதிலிருந்து எதிரே வந்தால்தான் பாதிப்பலம்போகும் என்னும் வாதம் அடிபட்டுப் போவதால், ''முன்னேவருதல், பின்னே வருதல்'' என்பது வாலி இடத்தே முக்கியமில்லை என்றாகிறது.

இராவணன் பலம் பின்புறம் வந்தபொழுது எப்படிப் பாதி போயிருக்கும்? அநுமன் வாக்கைக் கொண்டுதான் நாம் இதனைத் தெளிய வேண்டியிருக்கிறது. ''கிட்டுவார் பொரக் கிடைக்கின்அன்னவர் பட்ட நல்வலம் பாகம் எய்துவான்'' என்பதால் வாலியின் வாலுக்குள் இராவணன் அகப்பட்டுக் கொண்டு பாதிப்பலம் இழந்திருக்கிறான் என்பது புலனாகிறது. ''கிடைக்கின்'' என்ற சொல்லால் வாலியின் கைக்கோ, வாலுக்கோ, காலுக்கோ எதிரி கிடைத்துப் பிடியுண்டால் தான் அவன் பாதிப்பலம் பெறுவான் என்பது பெறப்படும். அநுமன் சொல்லைக் கொண்டு பார்த்தால்தான் பின்புறம் வந்த இராவணன் பாதிப்பலம் இழந்த காரணம் புலப்படும். இல்லையேல் அது புதிராகவே இருக்கும்.

வாலியின் கண்ணுக்குத் தெரிய வருதல் பற்றி அநுமன் சொன்ன பாடலில் எதுவும் பேசப்படவில்லை. முன்னே வந்தா லும், பின்னே வந்தாலும் வாலி பார்த்து விட்டால் பாதிப் பலம் போகும் என்றால், 'கிட்டுவார் பொரக்கிடைக்கின்' என்று கூறாமல் ''கிட்டுவார் பொரப்பார்ப்பின்'' என்று கூறியிருக்க வேண்டும். ''கிடைக்கின்'' என்று சொல்லுவதால் அது பிடிக் குள் அகப்படுவதையே குறிக்கும்.

வாலியின் வரபலத்தைப் பற்றிக் கம்பராமாயணத்தில் மூன்றே பாடல்கள்தாம் உள்ளன. ஒன்று ''கிட்டுவார் பொரக்

கிடைக்கின்'' என்பது, இதனை அநுமன் சொல்லியிருக்கிறான். இதுபற்றி மேலே ஆராய்ந்தோம். ஏனைய இரண்டு பாடல்கள்:

"பேதையர் எதிர்குவர் எனினும் பெற்றுடை
ஊதிய வரங்களும் உரமும் உள்ளதிற்
பாதியும் என்னதாற் பகைப்பது எங்ஙனம்
நீதுயர் ஒழிக என நின்று கூறினன்."

''நீல கண்டனும் நேமியும் நேர்நின்று பொரினும்
ஏலும் அன்னவர் உடையவலி அவன் வயின் எய்தும்
சால அன்னது நினைந்து அவன் எதிர்செலல் தவிர்ந்து
வாலிதன்னை அம்மனிதனும் மறைந்து நின்று எய்தான்.''

''பேதையர் எதிர்குவர் எனினும்'' என்னும் பாடலை ஆய்வோம். இப்பாடல் வாலியின் கூற்று. 'பேதையர் எதிர்குவர் எனின்'' எனச் சொல்லாமல் "எனினும்'' என ஓர் உம்மையும் சேர்த்து வாலி சொல்லுகிறான். அந்த உம்மைக்குப் பொருள் வேண்டும். ''பேதையர் எதிர்குவர்'' எனின் என்று சொல்லியிருந்தால், ''அறிவில்லாதவர் என் முன்னே வந்து தோன்றினால்'' எனப் பொருள் கொள்ள ஓரளவு இடமுண்டு. அங்ஙனமின்றி, ''எனினும்'' என உம்மை சேர்த்துச் சொல்வதால் வாலி தான் முன் சொன்ன ஒரு கருத்தையே தொடர்ந்து பேசுகிறான் என்பது தெளிவு. இப்பாடலுக்கு முன்னுள்ள பாடல் பின்வருமாறு;-

''ஆற்றினெ னமரரு மவுணர் யாவரும்
தோற்றன ரெனையவர் சொல்லற் பாலதோ
கூற்றமென் பெயர் சொலக் குலையும் ஆல்இனி
மாற்றவற் காகி வந்தெதிரு மாண்பினோர்"

"மாற்றவருக்கு ஆகி வந்து எதிரும் மாண்பினோர்'' என்னும் அடியைத்தழுவியே 'பேதையர் எதிர்குவர் எனினும்' என்னும் அடியில் உள்ள உம்மை உள்ளது. ''மாற்றவருக்காகி வந்து எதிரும் மாண்பினோர்'' என்பது" பகைவனாகிய சுக்கிரீவனுக்குத் துணையாக வந்து எதிர்க்கும் தன்மையோர்'' என்றே

பொருள்படும். வந்து என்பது நேரில் வரல் என்றுபொருள் படாது. துணையாக வந்து என்றே பொருள்படும். ஏனெனில் சுக்கிரீவனுக்குத் துணை வந்திருக்கிறதெனத் தாரை கூறுகிருள். அவளுக்கு விடையாகவே, அவனுக்குத் துணையாக வந்து என்னை எதிர்க்கக்கூடியவர் யார் என வாலி கூறுகிருன். ஒருவேளை அறிவில்லாதவர் எவரேனும் அவனுக்குத் துணையாக வந்து எதிர்ப்பார்களேயானுல் அவர்கள் பெற்றுள்ள வரங்களிலும், பலத்திலும் பாதி என்னதாகிவிடும் என்று வாலி "பேதையர் எதிர்குவர் எனினும்'' என்னும் பாடலில் தெரிவிக்கிருன். ''எதிர்குவர் '' என்பது எதிர்ப்பவர் என்று பொருள் தருமேயன்றி எதிரே வந்து தோன்றுபவர் என்று பொருள் தராது. 'எதிர்குவர்' என முதலடியில் வரும் சொல்லுக்கு எதிர்ப்பவர் என்றே பொருள் என்பதைப் 'பகைப்பது எங்ஙனம்' என மூன்ருமடியில் வரும் தொடர் தெளிவுபடுத்துகிறது. 'எதிர்குவர்' என்பது எதிரே வருபவர் என்லும் பொருளில் வந்தால் வாலி, பகைப்பது எங்ஙனம் என்று கூருமல் வருவது எங்ஙனம் என்று கூறியிருப்பான். எதிர்ப்பவர் என்னும் பொருளில் எதிர்குவர் என்னும் சொல்லை அவன் பயன்படுத்துவதால்தான் பகைப்பது எங்ஙனம் என்று கூறுகிருன். பகைப்பவர் எதிரேயும் வருவர், மறைந்தும் எதிர்ப்பர். ''எப்படி வந்தாலும் எதிர்ப்பு வரும் திசையறிந்து பாய்ந்து பலத்தில் பாதி வாங்குவேன்'' எனச்சொன்னுல்தான் தாரைக்கு நிறைவு உண்டாகும். எதிரே வந்து தோன்றினுல் தான் பாதி பலம் வாங்குவேன் என்ருல் ''சுக்கிரீவன் தனியே வந்துதான் கூவுகிருன். அவன் துணைவர்கள் மறைந்து நின்று எதிர்த்தால் என் செய்வது?'' என்று தாரை கேட்கவே செய்வாள். பகைப்பவர் யாராயிருந்தாலும் அவர் எதிரே வந்தாலும் மறைந்து வந்தாலும் பாய்ந்து பாதிப்பலம் வாங்குவேன் என்னும் பொருளில் ''எதிர்குவார்'' என்னும் சொல்லை அவன் பயன்படுத்தியிருப்பதால் தான், தாரை அதுபற்றி மேலும் கேட்கவில்லை. எதிர்ப்பவர் பலத்தையும், வரத்தையும் எப்படி வாலி பாதி பெறுவான் என்பதைக் ''கிட்டுவார் பொரக்கிடக்கின்'' என்னும்

அநுமன் கூற்றுத் தெளிவு செய்கிறது. அக்கூற்றை ஒட்டியே ‘பேதையர்எதிர்குவர் எனினும்’ என்னும் பாடலுக்குப் பொருள் செய்ய வேண்டும். முரணுகப் பொருள் கொண்டால் கவிக் குற்றம் வரும். வாலி எதிரியை அகப்படுத்திப் பலத்தைப் பாதி வாங்கும்போது. அந்த எதிரி பெற்ற வரம் அதற்கு மாருனதாக இருந்தால் இடர்ப்படும் என்பதற்காகவே அவனுக்கு வரம் வழங்கிய தெய்வம், பலத்தை அவன் பாதி பெறும் சமயம் வரத்திலும் பாதி பெறும்படி அருள் செய்திருக் கிறது. வாலியின் வரபலம் இந்த அளவுதான் என்பதை இவ்விருபாடல்களும் இனிது புலப்படுத்துகிறன.

தாரை, சுக்கிரீவனுக்குத் துணையாக ‘உற்றது நெடுந்துணை’ என முதலில் கூறுகின்ருளே யன்றி இராமன் துணையாக வந்திருக்கிருன் என்று கூறவில்லை. சுக்கிரீவனுக்குத் துணை வந்திருக்கிறது என்று சொன்னதற்கு விடையாகத்தான் வாலி, ‘‘பேதையர் எதிர்குவர் எனினும்’’ என்னும் பாடலைக் கூறுகிருன். அதனைக் கேட்ட பின்னரே, தாரை இராமன் துணையாக வந்திருக்கின்ருள் எனத் தெரிவிக் கின்ருள். வாலி, ‘‘பிழைத்தனை பாவி உன் பெண்மையால்’’ எனச்சினக்கிருன். “உன் பெண்மைத் தன்மைக்கு ஏற்ற பேதைமையால் அறத்தின் நாயகனுக விளங்கும் இராமன் சுக்கிரீவனுக்குத் துணையாக வந்திருக்கிருன் என்று சொல் கிருய்; அவன் அப்படி வரக்கூடியவன் அல்லன்’’ என வாலி தாரைக்குத் தெளிவு படுத்துகிருன். ‘பிழைத்தனை’, என் னும் சொல் ‘பிழை செய்தாய்’ என்னும் பொருள் தருவதோடு ‘‘இராமனையா இப்படிச் சொல்கிருய்? இவ்வாறு வேறு யாரும் சொல்லியிருந்தால் வெட்டிக்கொன்றிருப்பேன்; நீ பெண்ணுத லால் பிழைத்துக் கொண்டுவிட்டாய்’’ என இராமனிடத்துத் தான் கொண்ட அளவற்ற ஈடுபாட்டினை வாலி வெளிப்படுத்து கிருன் என்ற உள் பொருளையும் தருகிறது. இவ்வாறு சொன்ன பின்னர், மேலும் சொல்கிருன்,

good.

"நின்ருபே ருலகெலா நெருக்கிநேரினும்
வென்றி வெஞ் சிலையலாற் பிறிது வேண்டுமோ
தன் றுணை யொருவரும் தன்னில் வேறிலான்
புன்ருெழிற் குரங்கொடு புணரு நட்பனே"

"உலகம் எல்லாம் ஒன்று சேர்ந்து எதிர்த்தாலும் அவனுடைய வில்லைத் தவிர வேறு உதவி அவனுக்கு வேண்டுமோ?" என வாலி கேட்கிருன். "உலகெலாம்" என்று அவன் கூறும்பொழுது அவனையும் அது உட்படுத்தியதாகத் தானே இருக்கவேண்டும்? அப்படியானுல், இராமனை அவன் வெல்ல முடியாது என்பதுதானே பொருள் ? அடுத்து,

"தம்பிய ரல்லது தனக்கு வே றுயிர்
இம்பரி னிலதென வெண்ணி யேய்ந்தவன்
எம்பியும் யானு முற்றெதிர்ந்த போரிடை
அம்பிடைத் தொடுக்குமோ அருளின் ஆழியான்"

என்று கூறுகிருன். "யானும் என் தம்பியும் செய்கின்ற போரில் அவன் அம்பு தொடுப்பானே? கருணையங் கடலாகிய அவன் அவ்வாறு செய்ய மாட்டான்" என்கிருன். இவ்விடத்தில் வாலி இராமனின் கருணையை நம்பிப் பேசுகிருனே யன்றித் தன் வலிமையை நம்பிப் பேசவில்லை. இராமன் அம்பு விடுத்தால் தான் நிற்க முடியாது என்பதால்தானே இவ்வாறு கூறுகிருன்? இல்லையேல், இராமன் அம்பு தொடுக்க மாட்டான், தொடுத்தாலும் அவன் பலத்தில் பாதி எனக்கு வந்துவிடும்" என்றன்ருே அவன் கூறியிருப்பான். "துணைவர் வந்திருக்கின்றனர்" என்று தாரை சொல்லும் பொழுது "அவர் பலத்தில் பாதி வாங்கி விடுவேன்" என மார் தட்டிய வாலி இராமன் வந்திருக்கிருன் என்று அவள் சொன்ன பின்னர் பாதிப்பலம் வாங்கும் தன் ஆற்றல் பற்றிப் பேசாமல் போன காரணம் என்ன? பயந்து நிற்கிற தாரைக்கு இராமன் வந்தாலும் அவன் பலத்தில் பாதி வாங்கி விடுவேன் என்று

சொன்னால்தானே பயம் நீங்கித் துணிவு பெறுவாள்? அப்படிச் சொல்லாமல் கருணையங் கடலாகிய அவன் அம்பு தொடுக்க மாட்டான் என்று ஏன் நைந்து சொல்ல வேண்டும்?

''சுக்கிரீவன் மற்போர் செய்பவன்; அவனுக்குத்துணை யாக வருவோரும் மற்போர் செய்யக்கூடியவரேயாவர். அவர் களை என் பிடியுள் அகப்படுத்திப் பாதிப்பலம் வாங்கி விடு வேன். விற்போர் செய்பவரைத் துணையாகக் கூட்டி வந்தாலும் அவர்கள் அம்பு தொடுக்கு முன் பாய்ந்து பிடித்துப் பலத்தில் பாதி வாங்கி விடுவேன்; ஆனால் இராமனின் வில்லுக்கு யாரும் நேர்நிற்க முடியாது; அவன் அம்பு, வேகமும் வலிமையும் வாய்ந்தது; நான் பாய்வதற்குள் அது விரைந்து என்னுள் பாய்ந்து கொன்றுவிடும். இராமன் அபார ஆற்றல் வாய்ந் தவன்; அவன் கருணையங்கடல் ஆனதால்தான் என்மீது அம்பு தொடுக்க மாட்டான் என நம்புகிறேன்'' என்று வாலி சொன் னதாகத்தானே அவன் கூறும் விடைகள் அமைந்துள்ளன? வேறுவிதமாக இருந்தால் இராமன் பலத்தில் பாதி வாங்கி விடுவேன் என்பதை வாலி சொல்லாமல் இருந்திருப்பானா? இராமனிடத்தில் கொண்ட ஈடுபாட்டால் இதனைச் சொல் லாமல் விட்டு விட்டான் எனச் சமாதானம் சொல்லமுடியாது. ஏனெனில், மயங்கி நிற்கும் தாரைக்கு துணிவு பிறப்பதற் காகவே பேசுகிறான். கருணையங்கடலாகிய இராமன் அம்பு தொடுக்க மாட்டான்; தொடுத்தாலும் பாதிப்பலம் எனக்கு வந்து விடும் என்று சொன்னால்தான் தாரைக்கு அவன் கூறு கின்ற விடை நிறையுடையதாக இருக்கும். எனவே, உண்மை யில் பாதிப்பலம் வரும் என்று இருந்தால் தாரையிடம் அதைச் சொல்லாமல் ஒரு போதும் இருந்திருக்க மாட்டான். வலி மையும் வேகமும் வாய்ந்த விற்போர் வீரனாகிய இராமனிடத்து மற்போர் வரமாகிய பாதிப்பல இழப்பு செல்லாது என்பதா லேயே தாரையிடம் அதனைப் பற்றி அவன் சொல்லவில்லை.

இனி, ''நீலகண்டனும்'' என்னும் பாடலை ஆராய்வோம். இது இராவணன் கூற்று. ''நீலகண்டனாகிய சிவபெருமானும்,

சக்கரப்படையுடையவனுகிய திருமாலும், நேரே வந்து பொருதாலும் அவர்களின் பாதிப்பலம் வாலிக்குப் போய் விடும். இதனை நினைத்துத்தான் இராமனுகிய அந்த மனிதனும் அவன் நேர்செல்லாமல் மறைந்து நின்று அம்பை விடுத்தான்'' என இராவணன், இப்பாடல் வாயிலாகத் தெரிவிக்கிருன். இது இராவணன் தன்னைப்பற்றி சொல்வதன்று; தன்பகைவனுகிய இராமனைப் பற்றிச் சொல்வதாகும். எந்த அளவு இராமனைப்பற்றி அவன் உண்மை பேசுகிருன் என்பதை இப்பாடலுக்கு அடுத்து வரும் பாடல் கொண்டு நாம் எளிதில் தீர்மானிக்கலாம். "நீலகண்டனும் நேமியும்'' என்பது யுத்த காண்டத்தில் இராவணன் மந்திரப்படலம் 108-வது பாடலாகும். இதற்கு அடுத்து வருகிற 109-வது பாடல் பின்வருமாறு இராவணன் பேசுவதாக கூறுகிறது.

''ஊன வில்லுறுத் தோட்டை மா மரத்துள் அம்பு ஒட்டிக்
கூனி சூழ்ச்சியா லரசிழந் துயர் வனங்குறுகி
யானிழைத்திட இல்லிழந் தின்னுயிர் சுமக்கும்
மானுடன் வலி நீயலாது ஆருளர் மதிப்பார்?''

இராமன், சீதையைத் திருமணம் புரிவதற்காக முறித்த வில்லை ''ஊன வில்'' என்று சொல்கிருன். சுக்கிரீவன் இராமனின் வலியைச் சோதிப்பதற்காகத் துளைக்கச் செய்த மராமரத்தினை ஒட்டை "மராமரம்'' என்கிருன். இதிலிருந்து இராமனது வலிமையைக் கேலி செய்யும் நோக்கில் உண்மைக்குப் புறம்பாகச் செய் திகளைத் திரித்து இராவணன் சொல்கிருன் என்பது பெறப்படும். இது போலவே இதற்கு முன்னுள்ள 108 வது பாடலில் சொல்லும் செய்தியும் உண்மைக்குப் புறம்பாகத் திரித்துச் சொன்னதே என்பது தெளிவு. இராமன் மறைந்து நின்று அம்பு எய்தற்குரிய காரணத்தை இலக்குவன்,

''முன்புநின் தம்பி வந்து சரண் புக முறையிலோயைத்
தென்புலத்துய்ப்ப னென்று செப்பினன் செருவில்நீயும்
அன்பினை யுயிருக் காகி யடைக்கல மியானுமென்றி
என்பது கருதி யண்ணல் மறைந்துநின் றெய்த
தென்ருன்.''

என்று கூறுகிருன்.

வாலி சரணுகதியடைந்து விடுவான் என எண்ணியே இராமன் மறைந்து நின்றதாக இலக்குவன் கூறுகிருன். இந்த உண்மையைத் திரித்துப் பலம் பாதி போய்விடுமே எனப் பயந்து இராமன் ஒளிந்ததாக இராவணன் சொல்லு கிருன். இராவணன் சொல்லுவது உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியேயன்றி உண்மையான செய்தி அன்று என்பது இதனுல் புலப்படும். இலக்குவன் விடை சரியா? அன்ரு? என்பதைப் பின்னர் ஆராய்வோம். இலக்குவனைப் பற்றி என்ன சொன்னுலும் அவன் பொய் சொல்லுவான் என்று மட்டும் சொல்லச் சிறிதும் இடமில்லாமலே கம்பன் தன் காவியம் முழுவதும் பேசியிருக்கிருன். சிறிது சந்தேகங் கூட நமக்கு வரக்கூடாது என்பதற்காகவே இதே கிட்கிந்தா காண்டத்தில் இலக்குவன் அநுமனிடம் பேசுகின்ற இடத்தில்,

''யாரென விளம்பு கேனு னென்குலந் தலைவற் கும்மை
வீரநீர் பணித்தி ரென்ருன் மெய்மையின் வேலி
போல்வான்
வார்கழ லிளைய மைந்தன் மரபுளி வாய்மை யாதும்
சோர்வில னிலைமை யெல்லாந் தெரிவுறச்
சொல்லலுற்ருன்.''

என்று கம்பன் கூறுகின்ருன்.

''வாய்மை யாதும் சோர்விலன்'' என்பது இலக்கு வனைப் பற்றிய கம்பன் கூற்று. வாய் தவறியும் பொய் சொல்லமாட்டான் என்பது இதன் பொருள். எனவே அவன் பொய் சொல்லமாட்டான் அல்லது பொய் சொல்லுமாறு கம்பன் அவனைச்செய்யமாட்டான் என்பதுதெளிவு. இராவணன் பேச்சு பொய்மை உடையது என்பதை ''ஊனவில்லிறுத்து'' என்னும் பாடல் தெளிவு செய்வதால் எதிரில் வந்தால் பலம் பாதி போய்விடுமே என இராமன் எண்ணி மறைந்து நின்று அம்பு எய்தான் என இராவணன் சொல்லுவதும் பொய்யே என்பதைக் கூற வேண்டுவதில்லை, ''எதிர்செலல்'' தவிர்ந்து என்று அவன் சொல்வதால் பின்புறம் சென்று அம்பெய்தான்

என நாம் எண்ணும்படியாக அவன் கூற்று அமைந்திருக்கிறது. ஆனால் இராமன் எதிரே தான் நின்றான். எதிரே நின்றதால்தான் வாலியின் மார்பு நோக்கி அம்பு எய்ய முடிந்தது. இராவணன் ''எதிர் தோன்றுதல் தவிர்ந்து'' என்று சொல்லியிருந்தால் ஓரளவு பொருத்தமாயிருக்கும். 'எதிர் செலல் தவிர்ந்து' என்பதால் பின்புறம் சென்று அம்பு எய்தானோ? என்று ஐயப்படும்படி அவன் பேசுகிறான். இதிலிருந்து அவன் பேச்சில் நேர்மையில்லை என்பது தெளிவாகும். இராவணன் கூற்று உண்மைக்கு மாறான ஒன்றாதலால் அதனை வைத்து ''நேர் வந்தால் பாதிப் பலம் போய்விடும்'' எனச் சொல்வது தவறாகும். இராவணன் கேலியாகப் பேசுகிறான் என்பதை உணராமல் அவன் பேச்சை உண்மை என நம்பித் தமிழ் நாட்டில் உள்ள திறனாய்வாளர் வாலியின் வரபலத்தைத் தெளிவு செய்யப் போனதாலேயே இவ்வளவு தொல்லை உண்டாகியிருக்கிறது. இப்பாடலிலும், "நேர் நின்று பொரினும்'' என இராவணன் சொல்வதால் வாலியோடு நேரே போய்ப் பொருதால்தான் பாதிப் பலம் போகுமே அன்றி, நேரே நிற்பதால் பாதிப் பலம் போகாது என்பது புலனாகிறது. எனவே வாலியின் பிடிக்குள் அகப்பட்டால்தான் பாதிப்பலம் போகும் என்னும் உண்மை மேற்குறித்த மூன்று பாடலுக்கும் ஏற்றதே என்பதே தெளிவு.

அநுமன், வரபலம் பற்றி இராமனிடம் தெரிவித்த பின்னர், நிகழ்ச்சியைத் தொடருகிறான். மாயாவி என்னும் அசுரன் வாலியிடம் சண்டை செய்ய வருகிறான். வாலியோ தன்னோடு பொருதுவார் பலம் பாதி பெறுவான். ஆதலால் தன் பலம், போர் செய்யும்போது வாலியின் பலத்தோடு ஒட்டுவதைக் கண்ட மாயாவி பயந்து ஒரு பிலத்துவாரத்துக்குள் ஓடுகிறான். ''அவனைப் பிடித்துக் கொன்று வருகிறேன்; ஒருவேளை அவன் தப்பி வெளியே வந்துவிட்டால் பிடித்துக் கொன்று விடு'' என்று சுக்கிரீவனிடம் சொல்லிவிட்டு வாலி பிலத்துவாரத்துக்குள் நுழைகிறான். இருபத்தெட்டு மாதங்

னாகியும் வாலி வரவில்லை. மாயாவியைத்தேடிக் கண்டுபிடிப் பதிலேயே பொழுது கழிந்து விடுகிறது. வாலி திரும்பி வராத தைக் கண்ட சுக்கிரீவன் நெஞ்சுலைந்து, ''வாலியை மாயாவி கொன்றிருந்தானுனல் நானும் மாயாவியோடு போரிட்டுச்சாகி றேன்'' எனச் சொல்லிப் பிலத்துவாரத்திற்குள் செல்ல முற் படுகிருன். அப்பொழுது மந்திரிகளும் ஏனைய குரக்கினச் சான் ருேர்களும் அவனைத்தடுத்து, "வாலி இறந்து விட்டானு என்பது தெரியவில்லை; அப்படி இறந்திருந்தானுனல், நாடு அரசனின்றித் தவிக்கும்; நாட்டை ஆளவேண்டிய பொறுப்பு உன்னைச் சார்ந்தது; நீ இருந்து அரசு பரிபாலனம் செய் தல் வேண்டும்'' என வற்புறுத்தி கேட்டுக் கொள்கின்றனர். அவர்கள் வேண்டுகோளுக்கு ஒருவாருகச் சுக்கிரீவன் சம்ம தித்து அரசுரிமையை ஏற்றுக் கொள்கிருன். அநுமனும் ஏனைய வானரர்களும் வாலியைக் கொன்ற மாயாவி திரும்பி வந்து தொல்லை விளைவிக்காமல் இருப்பதற்காகப் பிலத்துவாரத்தின் வாயிலைப் பெரிய மலைகளைக் கொண்டு அடைத்து விடுகின்ற னர். மாயாவியை இறுதியில் கண்டுபிடித்துக் கொன்ற வாலி திரும்பி வந்து பிலத்துவாரம் அடைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துத் தம்பியைக் கூவி அழைக்கிருன். ஒருவரும் வந்து வாயிலைத் திறக்கவில்லை. ''தம்பி காவல் நன்று! நன்று!'' என வாலி சினந்து, தன்கால்களால் உதைத்து மலைகளைப் பெயர்த்து எறிந்துவிட்டு வெளியே வருகிருன். அவனைக் கண்ட சுக்கிரீவன் அவன் காலில் விழுந்து தன் பிழையை மன்னிக்குமாறு வேண்டுகிருன். ''அமைச்சர்களின் ஆணையால் தான் பதவி ஏற்றுக்கொண்டேன்", எனத் தெரிவிக்கிருன். வாலியோ, சுக்கிரீவன் பதவி ஆசையால் தன் மரணத்தை எதிர் பார்த்திருக்கிருன் எனத்தவருக எண்ணி, அவன் எவ்வளவோ கெஞ்சியும் கேளாமல் அவனைக் கொல்ல முயல்கிருன். தன்னைக்கொல்ல வாலி முயல்வதைக்கண்ட சுக்கிரீவன், ஓடத் துவங்குகிருன். வாலி விடவில்லை. துரத்திச் செல்கிருன். பூமியின் எல்லைவரை சென்றும் வாலி விடுவதாக இல்லை.

என்ன செய்வதெனத் திகைத்த சுக்கிரீவன் ருசிய முகபர்வதத்தில் போய் ஏறிக்கொள்கிருன். அப்பர்வதத்தில் கால் வைத்தால் வாலியின் தலே வெடித்துவிடும் என மதங்க முனிவர் சாபம் இட்டிருக்கிருர். இச் சாபத்திற்காகப் பயந்த வாலி அந்த மலேமீது ஏருமல் சுக்கிரீவனே விட்டு விட்டுக் கிட்கிந்தைக்குத் திரும்பிச் செல்கிருன். சென்றவன் சுக்கிரீவனின் மனேவியாகிய உருமையைத் தாரமாக்கிக்கொள்கிருன்.

மனேவியை இழந்த சுக்கிரீவன் ருசியமுகபர்வதத்தில் துன்புற்றவனுய் வாழ்கின்ருன். இதுவே அநுமன் இராமனிடத்தில் சொல்லும் செய்தியாகும். அப்போது இராவணனேப் பற்றியும் அநுமன் இரண்டு குறிப்புகள் கொடுக்கிருன்.

"கால்செ லாதவன் முன்னர்க் கந்தவேள்
வேல்செலாதவன் மார்பின் வென்றியான்
வால்செ லாதவா யலதி ராவணன்
கோல்செ லாதவன் குடைசெ லாதரோ.

மெய்க்கொள் வாலினுன் மிடலிராவணன்
தொக்க தோளுறத் தொடர்ப டுத்த நாள்
புக்கி லாதவெம் பொழிய ரத்த நீர்
உக்கி லாதவே று உலகம் யாவதோ.

வாலியின் வால் செல்லாத இடத்திலே யல்லாமல் இராவணனது கோல் செல்லாது என்பது ஒரு குறிப்பு. இது இராவணனுக்கு வாலி பாதுகாப்பளித்திருக்கிருன் எனத் தொனிப் பொருள் தரக்கூடும். அடுத்த குறிப்பு வாலி இராவணனே வாலினுல் மிக எளித்தாகக் கட்டி உலகம் முழுவதும் தூக்கிச் சென்ருன் என்பதைச் சுட்டுகிறது. இது இராவணன் பின்புறமாகச் சென்றிருந்தும் பலம் இழந்து வாலியிடம் தோற்றிருக்கிருன் என்பதை உணர்த்தும். இவ்வாறு இராவணனேப் பற்றி அநுமன் சொல்லியிருப்பதால் வாலியைக் கொன்ருல்தான் இராவண வதம் நிறைவேறும் என இராமன் எண்ணி வாலியைக் கொல்ல உடன் பட்டான் எனச் சிலர் கூறுவதுண்டு. கம்பனே, இராவணனேப் பற்றி அநுமன்

சொன்ன குறிப்பெதுவும் இராமன் மனத்தில் பதிந்ததாகக் காட்டவில்லே. சுக்கிரீவனைப் பற்றி அநுமன் இறுதியாக

"உருமை யென்றிவற் குரிய தாரமாம்
அரும ருந்தையு மவன் விரும்பினுன்
இருமை யுந்துறந் திவனி ருந்தனன்
கரும மிங்கிதே கடவு ளென்றனன்.

என்று சொன்னது தான் இராமன் மனத்தில் சுருக்கெனத் தைத்ததாகக் கம்பன் காட்டுகிருன். ''அவன் விரும்பினுன்'' என்பது அநுமன்கூற்று. அவன் விரும்பினுன் எனச் சொல்வதற்குப் பொருள் 'வலிந்து கைப்பற்றினுன் என்பதே' என நாம் உணர்வதற்கே கம்பன் தன் வாக்காக "இளையோன் தாரம் வெளவினன்'' என அடுத்துக் கூறுகிருன். வெளவுதல் என்ருல் அவள் விரும்பாத நிலையில் வலிந்து கைப்பற்றுதல் என்பது பொருள். பிறன் தாரத்தை விரும்புவது நியாயமாஎன வாலியை இராமன் கேட்கும் பொழுது. ''அது எங்கள் குரக்கின வழக்கம்'' என அவன் உடன்பட்டுச் சொல்லுவதால், சுக்கிரீவன் மனைவியை வாலி களங்கப் படுத்தியிருக்கிருன் என்பது மறுக்க முடியாத உண்மையாகிறது. சுக்கிரீவன் மனைவியை வாலி களங்கப்படுத்திவிட்டான் என்ற செய்திதான் இராமனுக்கு மிகுந்த ஆத்திரத்தை விளைவித்திருக்கிறது. இதனைக் கேட்டதும், இராமன் துடிதுடித்துச் சினம் பொங்கப் பேசுகிருன். அப்பொழுது இராமன் கூற்ருக இல்லாமல் தன் கூற்ருகவே, கம்பன் மூன்று பாடல்கள் பாடியுள்ளான்.

பொய்யி லாதவன் வரன்முறை இம்மொழி புகல
ஐயனுயிரம் பெயருடை யமலர்க்கு மமலன்
வைய நுங்கிய வாயிதழ் துடித்தது மலர்க்கண்
செய்ய தாமரை யாம்பலம் போதெனச்சிவந்த.

திறத்து மாமறை யயனுைடைம் முகன் பிறர்தேடிப்
புறத்த கத்துண ரரியதன் பொலனடிக் கமலம்
உறச்சி வப்பவித் தரை மிசை யுறல் அற மாக்கல்
மறத்தை வீட்டுத லன்றியே பிறிது மற்றுண்டோ.

இடைச் செருகல்

ஈர நீங்கிய சிற்றவை சொற்றன ளென்ன
ஆரம் வீங்குதோள் தம்பிக்குத் தன்னர சுரிமைப்
பார மீந்தவன் பரிவிலன் ஞெருவன் தனிளேயோன்
தாரம் வவ்வின னென்ற சொல் தரிக்குமா றுளதோ.

இப்பாடல்களே கம்பன் காணும் வாலிபற்றிய நிகழ்ச்சிக்கு உயிர் நாடியாகும். இராவணன் சீதையை எடுத்துச் சென்றிருப்பதால் அவனைத் தேடுவதற்குச் சுக்கிரீவனின் துணை வேண்டும் என்பது உண்மையே. ஆனால், சுக்கிரீவனிடம் அவ்வாறு சீதையைத் தேடித்தரமுடியுமா என இராமன் கேட்கவேயில்லை. ''எங்கள் துயர் நீங்க உன்னை நாடி வந்தோம்'' என்றுதான் இராமன் சொன்னான். அஃது என்ன துயர் என்று கூடச் சுக்கிரீவன் கேட்கவில்லை. அண்ணனால் தான் துயருற்றிருப்பதால் சரண்புகுகின்றேன் என்று சுக்கிரீவன் இதற்கு விடை சொல்கிறான். சீதையைத் தேடிக் கொணர்வதாக வாக்களிக்கவில்லை. ''சரண்'' என்னும் சொல்லைக் கேட்டவுடனேயே இராமன் ''உன்னைச் செற்றவர் என்னைச் செற்றவர்; உனக்கு உற்றவர் எனக்கும் உற்றவர்; உன் கிளை என் கிளை; என் சுற்றம் உன் சுற்றம்'' என்று சொல்கிறான். இங்கே, "என் சுற்றம் உன் சுற்றம்" என்று சொன்னனே அன்றி, "என் பகைவர் உன் பகைவர்'' என்று சொல்லவில்லை. அதாவது தன் பகைவனாகிய இராவணனை அவனும் பகைவனாகக் கொள்ள வேண்டும் என்று இராமன் நிபந்தனை போடவில்லை. சுக்கிரீவனின் மனைவியை வாலி கவர்ந்துள்ளான் என்ற செய்தியை இராமன் முதலில் அறியவில்லை. அறியாத நிலையில் சரணாகதியை ஏற்றுக் கொண்டானேயன்றி வாலியைக் கொல்வதாக வாக்களிக்கவில்லை. "உன்னைத் துன்புறுத்தியவர் என்னைத் துன்புறுத்தியவர்,'' என்றுதான் சொல்கிறான். துன்புறுத்தியவரைச் சமாதான முறையிலும் வழிக்குக் கொண்டு வரலாம்; சண்டையிட்டும் கொண்டு வரலாம். எப்படிக் கொண்டுவரலாம் என்று தீர்மானிக்கும் உரிமையை இழந்து

விடாமலேதான் இராமன் சுக்கிரீவனுக்கு முதலில் சரணாகதி அளித்திருக்கிறான்.

அநுமன் சுக்கிரீவனின் மனைவியை வாலி களங்கப்படுத்தி விட்டான் என்று சொன்னதும் நிலை மாறுகிறது. ஒருவன் தாரத்தை மற்றொருவன் கவர்ந்து கொண்டான் என்று கேட்டாலே இராமனுக்குச் சினம் பொங்கும். இதனையே கம்பன், "வையம் நுங்கிய வாயிதழ் துடித்தது; கண்கள் ஆம்பல் போதெனச் சிவந்த" என்று சொல்கிறான். தனக்கு உரிய அரசினைத், தாய் வரம் கொண்டாள் என்பதற்காக உரியனல்லாத தன் தம்பிக்கு வழங்கிய பெருந்தகையாளன் இராமன். இப்படிப் பட்டவன் தனக்கு உரியள் அல்லளாகிய தம்பியின் மனைவியை ஓர் அண்ணன் கவர்ந்து கொண்டான் என்னும் செய்தியை எப்படிப் பொறுத்துக் கொள்வான் எனக் கம்பன் கேட்கிறான். நடுவில் உள்ள பாடல் மிக முக்கியமானது.

இராவண வதமே, இராமனின் அவதார நோக்கம் என்று பொதுவாகச் சொல்வதுண்டு. ஆனால் கம்பன், "இராமாவதாரம் இதற்காக மட்டும் வந்ததன்று. உலகில் எங்கெங்கு மறம் நிகழ்ந்தாலும், ஆங்குச் சென்று மறத்தை ஒழித்து, அறத்தை நிலை நாட்டுதலே அவதாரத்தின் நோக்கமாகும்'' என்று கூறுகிறான். வைகுண்டத்திலிருந்து இப்புவிக்கு வந்து தன் பொன்னடிக் கமலம் சிவப்ப நடந்தது தன் மனைவியை அபகரித்த இராவணனைக் கொல்வதற்காக மட்டும் என்று சொன்னால் போதுமா? எங்கு மறம் நடந்தாலும் அதை ஒழிப்பதற்கென்றால்தானே அவதாரத்திற்குச் சிறப்பு. இராவணனையே நினைந்து செயலாற்றினான் என்பதில் இராமனுக்குப் பெருமை இல்லை. இதனாலேயே கம்பன் இம் மூன்று பாடல்கள் மூலம் பிறனில் விழைதல் என்னும் கொடிய குற்றத்தை எடுத்துக்காட்டி, இராவண வதத் தொடர்பில்லாமலே, "பிறனில் விழைவோன் எத்தனை பெரியவனாக இருப்பினும் அவனைத் தண்டிப்பது'' என இராமன் முடிவு செய்கிறான் எனக் கூறுகிறான்.

நிகழ்ச்சியின் தொடர்பில் அழுந்திய நம் உள்ளம், இராவண வதம்பற்றி இதன்கண் வரும் பாடல்களையே குறியாகக் கொண்டு வாலி வதத்தைத் தீர்மானிக்க முயல்கிறது. கவிஞனின் உள்ளத்தை நோக்க வேண்டும். எந்தப் பாடலுக்கு உயிர் கொடுத்துப் பேசுகிறான் எனத் தெரிந்து நாம் முடிவுக்கு வரவேண்டும்.

“கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களை கட்டதற்கு நேர்'' என்பது குறள். இதற்குப் பரிமேலழகர் உரை எழுதும் போது, “கொடியவர்க்கு வேந்தன் கொலைத் தண்டனை அளிக்கலாம். கொடியவர் யாரென்றால் தீக்கொளுவுவார், சூறையாடுவார், பிறனில் விழைவார்....... எனக் குறிப்பிடுகிறார். “பிறனில் விழைதல்,'' கொலைத் தண்டனைக்குரிய ஒரு குற்றம் என்பது இதனால் புலனாகும். அன்றும் பிறனில் விழைதல் பெருங்குற்றமே; இன்றும் அது பெருங்குற்றமாகவே கருதப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் வலிந்து பிறனில்லைக் கெடுத்தால் ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறை தண்டனை விதிக்கிறார்கள். நம் நாட்டிலும் இன்றும் சட்டத்தில் இதற்கு ஏழு ஆண்டுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆண் பெண் உறவு முறைகளில் மிகுந்த தாராளப் போக்கு வேண்டும் என்று சொல்லப்படுகிற இக்காலத்திலும்கூடப் பெண்ணை இழிவுபடுத்தும் இச்செயலுக்குக் கடும் தண்டனை விதிக்க வேண்டும் என்றே உலகம் கருதுகிறது.

வான்மீகம் சுக்கிரீவன் மனைவியை வாலி கொண்டது குற்றம் எனச் சொன்னாலும், பின்னர் வாலியின் மனைவியாகிய தாரையைச் சுக்கிரீவன் மனைவியாகக் கொண்டான் என்று சொல்லுகிறது. இதற்கு அமைதி காணுகின்ற வடமொழியாளர்கள், ஒருவன் மனைவியை அவன் உயிரோடு உள்ள போது தான் தாரமாகக் கொள்ளக் கூடாது; உரியவன் இறந்தபின்னர் அவள் அனுமதியின் பேரில் மனைவியாக்கிக் கொள்ளலாம் என்று கூறுகின்றனர். இதனால் வான்மீகம்

பிறனில் விழையாமை என்னும் அறத்தை அசைவில்லாத ஒரு பேரறமாகக் கொள்ளாமல் மாற்றிக் கொள்ளத்தக்க நெகிழ்ந்த ஓர் அறமாகவே கொள்கிறது என்பது தெளிவு. கம்பனுக்கு இது உடன்பாடன்று; பிறனில் விழையாமை என்னும் அறம் எவ்வாற்ருனும் தளர்வின்றிக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அவன் எண்ணுகிருன். தன் காவியம் இவ்வறத்தின் சிறப்பை எடுத்துக் காட்டும் ஒன்ருக இருக்க வேண்டும் என்று விழைந்து இக்கிட்கிந்தா காண்டத்தில் அதனை வலியுற எடுத்துப் பேசுகிருன். இப்பிறனில் விழையாமை என்னும் அறத்தை வலியுறுத்திப் பேசுதற்கு இராவணனின் நிலை முழுமையும் இடம் தரவில்லை. சீதையை இராவணன் தூக்கிச் சென்று சிறை வைத்திருப்பது பிறனில் விழைதல் என்னும் குற்றமே. ஆனுலும், அவளை அவன் களங்கப்படுத்தாமையால் குற்றத்தின் கொடுமை குறைந்து போகிறது. வாலியோ சுக்கிரீவன் மனைவியைக் களங்கப்படுத்தியிருப்பதால், பிறனில் விழைதல் என்னும் குற்றம் முழுமை பெற்றுவிடுகிறது எனக் கம்பன் கருதுகிருன். இதனுல்தான் இக்குற்றத்தை மன்னிக்கமுடியாத பெரும் குற்றம் என அவன் இக்காண்டத்தில் எடுத்துக் காட்ட முனைகிருன். இதனுலேயே இராமன், அநுமன் வாயிலாக இச் செய்தியை அறிந்ததும், வாலி மன்னிப்புக்குத் தகுதியற்றவன்; கொலைத் தண்டனைக்கு உரியவன் என்னும் முடிவுக்கு வந்துவிடுகிருன்.

வாலியை அழைத்து, ''அநுமன் சொல்லிய அனைத்தும், உண்மைதாமா? நீ ஏன் இக்குற்றத்தைச் செய்தாய்?'' என விளக்கம் கேட்காமல் ஒருதலைப்பட்சமாக இராமன் இம்முடிவுக்கு வரலாமா என்னும் ஐயம் நமக்கு எழக்கூடும்.

அநுமன் பொய்யுரைக்க மாட்டான் என நம்பி இராமன் இம்முடிவுக்கு வந்தான் எனச் சிலர் சொல்வதுண்டு. ''பொய் யிலாதவன் வரன்முறை இம்மொழி புகல'' என்று கம்பன் அநுமனைச் சுட்டுவது உண்மைதான். ஆனல் இராமன் அநுமன் வாக்கை மட்டும் நம்பி இம் முடிவுக்கு வரவில்லை.

வாலியைப் பற்றிய விவரங்களை அநுமன் சொல்லிவரும் போது, அவன் நடுநிலை தவருமல் சொல்லுகிருன் என்பது இராமனுக்குப் புலனுகிறது. வாலியின் சிறப்புக்களை எல்லாம் அநுமன் முதலில் எடுத்து மொழிகிருன். அவனுல் எழுபது வெள்ளம் வானர சேனையும் மரணபயம் இன்றி வாழ்கின்றது என அநுமன் சொன்னதிலிருந்து, வாலி சிறந்த ஓர் அரசன் என்பதை இராமன் உணர்கிருன். ''நாலு வேதங்களுக்கும் வேலி'' ஆக வாலி விளங்குகிருன் என அநுமன் சொன்னதிலிருந்து வேத சாத்திரங்களை நன்கு உணர்ந்தவன் வாலி என்பது இராமனுக்குப் புலனுகிறது. பிலத்துவாரத்தை அடைத்து விட்டுச் சுக்கிரீவன் அண்ணனைப் பற்றிய கவலை ஏதுமின்றி அரசாட்சி புரிந்திருக்கிருன் என்பதையும் அநுமன் வாக்கு புலப்படுத்துகிறது. எவ்வளவோகூவியும் சுக்கிரீவனே அவனது ஆட்களோ பிலத்துவார அடைப்புகளை நீக்க வரவில்லை என அநுமன் செரல்லுகிருன். சுக்கிரீவன் இவ்விடத்தில் நடந்துகொண்டது தவறு என்பதை அநுமன் வாக்கே தெளிவாக்குகிறது. அநுமன் பொய் சொல்பவனுக இருந்தால் இதனை மறைத்து வேறுவிதமாகச் சொல்லியிருப்பான். சுக்கிரீவனின் குறையையும் நிறையையும் ஒளிக்காமல் அநுமன் சொன்னதால் அவனிடத்தில் இராமனுக்கு நம்பிக்கை பிறக்கிறது.

சுக்கிரீவனின் குறைகளுக்கா மட்டும் வாலி அவனை சினந்திருப்பானுனல் வாலியைக் கொல்லவேண்டும் என்னும் முடிவுக்கு இராமன் ஒரு போதும் வந்திருக்க மாட்டான். இருவரையும் அழைத்துச் சரிபடுத்தலாம் என்றே கருதியிருப்பான். ஆனுல் இறுதியில் அநுமன் உருமையை வாலி கவர்ந்து கொண்டான் என்று சொன்ன பிற்பாடு தான் இராமன் வேறு முடிவுக்கு வருகிருன். சுக்கிரீவன் முன்னிலையிலேயே அவன் மனைவியை வாலி களங்கப் படுத்திவிட்டான் எனச் சொல்வதென்ருல் அது உண்மையாகவே இருக்க வேண்டும். எவ்வளவு கடையவனும் கூட உடையவன் முன்னிலையில் நேர்மைக்குப் புறம்பாக அவன்

மனைவியை மற்றொருவன் களங்கப்படுத்தி விட்டான் என்று சொல்லமாட்டான். இராமனுக்குச் சினம் ஊட்டவேண்டும் என்று கருதியிருந்தால்கூட அவனைச் சிறைப்படுத்தியுள்ளான் என்று சொல்வானே தவிர, களங்கப்படுத்திவிட்டான் என்று சொல்ல மாட்டான். இதனால் அநுமனின் வாக்கை இராமன் முற்றிலும்உண்மை என்றே கொள்ள வேண்டியவனாகிறான். இனி வாலியை அழைத்து விளக்கம் கேட்பது பயனற்றது. இராவணன் சீதையைச் சிறை வைத்திருந்தாலும், களங்கப் படுத்தாமல் வைத்திருந்ததால் அங்ககனைத்தூது அனுப்பிச் சீதையைவிடுவிக்குமாறு கேட்டான். "இன்று போய் நாளை வா" என்று இராவணனைத் திருப்பி அனுப்பினான். ஆனால் வாலியோ உருமையைக் களங்கப் படுத்திவிட்டதால் இவ் விதமான சமாதான முயற்சிகளுக்கு அறவே இடமில்லாமல் போகிறது. பிறன் மனைவியைக் கெடுத்தவனை அழைத்துச் சமாதானம் கேட்டால் அவன் அக்குற்றத்தை ஒப்புக் கொண்டு சரணாகதி வேண்டினால் என்ன செய்வது? சரணாகதித் தத்துவப்படி எவ்வளவு கொடியவனாக இருந் தாலும், அவனுக்குச் சரணாகதி அளித்தே ஆகவேண்டும். ஆனால் பிறனில் விழைந்தோனுக்குச் சரணாகதி அளித்தால் அக்குற்றம் மன்னிக்கப்படக்கூடிய ஒன்று என்று உலகம் கருதநேரிடும். உய்தியில்லாத குற்றமாகப் பிறனில் விழைதலை இராமன் கருதுகிறான். வாலிக்குச் சந்தர்ப்பம் வழங்கினால் அவன் இக்குற்றத்திற்காகத் தண்டிக்கப்படாமல் தப்பிக் கொள்ள இடம் உண்டு. வாலி மிக உயர்ந்தவன். ஆனால் அவன் அறிவு புலனாசையால் மாசுண்டிருக்கிறது. ஒப்பற்ற உடல்வலிமை காரணமாக அவன் இதனை உணராமல் இருக் கிறான். மன்னிப்பு அளித்தால் அவன் அறிவில் படிந்துள்ள இக்கறை நீங்காது; தண்டித்தால்தான் நீங்கும். உடல் வலிமை பற்றிய அவன் செருக்கு ஒழிந்தால் அன்றி இக் குற்றத்திற்கு அவன் கழிவிரக்கம் கொள்ளமாட்டான்.

ஏன் இக்கருத்தை வாலிசம்வாதத்தில் இராமன் கூறவில்லை.

மன்னிப்பு அளிக்காமல் அவன் உடல் வலிமையை அழித்தால் அவன் அறிவை மறைத்துள்ள செருக்கு நீங்கும். மற்ற நலங்களால் சிறந்துள்ள அவன் தண்டனை பெற்றால் உடனே வீடுபேறு அடையும் நிலைக்குத் தகுதி உள்ளவன் ஆகிவிடு வான். நெருப்பில் போடப்படும் பொன் மாசு நீங்கி ஒளி வீசுவதுபோலத் தண்டிக்கப்படுகிற வாலி மாசுநீங்கி ஞான ஒளி வீசப் பெறுவான் என இராமன் கருதுகிறான். குற்றத்திற் குரிய தண்டனையை அளிக்காமல் வாலிக்குச் சரணாகதி அளிப்பது அவன் ஈடேற்றத்தைக் கெடுக்கும் என்பது இராமன் கருத்து. இக்காரணங்களாலேயே வாலியை அழைத்துப் பேச இராமன் விரும்பவில்லை. இவ்வாறு முடிவு செய்வது இராமனைப் போன்ற அறத்தின் நாயகர்களுக்கு ஏற்றதொன்றே என்று நாம் அறிதல் வேண்டும். உலகியல் மொழியில் சொல்வ தென்றால், இராணுவ நீதிமன்றத்தில் எடுக்கும் போர்க்கால முடிவு போன்றதே இராமன் எடுத்த முடிவாகும். அநுமன் சுக்கிரீவனின் மனைவியை வாலி களங்கப்படுத்தி விட்டான் என்று சொன்னவுடனேயே, இராமன் இராணுவ நீதி மன்றம் முடிவுக்கு வருவதைப்போலத் தானும் ஒரு முடிவுக்கு வந்து பின்வருமாறு தெரிவிக்கிறான்.

": உலகம் ஏழினோடும் ஏழும்வந்து அவன் உயிர்க்கு உதவி
விலகும் என்னினும் வில்லிடை வாளியின் வீட்டித்
தலைமையாடு நின் தாரமும் உனக்கின்று தருவேன்
புலமை யோய் அவன் உறைவிடம் காட்டென்று
புகன்றான்".

"உனக்குத் தாரம் மீட்டுத் தருவேன்," என்று சொல்வது பொருத்தமே. உருமை கற்பழிக்கப்பட்டிருந்தாலும், அவன் வாலியால வலிந்து கற்பழிக்கப்பட்டவளாதலால் மன்னிப்புப் பெறவும் திருப்பி ஏற்றுக் கொள்ளப்படவும் தகுதி பெற்றவள். அகலிகையை அவ்வாறுதான் ஏற்கும்படி விசுவாமித்திரன் இராமனோடு சென்று கௌதமனிடம் தெரிவிக்கிறான். "நெஞ்சினால் பிழைப்பில்லாளை ஏற்றருள்" என்பது

விசுவாமித்திரன் வாக்கு. உருமையை மீட்டுத் தருவதாகச் சொன்ன இராமன், "தலைமையையும், உனக்குத் தருவேன்," என ஏன் சொல்லுகிறான் ?

இராவணனின் வதைக்கு எழுபது வெள்ளம் சேனை வேண்டும் என்பதற்காகவோ, சீதையைத் தேடுவதற்கு வானரச் சேனைதேவை என்பதற்காகவோ இராமன் அவ்வாறு கூறுகிறான் என நாம் கொள்ளக்கூடாது. கலன்காண் படலத்தில் அநுமன் இவ்வாறு சொல்வது உண்மையே. ஆனால் இங்கே, "தலைமை தருகிறேன், என்று இராமன் சொல்லும்பொழுது சீதையைத் தேடுவதுபற்றி எண்ணியதாகச் சிறு குறிப்புக் கூடக் காணவில்லை. பிறன்தாரம் வவ்வினான் என்னும் சொல்லே இராமனை இவ்வாறு சொல்லச் செய்தது என்றே கம்பன் பாடலை அமைத்திருக்கிறான். பிறனில் விழைந்த ஒருவன் அரசாள, உரிமையற்றவன் என்பது இராமன் முடிவு. "வாலியைக் கொன்றால் பின் கிட்கிந்தையை ஆள்வது யார்?" என்ற வினா எழும். இங்கே கம்பன் அரசியல் நுணுக்கத்தோடு பேசுகிறான். அநுமன் வாக்கில் பின்வரும் கருத்துக்கள் வெளியாகி உள்ளன.

"அன்னவன் எமக்கு அரசனாகவே இன்னவன் இளம் பதம் இயற்றும் நாள்" என்பது ஒரு கருத்து. வாலி அரசனாக இருக்கும்போது, சுக்கிரீவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டியிருக்கிறான். இதனையே "இன்னவன் இளம் பதம் இயற்றும் நாள்" என அநுமன் தெரிவிக்கிறான். வாலியே சுக்கிரீவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டியிருப்பதால் வாலிக்குப்பின் சுக்கிரீவனே அரசுரிமை ஏற்க உரியவன் ஆகிறான். பிலத்துவாரத்தினுள் வாலி இருந்தபோது சுக்கிரீவனும், அதனுள் செல்ல முற்படுகிறான். அப்போது,

"தடுத்து வல்லவர் தணிவு செய்துநோய்
எடுத்த வேலையோர் இயைவி னால் இயைந்து
அடுத்த காவலும் அரிகள் ஆணையால்
கொடுத்த துண்டிவன் கொண்டனன் கொலாம்"

என அநுமன் தெரிவிப்பது மற்ருெரு கருத்தாகும். இதில் சுக்கிரீவனைக் குரக்கின அமைச்சர்களும் பெரியோர்களும் அரசேற்க வற்புறுத்தினர் என்றும் அரிகள் ஆணையால் சுக்கிரீவன் அதனை ஒருவாறு ஏற்ருன் என்றும் தெரிவிக்கப்படு கிறது. அரிகள் என்ருல் குரங்குகள். ஆகவே, கிட்கிந்தையில் உள்ள குடிகளாகிய குரங்குகளின் ஒப்புதலின் பேரிலேயே சுக்ரீவன் அரசேற்றிருக்கிருன். அமைச்சர்கள், சான்ருேர்கள், குடிகள் ஆகியோரின் முழுச் சம்மதம் பெற்றே சுக்கிரீவன் அரசுக் கட்டில் ஏறியிருக்கிருன். வாலி இல்லாதபோது, அங்கதனை அரசு கட்டில் ஏறுமாறு அமைச்சர்களோ சான்ருேர் களோ மக்களோ ஆணையிடவில்லை. தனக்குப்பின் அரசாள்வ தற்கு அங்கதன் இளைஞன் ஆதலால் அவன் தகுதியில்லை என்றும், தம்பி சுக்கிரீவனே தகுதி படைத்தவன் என்றும் வாலி கருதி அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டியிருக்கிருன். இதனுல்தான் அமைச்சர்களும் சான்ருேர்களும் மக்களும் சுக்கிரீவனைப் பதவி ஏற்கச் செய்திருக்கின்றனர். வாலி திரும்பி வந்ததும் சுக்கிரீவனைத் துரத்தியதுமட்டும் இன்றி அமைச்சர் குழுவையும், துரத்தியிருக்கிருன். அமைச்சர் குழு சுக்கிரீவனேடு வந்து ருசியமுக மலையில் தஞ்சம் புகுந்திருக் கிறது. சுக்கிரீவன் அமைச்சர்களோடுகூடிய ஒருவனுகவே அம்மலையில் தங்கியிருக்கிருன். மராமரச் சோதனை நடத்தக் கருதிய சுக்கிரீவன் தன் அமைச்சர் குழுவை ஆலோசிக்க வேண்டும் என இராமரிடத்தில் மொழிவதைப் பார்க்கிருேம். இவ்விடத்தில் கம்பன்,

“அனைய ஆண்டு உரைத்து அநுமனே முதலிய அமைச்சர்
நினைவும் கல்வியும் நீதியும் சூழ்ச்சியும் நிறைந்தார்
எனையர் அன்னவரோடும் வேறு இருந்தனன் இரவி
தனயன் அவ்வழிச் சமீரணன் மகன் உரைதருவான்”

எனக் கூறுகிருன். அநுமனே முதலிய அமைச்சர் என்பதால் அநுமன் முதல் அமைச்சராக இருக்கிருன் என்பதும் தெரி கிறது. சுக்கிரீவன் அமைச்சரவையோடு கூடியே ருசியமுக

மலையில் இருந்ததால் அங்கே வாலியால் விரட்டப்பட்ட ஓர் அரசாங்கம் இயங்குகிறது என்பது புலனாகும். வாலி கொல்லப் பட்டால் இம் மலையில் இயங்கிக் கொண்டிருக்கிற அரசாங்கம் தான் பதவி ஏற்கவேண்டும். குரக்கினக் குடிகளும் அம்மலை யில் ஓரளவு சுக்கிரீவனோடு இருந்திருக்கின்றன என்பதை,

'ஆயிடை அரிக்குலம் அசனி அஞ்சிட
வாய்திறந்து ஆர்த்தது .....''

எனக் கூறுவதிலிருந்து அறியலாம்.

இராமன் அமைச்சரோடு கூடிய சுக்கிரீவனின் அரசை, மலைமீது கண்ணுறுகிறான். பிறனில் விழைந்த வாலியைக் கொன்றதும், சட்ட அடிப்படையில் அமைந்த இவ்வரசே, பதவி ஏற்கத் தக்கது என முடிவு செய்கிறான். இதனாலேயே ''தலைமையோடு நின்தாரமும் உனக்கு இன்று, தருவேன்'' என்று கூறுகிறான்.

''பதினான்கு லோகங்கள் வந்து எதிர்த்தாலும், வாலியைக் கொன்று தலைமையும், தாரமும் தருவேன்'' என இராமன் சொல்லியதைக் கேட்டுச் சுக்கிரீவன் பேருவகை கொள்கிறான். ஆனால், அதே சமயம் அவன் உள்ளத்தில் ஓர் ஐயப்பாடு தோன்றுகிறது. வாலியோ அளவற்ற பலம் வாய்ந்தவன். அவனை இராமனால் கொல்ல முடியுமா? இந்த ஐயப்பாடு சுக்கிரீவனுக்கு எழுந்ததில் வியப்பில்லை. அநுமன் திரு நெடுமாலே இராமனாக அவதரித்தான் என்பதை இராமனைப் பார்த்த மாத்திரத்திலேயே உணர்ந்து கொள் கிறான். சுக்கிரீவனிடத்தும், அவ்வுணர்வு அரும்பியிருக்கிறது. ஆனால் முழுதும் மலராது, ஐயப்பாட்டால் தடையுண்டு கிடக் கிறது. சுக்கிரீவனின் நிலைமையை இவ்விடத்தில் நாம் நோக்க வேண்டும். வாலி வேதங்களைக் கரை கண்டவன். அநுமனும் அதேபோல வேத நூற்பயிற்சி மிக்கவன். சுக்கிரீ வனோ அவ்வளவு மேம்பாடு பெற்றவன் அல்லன். அவன் பிறப்பால் விலங்காகவும், உணர்வால் மனிதனாகவும் விளங் குகிறான். விலங்குப் பிறப்புக்குள்ள வாசனையும் மனிதப் பிறப்

புக்குள்ள உணர்வும் சுக்கிரீவனிடம் அமைந்துள்ளன. இந்நிலையில் இராமனின் ஆற்றல் பற்றி மனித நிலைக்குரிய சந்தேக உணர்வோடு அவன் சிந்திப்பது இயல்பே ஆகும்.

அநுமன் சுக்கிரீவனின் ஐயப்பாட்டை நன்கு அறிந்து பேச்சைத் துவங்குகிறான். ''இராமனின் கையிலும் காலிலும் சங்கு சக்கரக் குறிகள் உள்ளன; வேறு யாருக்கும் இக் குறிகள் இல்லை; இராமன் திரு நெடுமாலே ஆவான்; சிவபெருமானின் வில்லை முறித்தவன் இராமன். என் தந்தையாகிய வாயு பகவான் வந்திருப்பவன் திரு நெடுமாலாக இருந்தால் அவனைக் கண்டதும் என் உள்ளத்தில் பெரியதோர் அன்பு தோன்றும் என்று கூறியிருக்கிறான். அது போலவே இராமனைக் கண்டதும் என் எலும்பு உருகியிருக்கிறது. நீ சந்தேகப்பட்டால் இராமனின் வலியை அறிவதற்கு ஓர் உபாயம் உண்டு. மராமரங்கள் ஏழையும் இராமனின் அம்பு துளைக்குமானால் வாலி நெஞ்சையும் அது துளைக்கும் என உறுதியாகக் கொள்ளலாம்'' என்று அநுமன் கூறுகிறான். இதனைக் கேட்ட சுக்கிரீவன் கலக்கம் தீர்ந்து, ''நல்ல யோசனைகூறினாய்'' என அநுமன் தோள்களைத் தழுவி, இராமனிடம் செல்கிறான். ''ஐய, இம் மராமரங்கள் ஏழினையும் உன் அம்பு துளைக்குமானால் என் மனத்தில் உள்ள கவலை நீங்கும்'' என்று சுக்கிரீவன் இராமனிடம் கூறுகிறான்.

புன் முறுவல் பூத்த இராமன் தன் சிலை நாணை ஏற்றி மராமரத்தை நோக்கிச் செல்கிறான். அவன் நாணொலியே பெரியதோர் கலக்கத்தை விளைவிக்கிறது. இலக்குவன் ஒருவன் மட்டும்தான் பக்கத்தில் நிற்கிறான். நாணொலி கேட்ட சுக்கிரீவன் அநுமன் முதலியோர் என்ன ஆனார்கள் என்று சொன்னால் அது அவர்களுக்கு இகழ்ச்சியை உண்டாக்குமாதலால் ''சொல்லாது விடுகிறேன்!'' எனக் கம்பன் கூறுகிறான். பயத்தினால் ஓடி ஒளிந்து கொண்டார்கள் என்பது இதன் பொருள். இராமனின் அம்பு மராமரங்கள் ஏழையும் ஒரு நொடியில் துளைத்துக் கீழுலகம் ஏழையும் உருவி வேறு

ஏழ் என்னும் எண் உள்ள பொருள்கள் இல்லாமையால் இராமனின் அம்பருத் தூணியைத் திரும்ப வந்தடைந்தது எனக் கம்பன் கூறுகிருன். இதனைக்கண்ட சுக்கிரீவன், இராமன் முழுமுதற் பொருளே என்று தெளிகிருன். திரும்பி வரும் பொழுது, இராமன் துந்துபிமலையைக் கண்ணுறுகிருன். அம் மலைபற்றிய விவரத்தைச் சுக்கிரீவனிடம் வினவுகிருன். "துந்துபி என்னும் அசுரன் தம்மோடு சண்டைக்கு வருமாறு தேவர் முதலியோரை அழைக்க அவர்கள், ''வாலியோடு சென்று சண்டைசெய்'' என ஆற்றுப்படுத்த கிட்கிந்தை வந்து வாலியோடு பொருது மாண்டான். அவன் உடல் எலும்பு மலையெனக்கிடக்கின்றது. இம்மலை மதங்கமுனிவர் ஆசிரமத்திற்குப் பக்கத்தில் வீழ்ந்ததால்தான் அவர் கோபங்கொண்டு, வாலியைச் சபித்தார்'' எனச் சுக்கிரீவன் கூறுகிருன். சுக்கிரீவனிடம் விவரங் கேட்டறிந்த இராமன் இலக்குவனை நோக்கி, "இதனை உன்கால் விரலால் உந்துக'' என்கிருன். இலக்குவன் அதுபோல உந்தியதும், அம்மலை பிரமலோகம்வரை சென்று திரும்புகிறது. இதனுடன் சோதனை முடிகிறது.

வாலியை இராமன் எவ்வித ஐயந்திரிபுக்கும் இடமின்றிக் கொன்றுவிடுவான் எனச் சுக்கிரீவன் தீர்மானிக்கின்ருன். இங்கேதான் நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

வாலி நேர்நின்ருர் பலத்தில் பாதி பெறுவான் என்பது உண்மையானல் இச்சோதனையால் பயன்என்ன? மராமரத்தை என்னதான் ஊடுருவினும் வாலி முன் இராமன் சென்றதும் பாதிப்பலம் இழந்து விடுவானன்ரே? இச் சோதனைக்கு முன்னரோ பின்னரோ இராமனிடம் வாலியின் வரபலம் பற்றிய ஓர் ஆலோசனையைச் சுக்கிரீவனும் அநுமனும் செய்ய வேண்டாமா? ஏன் செய்யவில்லை?

சுக்கிரீவன் தனியே அமைச்சரவையைக் கூட்டி, ஆலோசிக்கும் பொழுது, இவ்வரத்தைப் பற்றி அறவே பேசவில்லை. அநுமனும் இராமன் திருநெடுமால் என்று உறுதிப்

படுத்திஞனேயன்றி வரபலம் பற்றி என்ன செய்வதென்று ஆலோசிக்கவில்லே. எல்லாவற்றையும்விட, இந்த வரபல நிலேதானே முக்கியமாகச் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்ருகும். இதனே விடுத்து வேறு விஷயங்களே ஆலோசிக்க வேண்டிய அவசியம் என்ன? சுக்கிரீவஞே அநுமஞே இதைப்பற்றிச் சிறிதும் கவலேப்பட்டதாகத் தெரியவில்லே. இராமன் வாலியைக் கொல்லும் ஆற்றல் உடையவஞ? எனச் சந்தேகிக்கின்ற சுக்கிரீவனுக்கு அநுமன் இவ்வர பலத்தை எப்படிச் சமாளிப்பது என்பதைப் பற்றித்தானே சொல்லவேண்டும்? திருநெடுமால் என்று அநுமன் உறுதிப்படுத்தியும் கூடச் சுக்கிரீவன் நிறைவு கொள்ளாமல் மராமரச் சோதனேயை நடத்திப் பார்க்க முற்படுகிருன். அப்படியாஞல் வரபலத்தைப் பற்றியும் ஒரு முடிவுக்கு வந்திருக்கத்தானே வேண்டும்?

அநுமன் முதன்முதல் இராம இலக்குவரைச் சந்தித்தவுடனேயே அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதைப் பின்வருமாறு கணிக்கின்ருன்.

''தருமமும் தகவும் இவைதனம் எனும் தகையர் இவர்
கருமமும் பிறிதொர் பொருள் கருதியன்று அது கருதின்
அருமருந் தனேயது இடை அழிவந் துளது அதனே
இரு மருங் கினும் நெடிது துருவுகின்றனர் இவர்கள்

இராம இலக்குவர்கள் தருமத்தையும் நல்லொழுக்கத்தையும் தமக்குச் செல்வமாகக் கொள்பவர்கள் என அநுமன் முடிவு செய்திருக்கிருன். வரபலத்திற்காக அஞ்சி ஒளிந்து அம்பெய்யத் தருமத்தையே ஆபரணமாகப் பூண்ட இராமன் சம்மதிப்பான? இதுபற்றி அவன் உள்ளக் கருத்தை அறியாமல் மராமரச் சோதனே செய்து பயன் என்ன? என்று அநுமன் சிந்தனே செய்து, சுக்கிரீவனிடம் கலந்திருக்க வேண்டுமன்ருே?

விருந்துண்ட பின்னர் அநுமன் முதன்முதல் இராமனிடம் வாலி பற்றிய விவரங்களே முப்பத்தைந்து பாடல்கள் வாயிலாகச்சொல்கிருன். அவற்றுள் வரபலம் பற்றிய செய்தி ஒரே ஒருபாடலில் இரண்டு அடிக்குள் அடங்கி விடுகிறது. அப்புறம்

இதுபற்றி அநுமன் எவ்விடத்தும் பேசவில்லை. மராமரச் சோதனை நடத்த முற்படும் போதும் இதுபற்றிப் பேசவில்லை; வாலியோடு போர் செய்ய இராமனை அழைத்துச் செல்லும் போதும் இதுபற்றிப் பேசவில்லை. கம்பராமாயணம் முழுவதிலுமே சுக்கிரீவனும் அநுமனும் இதுபற்றி வேறு எவ்விடத்தும் பேசியதில்லை. இதன் மர்மம் என்ன?

நேர் நின்றாரின் பலத்தில் வாலி பாதிப்பலம் வாங்குவான் என்று வரம் இருந்தால்தானே இதுபற்றிப் பேசியிருப்பார்கள்? வாலியோடு மற்போர் செய்பவர்கள்தாம் இதுபற்றிக் கவலைப் படவேண்டும்; வாலியின் பிடியுள் அகப்பட்டால்தான் பாதிப் பலம்போகும். விற்போர் செய்யும் வீரர்கள் இதுபற்றிச் கவலைப்படவேண்டுவதில்லை. ஏனெனில் அவர்கள் தள்ளி நின்றுதான் அம்பு எய்வார்கள். ஆனால், விற்போர் வீரர்களும் மறைந்து நின்று அம்பு எய்வோர்களும் வாலியினிடத்து அகப்பட்டுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு உண்டு. வாலி

"அலையும் வேலை சூழ் கிடந்த ஆழிமா
மலையி னின்றும் இம் மலையின் வாவுவான்"

என்று அநுமன் கூறுகின்றான். ஒரு மலையினின்று மற்றொரு மலைக்கு மிக எளிதாகத் தாவக்கூடியவன் அவன். அளவற்ற நெஞ்சு பலம் வாய்ந்தவனாதலால், அவன் நேர் நின்றோ, மறைந்தோ அம்பு எய்தால் அந்த அம்பு அவன் நெஞ்சிற்பட்டு முறியுமேயன்றி நுழையாது. அம்பு வந்த திசை நோக்கி வாலி தாவி அம்பு எய்தோர் எங்கு நின்றாலும் பிடித்து விடுவான். பிடித்துக் கொண்டால் அவர்களின் பலம் பாதி போய்விடும். இதனாலேயே மற்போர் வீரர்கள் மட்டுமல்லாமல் விற்போர் வீரர்களும் வாலியோடு போரிட அஞ்சியிருக் கிறார்கள். மற்போர் வீரராய் இருந்தால் வாலியை வெல்ல முடியாது. விற்போர் வீரராய் இருந்தால் வாலியின் மார்பைத் துளைக்கக்கூடிய வலிமை வாய்ந்த அம்பினையும் வாலிதாவு தற்கு முன்னர் அம்பு பாய்ச்சும் திறத்தினையும் உடையவராக

இருக்க வேண்டும். எனவே வாலியின் மார்பில் பாய்ந்து துளைக்கக்கூடிய வலிமையும், வாலி விரைந்து பாயுமுன் அம்பு செலுத்தும் திறனும் இராமனுக்கு உண்டா என்றுதான் பார்க்க வேண்டும். இதனைப் பார்ப்பதற்காகவே அநுமன் மராமரச் சோதனை நடத்தச் சொல்கிறான். மராமரத்தை இராமனின் அம்பு ஊடுருவிய வேகத்தையும், மலைபோன்ற அம்மரங்களை அது துளைத்த வலிமையையும் சுக்கிரீவனும் அநுமனும் நேரில் காண்கிறார்கள். வாலியை இராமன் நிச்சயமாகக் கொல்ல முடியும் என்ற முடிவுக்கு வருகிறார்கள். வேகமும் வலிமையும் வாய்ந்த அம்பு இராமனிடத்து இருக்கும்போது வாலி மிடத்தே அகப்பட்டுக் கொள்ளக் கூடிய ஆபத்து அவனுக்கு இல்லை. இதனை உணர்ந்ததாலேயே அநுமனும் சுக்கிரீவனும் வாலியின் வரபலத்தைப் பற்றிப் பேசவில்லை. வாலிக்கு எதிரேவந்து நின்றால் பாதிப்பலம் போகும் என்று வரம் இருந்திருக்குமேயானால், அதனைப்பற்றி நிச்சயம் சிந்தித்திருப்பார்கள். கம்பன் ''கிட்டுவார் பொரக் கிடைப்பின் .... பட்ட நல்வலம் பாகம் எய்துவான்'' என்று ஏற்கனவே சொல்லிவிட்டதால்தான் இதுபற்றிப் பின்னர் முக்கியத்துவம் அளிக்கவில்லை.

திருமுருகாற்றுப் படையில், ''அவுணர் நல்வல மடங்க'' எனவரும் அடிக்குப்பொருள் எழுதிய நச்சினார்க்கினியர்,

> ''அவுணரெலாம் தம்முடனே எதிர்ந்தார் வலியிலே
> பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்
> கொண்டிருந்து சாதித்ததொரு மாமரம்''

என்று கூறுகிறார். இவ்விடத்தில் நேர் நின்றார் வலியிலே பாதி என்று கூறவில்லை. எதிர்ந்தார் வலியில் பாதி என்றுதான் கூறுகின்றார். நேர்நின்று எதிர்ந்தாலும் மறைந்து நின்று எதிர்ந்தாலும் எதிர்ந்தவர் எதிர்ந்தவரேயாதலால், மந்திர ஆற்றல்படி எதிர்ந்தார் பலம் அவுணர்க்குப் பாதி சென்றே ஆகவேண்டும்.

வாலிக்குக்கிடைத்த வரமோ இதுபோன்ற ஒன்ருக இருந்தாலும், சிறிது வேறுபாடு உடையது என்பதை விளக்கவே கம்பன், "கிட்டுவார் பொரக்கிடைக்கின்'' என்று தெளிவு செய்கிருன். வாலியைப் பொறுத்த வரையில் எதிர்ந்தார் என்பது அவனைக்கிட்டி, அவன் உடலோடு மோதிப் போர் செய்பவரையே குறிக்கும். புராணங்களில் வரும் வரங்களின் பொதுத் தன்மை ஒரே மாதிரியாகவே இருக்கும். சிறப்புத்தன்மைகளில் வேறுபாடு காணப்படும். யாராலும் வெல்லப்படாத ஓர் ஆற்றல் வேண்டுமெனக் கேட்ட இராவணன் மனிதரை விட்டு, மற்றவர்களைப் பற்றி வரம் கேட்கிருன். இரணியனே மனிதர், தேவர், மிருகம் எல்லாவற்றையும் சேர்த்து வரம் கேட்கிருன். இதற்காகத்தான் நரசிங்கமாக வந்து அதாவது மனித-மிருகக் கூட்டுறவு நிலையில் உள்ள ஓர் அவதாரம் எடுத்துக் கொல்ல வேண்டியதாயிற்று. யாராலும்வெல்லப்படக் கூடாது என்ற பொதுத் தன்மை ஒரேமாதிரியாக இருந்தாலும் இன்ன இன்னரால் கொல்லப்படக் கூடாதென்ற சிறப்புத் தன்மை அசுரர்க்கு அசுரர் வேறுபடுவதை நாம் காண்கிறோம். இது போலவே, எதிர்ந்தார் பலத்தில் பாதி என்னும் வரம் பொதுத் தன்மையில் அவுணர்களுக்கும் வாலிக்கும் ஒரே மாதிரியாக இருந்தாலும், இன்ன இன்ன வகையில் எதிர்ந்தார் என்னும் சிறப்புத்தன்மையில் வேறுபாடு அடைகிறது.

வாலியின் வரபலம் நேர்நின்ருர் பலத்தில் பாதி பெறக் கூடியதெனக் கருதுபவர்கள் சுக்கிரீவனும் அநுமனும் ஏன் மந்திராலோசனைக் கூட்டத்தில் மிக முக்கியமாக உள்ள இதனைப்பற்றிச் சிந்திக்க வில்லை என்பதற்குச் சமாதானம் கண்டாகவேண்டும்.

வான்மீகத்தில் வாலியின் வரபலம் பற்றிய பேச்சே இல்லை. வான்மீகத்தை மட்டும் படிப்போர், வாலி பாதிப் பலம் வாங்கும் தன்மையுடையவன் என்பதை அறிய மாட்டார்கள். எவ்விடத்தும் வான்மீகத்தில் இது பற்றிய குறிப்பு இல்லை.

வான்மீகத்தில் இல்லாத இந்த வரபலத்தைப் பற்றிக் கம்பன் ஏன் பேசவேண்டும்? இராமன் ஒளிந்து நின்று கொன்றதற்கு ஓர் அமைதிகாண வேண்டிக் கம்பன் இதனைப் புகுத்தியிருக்கிறான் எனச் சிலர் கருதுகிறார்கள். கம்பனுக்கு இது கருத்தாக இருக்குமானால் மராமரப் படலத்திலோ, வாலி வதைப்படலத்திலோ சுக்கிரீவனும் அநுமனும் இதுபற்றிச் சிந்தித்தார்கள் என்று சொல்லாமல் விட்டிருக்கமாட்டான். இலக்குவன் வாயிலாக மறைந்து நின்று கொன்றதற்கு வேறு காரணம் சொல்லுகின்ற கம்பன் தனக்கு இடையூறாக உள்ள இந்த வரபலத்தினைப் புகுத்தியிருப்பானா? இராமன் ஒளிந்திருந்ததற்கு வரபலம் காரணமாக இருந்திருக்குமானால் இலக்குவன் வாய்மொழியைக் கம்பன்வேறு விதமாகஅன்றோ அமைத்திருக்கவேண்டும்? பன்னீராயிரம்பாடல்கள் உள்ள கம்ப ராமாயணத்தில் வரபலம் பற்றிய குறிப்புகள் மூன்றே மூன்று பாடல்களில்தாம் வருகின்றன. கம்பன் மிக மேலெழுந்த வாரியாகத்தான் இந்த வரத்தைப் பற்றிப் பேசுகிறான், ஒளிந்து நின்று கொன்றதற்கு அமைதியாக இவ்வரபலத்தைக் கம்பன் புகுத்தக் கருதியிருப்பானானால் "கிட்டுவார் பொரக் கிடைக்கின்" என்று பாடாமல் நேர் வந்தார் பலத்தில் பாதி என்றே தெளிவாகப் பாடியிருப்பான். எனவே, கம்பனுக்கு இது கருத்தில்லை என்பது தெளிவு. சுக்கிரீவன், அநுமன் முதலியோர் சுத்த வீரர்கள். வாலி சுக்கிரீவனைக் கொல்ல முயலும்போது சுக்கிரீவனுக்குத் துணையாகஇருந்து ஆலோசனை சொன்ன அநுமன் முதலிய வீரர்கள் அவனோடு சேர்ந்து வாலியைக் கொன்றிருக்க வேண்டும். அப்படியில்லாமல் கோழைகள் போல ருசியமுக பர்வதத்தில் தஞ்சம் புகுந்து அடங்கிக் கிடப்பதைக் கண்டு இராமன் வியப்பெய்தக் கூடும். "சுக்கிரீவன் சிறந்த வீரன்; நாங்களும் கோழைகள் அல்லோம் சுக்கிரீவனோடு சேர்ந்து நாங்களும் போரிட்டு, வாலியைக் கொன்றிருப்போம்; ஆனால் நாங்கள் அத்தனைபேரும் மற்போர் வீரர்களேயல்லாமல் விற்போர் வீரர்கள் அல்லோம். வாலியோ தம்மோடு மற்போர் செய்வோர் பலத்திலும், வரத்திலும் பாதி

பெறக்கூடிய வரபலம் படைத்தவன். இதனாலேயே நாங்கள் அவனைக் கொல்ல முடியாமல் இம்மலையில் தஞ்சம் புகுந்திருக்கிறோம்'' என இராமனுக்கு உணர்த்தவே அனுமன் வரபலம் பற்றிப் பேசியிருக்கிறான். வேறு காரணம் இருந்தால் இது பற்றிக் குறிப்பிட வேண்டிய இடங்கள் பல வந்தும் குறிப்பிடாமல் அனுமன் இருந்திருக்கமாட்டான்.

துந்துபி மலைச்சோதனை அவசியமா என்று கேட்கத் தோன்றும். இலக்குவன்தான் அதனைக் கால்விரலால் உந்தி எறிகிறான். வாலியோடு போராடப் போகிறவன் இராமனேயன்றி இலக்குவன் அல்லன். இதனால்தான் இராமனைக் கொண்டு மராமரச் சோதனை நடத்திய சுக்கிரீவன் துந்துபி மலை பற்றிப் பேசவில்லை. இ ரா ம னா க த் தா ன் துந்துபி மலையைப் பற்றிப் பேசி இலக்குவனை உந்தச் சொல்கிறான். வாலி வதத்திற்கும் இலக்குவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவனுக்குச் சோதனை தேவையற்றது.

தான் மட்டுமல்ல; நம்பியும் ஆற்றல் மிக்கவன் என்பதை உணர்த்தவே!

வான்மீகத்தில் இராமன்தான் துந்துபி மலையை உந்துகிறான். அங்கே இரண்டு சோதனைகளும் இராமனைக் கொண்டுதாம் நடைபெறுகின்றன. துந்துபி மலைச்சோதனை போதாது என்று நினைத்துச் சுக்கிரீவன் மராமரச் சோதனையும் நடத்தியிருக்கிறான். கம்பனோ, துந்துபி மலையை இராமனுக்குரிய சோதனையாகக் கொண்டு வராததோடு, சுக்கிரீவனும் அதைப் பற்றிப் பேசாமலும் இருப்பதாக அமைக்கின்றான். இந்த நிலையில் இலக்குவனை உந்தச் சொல்லி ஆற்றல் காட்ட வேண்டிய அவசியம் என்ன? இராமனுக்கு எப்பொழுதும் இலக்குவனிடத்து அளவற்ற ஈடுபாடு உண்டு. ஆனால் அவன் அதனை வெளியில் காட்டிக் கொள்வதில்லை. வாய்ப்பு நேரும் பொழுதெல்லாம் இலக்குவனின் ஆற்றலையும், பெருமையையும் வாயால் சொல்லாமல் செயல்வாயிலாகப் பிறர்க்கு எடுத்துக் காட்டி மகிழ்வது இ ரா ம னி ன் இ ய ல் பு. துந்துபி மலையை இலக்குவனை உந்தச் செய்து, இலக்குவனின் வலிமையைச்

சுக்கிரீவன், அநுமன் முதலியோர்க்கு எடுத்துக் காட்டி அக மகிழ்கிருன்.

மராமரச் சோதனையும், துந்துபிமலைச் சோதனையும், நடை பெற்றபின் அம்மலையில் சீதை எறிந்துள்ள ஆபரணங்களை இராமனிடம் கொண்டுவந்து சுக்கிரீவன் காட்டுகிருன். அவற்றைக் கண்டதும் இராமன் துயரம் தாங்காது, விம்மு கிருன். இந்த ஆபரணங்களைக் காட்டி, "உன் உயிரை வாங்கி விட்டேனே" எனச் சுக்கிரீவன் கலங்குகிருன், இராமனுக்குத் தேறுதல்கள் பல சொல்லித் துன்பத்தை ஆற்ற முயல்கிருன்.

"என்னுடைச் சிறு குறை முடித்தல் ஈண்டு ஓரீஇப்
பின்னுடைத்தாயினும் ஆக பேதுறும்
மின்னிடைச் சனகியை மீட்டு மீடுமால்
பொன்னுடைச் சிலையினுய் விரைந்து போய் என்ருன்"

இராமன் துயரத்தைப் பார்த்ததும் வாலியால் தான் படு கின்ற துயரம் சுக்கிரீவனுக்கு மிகச் சிறியதாகப் போய்விட்டது. "முதலில் சீதையைத் தேடுவோம்; அப்புறம் வாலியைப் பார்த்துக் கொள்வோம்." என்று சுக்கிரீவன் சொல்கிருன். இது அவனின் தூய உள்ளத்தைக் காட்டுகிறது. இராமனே தான் சீதையின் பிரிவால் துயருற்றுச் சாவதே முடிவென்ருலும் சுக்கிரீவன் குறையை முடித்துத்தான், "சாவேன்" என்று சொல்கிருன். அப்பொழுது, அநுமன் "சீதையைத் தேடு வதற்குப் படைவேண்டும்; வாலியைக் கொன்ருல்தான் படையைத் திரட்டமுடியும்" என்பதைத் தெரிவிக்கிருன். இவ்விடத்திலும் வாலி வதத்தையும், இராவண வதத்தை யும் தொடர்புபடுத்திப் பலர் எழுதியிருக்கின்ருர்கள். "வாலி இராவணனேடு கூட்டு ஒப்பந்தம் செய்து நட்புக் கொண்டிருக் கிருன்; தீயவனுகிய இராவணனேடு சேர்ந்ததால் வாலியைக் கொன்றே ஆகவேண்டும்" என்பது அவர்கள் கருத்து. சரணடைந்த சுக்கிரீவனைக் காப்பாற்றவேண்டும்என்றநினைவும்

பிறனில் விழைந்த ஒருவனைக் கொல்லுதல் வேண்டும் என்ற உணர்வும் இராமனுக்கு மிக்கிருந்தனவே அல்லாமல் இராவண வதத்தைப் பற்றிய உணர்வு மேலோங்கி இருந்ததாகக் கம்பன் காட்டவில்லை. ''வாலி வதம் முக்கிய மன்று; சீதையை முதலில் தேடுவோம்,'' எனச் சுக்கிரீவன் சொல்ல இராமன் அதற்கு, ''வாலியை முதலில் கொல்வோம்; அப்புறம் சீதையைத் தேடுவோம்'' என விடையிறுப்பதாகக் கம்பன் பாடுகிறான்.

''இராவண வதத்திற்குச் சுக்கிரீவன் துணை வேண்டும். இராவணனே வாலியோடு நட்புக் கொண்டவன்; அதற்காக வாலியைக் கொல்ல வேண்டும்;'' என இராமன் கருதியிருந் தால் அது தன்னலத்தின்பாற்பட்டுச் சுக்கிரீவ சரணாகதித் தத்துவத்தின் புனிதத்தன்மையையும், பிறனில் விழையாமை யாகிய அறத்தின் சிறப்பையும் கெடுத்து விடும். இராவண வதத்தைப் பற்றிய எண்ணமே இல்லாமல், ''சரணாகதி அடைந்த சுக்கிரீவனைக் காப்பாற்ற வேண்டும்; பிறனில் விழைந்தானைத் தண்டித்தல் வேண்டும்'' என்றே இராமன் வாலிவதம் செய்ய முற்பட்டான் எனச் சொன்னால்தான் சிறப்பு. இதனை நமக்கு உணர்த்தவே கம்பன்,

'நின் குறை முடித்தன்றிச் செய்கிலேன்'' எனச் சுக்கிரீ வனிடத்தே இராமன் தெளிவாகச் சொன்ன பின்னரே அநுமன் எழுந்து படைவேண்டும் என்னும் செய்தியைத் தெரிவிப்பதாகக் கூறுகிறான். இனி வாலி வதம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப் பார்ப்போம்.

சுக்கிரீவன் இராமனையும் இலக்குவனையும் வாலியைக் கொல்வதற்காக அழைத்துச் செல்லும்போது இராமன் திடீரென ஓரிடத்தில் நின்று பின் வருமாறு சொல்கிறான்,

''அவ்விடத்து இராமன்நீ அழைத்து வாலி யானதோர்
வெவ்விடத்தின் வந்துபோர் விளைக்கும் எல்லை வேறு நின்று
எவ்விடத்துணிந்தமைந்தது என் கருத்தி தென்றனன்
தெவ் அடக்கும் வென்றியானும் நன்றிதென்று சுந்தியா."

இராமன் சுக்கிரீவனை நோக்கி, ''நான் வேறிடத்தில் நின்று அம்பு தொடுக்கின்றேன்; நீ போய் வாலியை அழைத்துப் போர் செய்'' என்கிறான். சுக்கிரீவனோ, அநுமனோ இராமனை வேறிடத்தில் தனித்து நின்று அம்பெய்யச் சொல்லவில்லை. இராமனாகத்தான் இம்முடிவுக்கு வருகின்றான். ''தெவ்வடக்கு வென்றியான்'' என்பதை இவ்விடத்தில் இராமனுக்கு ஏற்று வதுதான் சிறப்பு. இராமன் ''இது நன்றென்று சிந்தியா'' என்றால், ''தனியே நின்று நான் போர் செய்வதுதான் நல்லது'' எனத்தனக்குள் யோசித்துச் சொல்கிறான் என்பது பொருள்.

''வரபலம் இருப்பதால் வாலியை இவ்வாறுதான் கொல்லவேண்டும்; முன்னமே இது பற்றிச் சொல்லக் கருதினோம்; எப்படிச் சொல்வதென்று தெரியாமல் திகைத் தோம்; நீயே இம்முடிவுக்கு வந்தது குறித்து மகிழ்கின்றோம்'' இப்படித்தானே சுக்கிரீவன் விடை சொல்ல வேண்டும்? நேர் வந்து நின்றார் பலத்தில் வாலி பாதிப்பலம் வாங்குவான் என்பது உண்மை என்றால் அவன் விடை இவ்வாறுதான் அமையும். இராமன் ஒளிந்து நின்று கொல்வதற்கு ஓர் அமைதியாக வரபலத்தைக் கம்பன் கொண்டிருந்தானானால், இவ்விடத்தில் நிச்சயம் இவ்வாறுதான் விடையை அமைத் திருப்பான்; அமைக்கவும் வேண்டும். நேர்வந்து நின்றார் பலத்தில் பாதி வாங்கும் வரம் வாலிக்கு இல்லாமையால்தான் இங்கே சுக்கிரீவன் அது பற்றி ஒன்றும் சொல்லாமல் இராமன் சொன்ன யோசனையை அப்படியே ஏற்றுக் கொண்டு, ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாக மகிழ்ச்சி ஆரவாரம் மட்டும் செய்கிறான்.

> ''வார்த்தை அன்னதாக வாலியங்கு தேரினான் மகன்
> நீர்த்தரங்க வேலை அஞ்ச நீலமேக நாணவே
> வேர்த்து மண்ணுளோர் இரிந்து விண்ணுளோர்கள் விம்மமேல்
> ஆர்த்த ஓசை ஈசனுண்ட அண்ட முற்றும் உண்டதே"

தன்னைப் போய் வாலியை அழைத்துப் போர் செய்யச் சொல்வது பற்றித் தனக்குக் கவலை இல்லை என்றும், அம்பு எய்வதாகச் சொன்ன ஒன்றே தனக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கிறதென்றும் காட்டவே சுக்கிரீவன் ஆரவாரம் செய்கின்றான். செயலின் நன்மை, தீமைபற்றித் தன்னைவிட இனிதறியக் கூடியவன் இராமன் என அவன் கொண்டானாதலால், அது பற்றி அவன் ஒன்றும் சொல்லவில்லை. சொன்னதாக இப்பாடலில் எவ்விதக் குறிப்பும் இல்லை.

சுக்கிரீவன் போய் வாலியைப் போருக்கு அழைக்கின்றான் வாலி விரைந்து எழுந்து, "இதோ வந்துவிட்டேன் வந்து விட்டேன் எனச் சிம்ம கர்ச்சனை செய்துகொண்டு வெளியே வருகின்றான். அவன் மனைவியாகிய தாரை குறுக்கே வந்து தடுக்கின்றாள். "உனக்குப் பயந்தோடிப்போன சுக்கிரீவன் இன்று புதிய உடல் வலியோடு வந்திருக்கிறான் என்று நினைக்கமுடியுமா? பெரிய ஒரு துணையைப் பெற்றிருப்பதால் தான் துணிவுடன்வந்து அழைக்கின்றான்" என்று தாரை சொல்கிறாள். "இராமன்" எனப் பெயர் குறித்து முதலில் அவள் சொல்லவில்லை.

"துணையா? கூற்றமும் என் பெயர் சொலக் குலையும். அவனுக்குத் துணையாக யாரும் அறிவில்லாதவர் வந்து என்னோடு போர் செய்தால், அவர் வலியும் வரமும் எனக்குப் பாதி வருமாதலால், நீ கவலை அடையற்க," என வாலி விடை இறுக்கின்றான். இதன்பின் தான் தாரை "இராமன் என்பவன் உன் தம்பியோடு நட்புக் கொண்டு அவனுக்கு துணையாக வந்திருக்கிறான்" என்று கூறுகிறாள்.

"இராமனா? தருமத்தின் உருவான அவன் ஒருபோதும் இந்தக் கேவலமான போருக்கு வரமாட்டான்; அவன் வில்லுக்கு உலகம் முழுவதும் சேர்ந்தாலும் எதிர் நிற்க முடியாது. கருணையம் கடலாகிய அவன் என் தம்பிக்கும்

எனக்கும் நடக்கும் போரிடை அம்பு தொடுக்கமாட்டான்'' என வாலி தாரைக்குத் தேறுதல் கூறி வெளிப் போந்து சுக்கிரீவனுடன் போர் செய்கின்ருன்.

''துணைவர்'' எனப் பெயர் குறிப்பிடாமல் சொன்ன போது வரபலம் குறித்துப்பேசிய வாலி ''இராமன்'' எனப் பெயர் குறிப்பிட்டதும் அதுபற்றி ஒன்றும் பேசாமல் கருணையை நம்பித் தேறுதல் கூறுவது கவனிக்கத்தக்கது. விற்போர் வீரனுகிய இராமனிடத்தில், தன்னேடு முட்டிப் போர்செய்வார் பலத்தில் பாதிப்பலம் வாங்கும் வரம் செல்லாதென்பதாலேயே அவன் அதுபற்றிப் பேசவில்லை.

சுக்கிரீவனுக்கும் வாலிக்கும் நடைபெறுகின்ற போர் பற்றி ஆராயும் முன்னர் இராமனுக்கும் இலக்குவனுக்கும் நடந்த ஓர் உரையாடலைப்பற்றிச் சிந்திக்கவேண்டியிருக் கிறது.

வாலியின் உடல் தோற்றத்தைக் கண்டு அதிசயித்த இராமன் இலக்குவனுக்கு அவனைச் சுட்டிக் காட்டி, 'எவ்வேலை, எம்மேகம், எக்காலோடு, எக்காலவெந்தீ, வெவ் வேறுலகத்திவன் மேனியை மானும்?'' என்று கேட்கிருன். கடல், மேகம், காற்று, காலாக்கினி ஆகியவை வாலியின் உடல் தோற்றத்துக்கு ஈடாகமாட்டா என்பது இராமன் கருத்து.

''இச் சுக்கிரீவன் தன் சொந்த அண்ணனை கொல்வ தற்குக் கூற்றுவனைக் கூட்டி வந்துள்ளான்; மிகவும் கேலிக் கிடமாயுள்ள குரங்குப்போரைச் செய்ய எண்ணியிருக்கின்ருன். இதனை நினைத்து ஒன்றும் புரியாமல் நிற்கின்றேன். அற உணர்ச்சியில்லாமல் சொந்த அண்ணனையே கொல்ல முன் வந்த இவனை எப்படி நம்புவது?'' என இலக்குவன் திடீ ரென இராமனிடம் கூறுகின்ருன். காரணம் என்ன?

வாலி சுக்கிரீவனுக்கு இழைத்த கொடுமை அனைத்தையும் இராமனோடு உடனிருந்து இலக்குவன் கேட்டவன்தான்; இராமன் அவனுக்குச் சரணாகதி அளித்ததையும் அறிந்தவன் தான். இப்பொழுது அவனாகச் சென்று போர் புரியவில்லை. தன் அண்ணன் சொல்லித்தான் போர் செய்யப் போயிருக் கிறான் என்பதையும் நன்குணர்ந்தவன்தான்; இந்நிலையில் இவ்வாறு ஏன் பேசுகின்றான்?

இலக்குவன் "அண்ணனே தெய்வம்'' என்னும் கொள்கையை மிகச் சிறந்த ஒன்று என்று கொண்டவன். ஒரு தம்பி தன் அண்ணனைக் கொல்ல முயல்வதை நேரில் பார்த்ததும், தாளாமல் உணர்ச்சி மேலிட, நடந்தவைகளை மறந்து இவ்வாறு வினவுகின்றான்.

இலக்குவனின் மனோநிலையை நன்கு அறிந்த இராமன் யார், யாரை எவ்வாறு கொள்ளவேண்டும்? எந்தெந்தக் கொள்கையை யார், யாரிடம் எதிர்பார்க்க வேண்டும் என்பதைத் தம்பிக்கு உணர்த்த எண்ணுகின்றான்.

''அத்தா இது கேள் என ஆரியன் கூறுவான் இப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசலாமோ
எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தோர்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?''

''வில்தாங்கு வெற்பன்ன இலங்கெழில் தோள் மேன்மை
உற்றார் சிலர் அல்லவரே பலர் என்ப துண்மை
பெற்றா ருழைப்பெற்ற பயன்பெரும் பெற்றி யல்லால்
அற்றார் நவைஎன் றலுக்கு ஆகுநர் ஆர்கொல் என்றான்''.

சுக்கிரீவன் பிறப்பால் விலங்கு, உணர்வால் மனிதன்; விலங்குப் பிறப்புக்குரிய குணங்கள் அவனிடம் பதிந்து கிடக்கின்றன. அநுமன் பிறப்பால் விலங்கு; உணர்வால் தேவன். இராமனைக் கண்டதும் அவன் திருநெடுமாலே என அநுமன் உணர்கிறான். அப்புறம் சந்தேகிக்கவில்லை. இது தேவ உணர்வின் விளைவு. சுக்கிரீவனும் இராமனைப் பரம்

பொருள் என உணர்கிருன். ஆனல், சந்தேகப்பட்டு மராமரச் சோதனை நடத்திப் பார்க்கிருன். இது மனித உணர்வின் விளைவு. சூரியகுமாரனுக இருந்தும், மனித உணர்வோடேயே அவன் விளங்குகிருன். வாலி பிறப்பால் விலங்கு; உணர்வால் தேவன்; நாலு வேதங்களுக்கும் வாலி வேலி என்று சொல்லப்படுகிருன்; தேவர்க்கு அமிழ்தம் ஈகிருன்; முப் பொழுதும் சிவபூஜையினை விதி தவருமல் செய்கிருன். சுக்கிரீவன் இராமனை நேரில் பார்த்திருந்தும் சந்தேகப் பட்டான்; வாலியோ நேரில் பார்க்காமலிருந்தும் தாரை யிடத்து இராமனை ''அருளின் ஆழியன்'' என்று சொல்கிருன். இது தேவ உணர்வின் விளைவாகும். சுக்கிரீவன் விலங்கு குணத்தோடு, கூடிய மனித உணர்வினன் என்பதை அறிய அவன் வாலி வதம் முடிந்த பின்னர் குறித்த காலத்தில் சீதையைத்தேட வராது கள்ளுண்டு மயங்கிக் கிடந்தான் என்று சொல்லப்படுவதே போதுமானது. வாலி பிலத்துவாரத் திலிருந்து வராதபொழுது, அதனை அடைத்துவிட்டு அரசாட்சி செய்த சுக்கிரீவன், அண்ணன் மீண்டு வந்தால் உதவி செய்ய வேண்டுமே என்ற கவலையின்றி இருந்ததும் விலங் குணர்ச்சியின் பாற்பட்டதாகும். இருவகை உணர்வும் அவனுக்கு உண்டு என்பது இவற்ருல் போதரும்.

இராமன் ''இப்பித்தாய விலங்கு'' எனச் சுக்கிரீவனைச் சுட்டுகிருன். இகரச்சுட்டு அதனை இனிதுணர்த்தும். இலக்குவனை அது சுட்டுவதாகக் கொண்டு உரையெழுதிய திறனுய்வாளர்கள் உண்டு. இலக்குவனை இந்த அளவு இழிவு படுத்தக் கம்பன் துணிவானு என்பதைத் சிந்திக்க வேண்டும். இலக்குவனை விலங்குணர்ச்சியுடையான் என்று சொல்வதே பாவம்......''அத்தா!'' என மிக உயர்வாக விளித்து விட்டு மறுபடி, அதே பாட்டில் ''விலங்கின் ஒழுக்கினை'' என இழிவாக இரண்டாவது தடவை விளிப்பான் என்பது பொருத்தமாக இல்லை. சுக்கிரீவன் என்று பொருள் கோடலே பொருத்தம், ''சுக்கிரீவன் விலங்கின் ஒழுக்குடையவன்''

எனக் கூறும் இராமன் பின்னர், ''வாலி தன்னையும் விலங்கு ஒழுக்குடையவன்'' எனச் சொல்லும்பொழுது ஏன் மறுக்க வேண்டும்? வாலி நிலை வேறு; சுக்கிரீவன் நிலை வேறு. வாலி குரங்கில் தேவன். சுக்கிரீவன் குரங்கில் மனிதன். குரங்கில் மனிதனை அவன் நிலைக்கு ஏற்றவாறு, மன்னிப்புக்குரிய குற்றமாயின் மன்னிப்பளித்து ஏற்றுக் கொள்ளலாம். குரங்கில் தேவனை அவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியாது. வாலியை நோக்கி இராமன்.

''நலங்கொள் தேவரின் தோன்றி நவ்யறக்
கலங்க லாது அற நன்னெறி காண்டலின்
விலங்கு அலாமை விளங்கியது ஆதலால்
அலங்கலார்க்கு இது அடுப்பதன்றும் அரோ''

என்று சொல்வதிலிருந்து, அவனைக் குரங்காக மதிக்காமல் தேவனாக மதிக்கிறான் என்பது புலனாகும். தேவனாக மதித்த தால்தான் வாலியின் குற்றத்தை இராமன் மன்னிக்க முடியா தென்கிறான். சுக்கிரீவனைக் குரங்கில் மனிதனாக இராமன் கொள்வதால் அவன் நிலைக்கேற்ற குற்றங்களை மன்னித்து இரக்கங்காட்டுகிறான்.

கல்வியறிவில்லாத ஒரு பரம ஏழை பசியின் கொடுமை யால் பாத்திரம் ஒன்றைத் திருடி விடுகிறான். இதே போலப் போதிய சம்பளம் வாங்குகின்ற ஒரு காவல்காரர் ஒரு பாத்திரத்தைத் திருடி விடுகிறார். இருவரும் மனிதர்கள்தாமே என்று ஒரே மாதிரியான தண்டனையை நீதிமன்றம் விதிப்ப தில்லை. பசிக்கொடுமையால் திருடிய ஏழைக்கு இரக்கங் காட்டி மூன்றுமாதச் சிறைத் தண்டனையையும், வேலியே ப்பயிரை மேய்ந்தது போன்ற காவல்காரருக்கு ஓராண்டுத் தண்டனையையும் நீதிமன்றம் விதிக்கக் காண்கிறோம். சுக்கிரீ வனும் வாலியும் குரங்கினத்தைச் சேர்ந்தவர்களாக இருந் தாலும், அவரவர்களின் அறிவுத் தகுதி நோக்கி மன்னிப் பையோ தண்டனையையோ இராமன் வழங்குகிறான். சுக்கிரீ வனின் ஒழுக்கத்தை ''இப்பித்தாய விலங்கின் ஒழுக்கம்''

என்று சொன்னதற்காகப் பின்னர் வாலி தன்னை விலங்கெனக் கூறுவதை அவன் ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

"அண்ணன் என்ருலே தெய்வம்'' எனக்கருதும் இலக்குவனிடம் "மனிதரில் கூட உடன் பிறந்தார்க்குள் சண்டை உண்டு; குரங்காய்ப் பிறந்த மனித உணர்வுடைய சுக்கிரீவன் தன் குரங்கு ஒழுக்கத்தால் அண்ணன் மீது பகை கொள்வதை அவன் நிலை பற்றிச் சிந்திக்க வேண்டுமேயன்றிப் பரதனைப் போன்ருரின் நிலையில் வைத்து நோக்கக் கூடாது. அப்படி நோக்கினுல் பிறகு பரதனுக்கு என்ன பெருமை? உலகியலில் குற்றம் நிறைந்தோரே பலர்; குறையற்ருேர் மிகச் சிலராகவே இருப்பர். நாம் அவரவர் நிலை நோக்கி இரக்கங் காட்டி ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என இராமன் விளக்கிக்கூறித் தெளிவு படுத்துகிருன். இவ்விடத்தில் பரதனைச் சொல்லி இலக்குவனை மறைமுகமாக எண்ணுகிருன் எனச் சிலர் நயம் காண்பதுண்டு. பரதனுக்கும் இராமனுக்கும் இடையே அரசு பற்றிய ஒரு தகராறு கைகேயியால் தோற்றுவிக்கப்பட்டது. பரதனே இதில் மிகுந்த தியாக உணர்வோடு நடந்து கொண்டான். சுக்கிரீவனுக்கும் வாலிக்குமிடையே தோன்றிய தகராறில் சுக்கிரீவன் பரதனைப் போன்ற தியாக உணர்வோடு நடக்க வேண்டுமென, "அண்ணனே தெய்வம்'' எனக் கருதும் இலக்குவன் எதிர்பார்க்கிருன். இலக்குவனுக்கும், இராமனுக்குமிடையே இப்படிப்பட்ட ஒரு தகராறு தோன்றியதில்லை. தகராறு எழாத இலக்குவனை நோக்கி "உன்னைப் போலச் சுக்கிரீவன் நடந்துகொள்ள வேண்டுமோ?'' எனக் கேட்பதில் பொருள் இல்லை. தகராறுக்குள் அகப்பட்ட சுக்கிரீவனையும் பரதனையும் ஒப்பிட்டும் உறழ்ந்தும் காட்டிப் பேசுவது தான் பொருத்தமாகும். தேவையற்ற இடத்தில் இராமன் இலக்குவனைப் புண்படுத்துவது பொருந்தாது. பரதன் காட்டிற்கு வந்தபோது, அவனைச் சந்தேகித்த இலக்குவனுக்கு மனத்தில் உறைக்கச் சுட்டிக்காட்டிப்பேச வேண்டிய அவசியம்

ஏற்பட்டது. இங்கே அதற்கு அவசியமில்லை. அதீதமான ஒரு பண்பைச் சுக்கிரீவனிடம் இலக்குவன் எதிர்பார்க்கிறான். ''அவ்வளவு எதிர்பார்க்கக் கூடாது'' என்னும் அளவில் இலக்குவனை நிறவு செய்யவே பரதனை எடுத்துக் காட்டித் தெளிவு கூறுகிறான்.

வாலிக்கும் சுக்கிரீவனுக்குமிடையே போர் மூளுகிறது. இருவரும் கடுமையாக ஒருவரோடொருவர் பிடித்தும், கடித்தும் போரிடுகின்றனர். அப்போது இருவரும் ஒருவருக்கொருவர் தோற்காமல் போர் செய்கின்றனர். இதனைக் கம்பன்,

''வெருவிச் சாய்ந்தனர் விண்ணவர் வேறென்னை விளம்பில்
ஒருவர்க்கு ஆண்டு அமர் ஒருவரும் தோற்றிலர் உடன்று
செருவில் தேய்த்தலில் செங்கனல் வெண்மயிர் செல்ல
முரிபுல் காய்வரை எரிபரந் தன என முனைவார்''.

என்று கூறுகின்றான். வாலியோடு போய் மோதினவுடனேயே சுக்கிரீவனின் பலம் பாதி அவனிடம் போயிருக்க வேண்டுமன்றோ? ஒருவருக்கொருவர் சளைக்காமல் எப்படி ஒத்துநின்று போர் புரிகின்றனர்? என்னதான் இராமன் பக்கத்திலிருக்கிறான் என்ற துணிவு இருந்தாலும் பாதிப்பலம் இழந்த பிற்பாடு, எப்படி சுக்கிரீவன் ஒத்துப் போர் புரியமுடியும்?

வாலி மாயாவியோடும் போர் புரிந்தான்; துந்துபியோடும் போர் புரிந்தான். ''வாலி வலிந்து சண்டைக்குச் சென்றால் பாதிப்பலம் பெறமாட்டான்; அவனோடு மற்றவர் போய்ப் போரிட்டால்தான் பாதிப்பலம் இழப்பர்,'' என்று கருதுகிற திறனாய்வாளர்களும் உண்டு. மாயாவியும் துந்துபியும் வாலியோடு வலிந்து சண்டைக்கு வந்தவர்கள்தாம். வாலி அவர்களோடு வலிந்து சண்டைக்குப் போகவில்லை, ஆகவே, அந்தத்திறனாய்வாளர்களின் கருத்துப்படி, மாயாவியும் துந்துபியும் உடனே பாதிப்பலத்தை இழந்திருக்க வேண்டும் அன்றோ? மாயாவி பலம் இழக்கப்பெறுவதை அறிந்து

பிலத்துக்குள் ஓடினான். அவனைத் தேடிப்பிடிக்க இருபத்தெட்டு மாதங்கள் சென்றன என்பது சரியே. ஆனால், துந்துபியோ அப்படி ஓடவில்லை. வாலியும் துந்துபியும் கடுமையாகத் தமக்குள் மறபோர் செய்கின்றனர். வாலி துந்துபியைக் கொல்ல ஓராண்டு சென்றது எனக் கம்பன் சுக்கிரீவன் வாயிலாகக் கூறுகிறான்.

"புயலும் வானகமும் அப் புணரியும் புணரிசூழ்
அயலும் வீழ் துளியால் அறிவரும் தகையவா
மயனின்மா மகனும் வாலியும் மறத்து உடலினர்
இயலும்மா மதியம்ஈ ராறும் வந்து எய்தவே."

"இயலும் மாமதியும் ஈராறு", என்றால் பன்னிரண்டு மாதங்கள் என்று பொருள். பாதிப் பலம் போன துந்துபி ஓராண்டு காலம் எப்படி ஒத்துப்போர் செய்வான்?

மோதுவோர் பலம் மெல்ல மெல்லத்தான் வாலியிடம் செல்லும் என்றால், இராவணனை உடனே வாலினால் கட்டியிருக்கிறான்; மாயாவி உடனே பலம் போவது அறிந்து பிலத்திற்குள் ஓடியிருக்கின்றான். இதனால் மெல்ல மெல்லச் செல்லும் என்பதும் பிழையாகிறது. உடனே செல்லுமென்றால், துந்துபியோடு, ஓராண்டு போர் புரிந்ததற்குக் காரணம் இல்லாமல் போகிறது. முடிவு தான் என்ன?

இங்கேதான் வாலியின் வரபலம் பற்றிய மற்றொரு மர்மம் வெளியாகிறது. வாலி கிட்டுவார் பலத்தில் பாதிபலம் பெறுவான் என்பது உண்மையே. ஆனால், அவன் விரும்பினால்தான் எதிரியின் பாதிபலம் அவனுக்கு வரும். விரும்பாவிட்டால் வராது. மாயாவியை அனுமன் குலப்பகைவன் என்று கூறுவதைக் காண்கிறோம். மாயாவி குலப்பகைவனாக இருந்ததால் அவனை உடனே கொல்ல வேண்டுமென எண்ணி வரத்தை வாலி பயன்படுத்தியிருக்கிறான். இராவணன் சிவ பூஜைக்கு இடையூறாகத் தன்னை வந்து பிடித்ததால் உடனே வரபலத்தைப் பயன்படுத்தி அவனை வாலினால் கட்டியிருக்

கிருன். இந்த மாதிரியான சூழ்நிலைகளில்தான் வாலி வரபலத்தைப் பயன்படுத்தியிருக்கிருனேயன்றி, மற்ற நிலைகளில் தன் இயற்கைப்பலத்தைக் கொண்டே போரிட்டிருக்கிருன். சுத்த வீரனுதலால் எதிரிகளைத் தன் இயற்கைப் பலத்தால் வெல்லவே வே அவன் கருதியிருக்கிருன். துந்துபியோடு, ஓராண்டு போரிட்டதற்கு இதுவே காரணமாகும். இப்பொழுது சுக்கிரீவனேடு போரிடும் போதும் வரபலத்தைப் பயன்படுத்தாமல் தன் இயற்கை வலியோடு போரிடுவதால்தான் இருவரும் ஒத்துப்போர் புரிய முடிகிறது. இந்த உண்மையை அறிந்தால் வாலியின் சுத்த வீரத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. வாலிக்கு நேரே வருவதால் பாதிப் பலம் போவதில்லை. அவனேடு மோதிப்போரிட்டால்கூட அவன் விரும்பினுல்தான் பாதிப்பலம் போகும் என நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

சுக்கிரீவனைத் தவிர வேறு யாரிடத்தும் வாலி அறம் பிறழ்ந்து நடந்ததில்லை. மாயாவியோ சரணுகதியடையவில்லை, தப்பியோடி மீண்டும் வந்து போர் புரியவே எண்ணினுன். குலப்பகைவனுகிய அவனை விடக்கூடாது என்றுதான் பிலத்தினுள் தொடர்ந்து சென்று அவனைப் பிடித்துக் கொன்ருன். துந்திபியும், இராவணனும் வலியச் சண்டைக்கு வந்தவர்கள். இராவணன் கெஞ்சித் தன்னைக் காக்குமாறு வேண்டினுன். சுந்த வீரனுகிய வாலி அவனுக்கு அபயம் வழங்கியதில் தவறில்லை. அப்பொழுது இராவணன் சீதையைத் தூக்கிப் போகவுமில்லை. எனவே வாலியின் நடத்தையில் சுக்கிரீவனைப் பொறுத்தமட்டில் தான் குற்றம் காண்கிருேம். ஊருக்கு நல்லவன்; உற்ற தம்பிக்குக் கொடியவன் என்னும் முறையில் தான் வாலி நடந்துகொண்டிருக்கிருன். சுக்கிரீவன் மனைவியைக் களங்கப்படுத்திய ஒன்றே இராமனுக்கு வாலியின்பால் சினம் விளைவித்தது.

> "எனைத்துயராயினும் என்னும் தினைத்துணையும்
> தேரான் பிறனில் புகல்".

என்னும் திருக்குறள் கருத்தின்படி, வாலி எதத்னே மேம்பட்டவனுக இருந்தாலும் ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி நஞ்சு என்பதைப்போல பிறனில் விழைந்த குற்றத்தால், வீழ்ந்து போகிருன். பிறனில் விழைந்த குற்றம் எத்தனே கொடியது என்பதைக்காட்டவே கம்பன் வாலியின் பல நலங்களேயும் எடுத்துச் சொல்கிருன்.

வாலி வலிந்து யாரோடும் சண்டைக்கு போனுல், பாதிப் பலம் போகாது என்று சொன்ன திறனுய்வாளர்கள் பிலத்து வாரத்தினின்றும் வெளி வந்த வாலி சுக்கிரீவனேடு வலியத் தான் சண்டைக்குப் போகிருன் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனுல், சுக்கிரீவன் வாலியிடம் நிற்க முடியாமல் ஒடி ஒளிகிருன். அப்டியானுல், வாலிக்கு இயற்கைவலிமையே மிகுதியாக இருந்திருக்க வேண்டும் என்பது புலனுகிறது. ஆனுல் அந்தத் திறனுய்வாளர்கள் வாலிக்கு இயற்கை வலி குறைவு என்று கூறுகிருர்கள். இது முன்னுக்குப் பின் முரண்என்பதைக் கூறவேண்டுவதில்லே. வாலியோடு சுக்கிரீவன் ஒத்துப்போர் புரியக்கூடிய வலிமை வாய்ந்தவன்தான். ஆனுல் நெடு நேரப்போரில் வாலிக்கு இயற்கையாகவே வலிமை கூடுதலாக உண்டாதலால் சுக்கிரீவனே வீழ்த்தி விடுகிருன். இங்கேயும், அதுபோலத் தான் சிறிது நேரம் ஒத்து இருவரும் போர் புரிந்த பின்னர் வாலி அவனே வீழ்த்த முனேகின்ருன். அதுசம்யம் அவன் பிடியினின்றும் ஒருவாருகத் தப்பி அவன் ஸ்ரீராமனிடம் ஓடி வருகிருன்.

ஏன் இன்னும் அம்பை எய்யவில்லே என்று இராமனிடம் சுக்கிரீவன் மிகுந்த கலக்கத்தோடு வினவுகிருன். "உங்கள் இருவருக்குள் 'அடையாளம் காணமுடியவில்லே. இதனுலேயே தாமதித்தேன். அடையாளத்திற்காக ஒரு கொடிப் பூமாலேயை அணிந்து செல்" என்று சொல்லி இராமன் அவன் கழுத்தில் ஒரு பூமாலேயை அணிவித்து அனுப்புகின்ருன். இவ்விடத்தில்

இராமன் மனத்தில் தடுமாற்றம் இருந்ததால், அம்பெய்யத் தாமதித்திருக்கிருன் எனச் சிலர் சொல்வதுண்டு. இருவரும் ஒத்துப் போர் புரிந்தமையால், உண்மையில் அடையாளம் தெரியாமல்தான் தாமதித்திருக்கிருன். சுக்கிரீவன் வாலியால் வீழ்த்தப்படப் போகின்ற சமயம் இராமன் அடையாளம் தெரிந்து அம்பெய்திருக்கலாம். ஆனால், அதற்குள் அவசரப் பட்டுச் சுக்கிரீவன் ஓடிவந்து விட்டான். இதற்காகத்தான் பூமாலே அணிவித்து அனுப்புகின்ருன்.

மீண்டும் சுக்கிரீவன் வாலியிடம் சென்று மோதுகின்ருன். இலக்கு வாய்ப்பதற்காக இராமன் பொறுத்திருக்கின்ருன். "சுக்கிரீவன் தோற்கிருனு?" எனப் பார்த்து, அவன் தோல்வி யுறக் கண்ட பின்னரே இராமன் அம்பெய்கிருன் என்று சிலர் சொல்வதுண்டு. அப்படியானல் அடையாளப் பூமாலே வேண்டுவதில்லே. இலக்குக்காகவே காத்திருக்கிருன். சிறிது நேரத்தில் வாலி சுக்கிரீவனே மேலே தூக்கி எடுத்துக் கீழே தள்ளிக் கொல்ல முற்படுகின்ருன். அவன் மார்பகம் இப்போது இராமனுக்கு இலக்காகிறது. உடனே இராமன் தன் பாணத்தைத் தோளுற வாங்கி வாலி மீது தொடுக்கிருன். பாணம் வாலியின் மார்பில் பாய்கிறது. வாழைப்பழத்தில் ஊசி செல்வது போல அது சென்றது எனச் சொன்ன கம்பன் திடீரென "நின்றது என் செப்ப" என்கின்ருன். இதற்கு எப்படி பொருள் கொண்டாலும், இராமபாணம் வாலியின் மார்பை ஊடுருவி வெளியே செல்லவில்லே என்பதை யாரும் மறுக்க முடியாது. மராமரச் சோதனேயால் வாலியின் வலிமையை விடப் பன்மடங்கு வலியுடையது இராமபாணம் என்பதை நாம் அறிவாம். "சொல்லொக்கும் கடிய" வேகமுடைய அப்பாணம், உடனே வாலியின் மார்பைத் துளேத்து வெளியே சென்றிருக்க வேண்டும். வாலியின் வலியைவிடப் பன்மடங்கு வலியுள்ள அந்த இராமபாணம் வாலியின் பிடியில் அகப்பட்டு அவன் பிடித்து இழுத்து வெளியே பார்க்கும் அளவிற்கு எப்படி நின்றது? வாலி தன் இயற்கை வலியால் தன்னிலும் பார்க்கப்

புன்மடங்கு வலியுள்ள இராமபாணத்தை நிறுத்தினுன் எனச் சொல்வது பொருளற்றது. வர பலத்தால் இராமபாணத்தின் பாதி வலியை வாலி வாங்கியிருந்தான் என்ருல் அதனை எளிதில் முறித்திருப்பான். அவனுல் அதனை முறிக்க முடிய வில்லை. மார்பினுள் பாய்ந்த அதனைப் பிடுங்கிப்பார்க்கத்தான் அவனுல் முடிந்தது. வரபலம் மோதுவாரிடத்தே செல்லுமே யேன்றி மோதுகின்ற சடப்பொருளிடத்தே செல்லாது. பின் எப்படிப்பாணம் வாலியின் பிடியுள் அகப்பட்டது? கம்பன் விளக்கம் சொல்லவில்லை. ''நின்றது என் செப்ப'' என்று சொல்லித் தன் வியப்பை மட்டும் காட்டுகின்ருன். ''சொல்ல நின்றது என்'' என்று இதற்குப் பொருள் செய்தால் பாணம் அவன் மார்பை விட்டு. வெளியேறி இருக்க வேண்டும். "நின்ற தென் செப்ப'' என்பதற்குக் கம்பன் அது நின்றதை எப்படிச் சொல்வது எனத்திகைக்கிருன் என்றே பொருள் கொள்ள வேண்டும். வாலி நிறையச் சிவபூஜை செய்தவன். அச்சிவ பூஜையின் பலன் அவனுக்கு ஞானத்தைக் கொடுத்து வீடு பேற்றை அளிக்க வேண்டும். அவன் செய்த ஒரு பிழையால் வீடு பேறு தாமதித்து நிற்கிறது. இராம பாணத்தால் த்ண்டனையுற்றதும் அப்பிழை நீங்கி வீடு பேற்றுக்குத் தகுதி யுடையவனுகின்ருன். பாணம் முழுதும் பாய்ந்து வெளியே ஓடிவிட்டால் அந்தக் கணமே வாலி உயிரிழந்து விடுவான். இராம தரிசனம் பெற்று வீடு பேறுபெற வாய்ப்பில்லாமல் போகும். வாலி செய்த சிவ பூ ஜை யி ன் ஆற்றல் இவ் விடத்தே துணையாக நின்று அவன் பாணத்தைப் பிடுங்கிப் பார்க்க வாய்ப்பளித்தது எனக் கொள்வதே பொருத்தமாகும். வாலி இராம பாணத்தைத் தன் பிடிக்குள் அகப்படுத்திக் கொண்டு, இராமனை நோக்கிப் பேசியபின் அவனுக்கு இராமன் விடைகூறும் பொழுது,

''காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்
பாலின் ஆற்றிய பத்தி பயத்தலான்
மாலினு ற்றரு வன்பெரும் பூதங்கள்
நாலினு ற்றலும் மாற்றுழி நண்ணினுய்''

என வாலியின் சிவபூஜைத் திறத்தைப் பாராட்டிக் கூறுகின்ருன். இராம பாணத்தை அவன் சிவ பூஜையின் ஆற்றலால் தான் பிடித்து நிறுத்தியிருக்கிருன் எனக் கம்பன் குறிப்பாகப் புலப்படுத்துகிருன் என்றே கொள்ள வேண்டும். வெளிப்படையாகக் கூருமல் குறிப்பால் உணர்த்துவது கற்போர் உள்ளத்தில் ஆழமாகப் பதியும் என்பதைக் கூற வேண்டுவதில்லை.

தான் பறித்தெடுத்த வாளியில் இராம நாமம் பொறித்திருப்பதைக்கண்டு வாலி துணுக்குறுகிருன். சுத்த வீரணுதலால் பயப்படவில்லை. எந்த இராமனை, ''அருளின் ஆழியான்'', என்றும் ''தனக்கும் தம்பிக்கும் நடைபெறும் போரில் அம்பு தொடுக்க மாட்டான்'' என்றும் சற்று நேரத்திற்கு முன் தாரையிடம் சொல்லி வந்தானே அந்த இராமனே தன் மீது அம்பு தொடுத்திருப்பதைக் கண்டு நாணம் கொள்கின்ருன். இராமன் அறந்தவறி விட்டான் என்றே வாலி கருதுகிருன். இது சமயம் வேறிடத்து நின்ற இராமன் வாலி கண்ணுக்குத் தெரியும் படியாக வந்து நிற்கின்ருன். இராமன் அறந் தவறி விட்டான் என்று வாலி கருதுவது போல் நாமும் கருதிவிடக்கூடாது என்பதற்கே கப்பன்,

''மறை திறம் பாத வாய்மை மன்னர்க்கு மனுவில்
சொல்லும்
துறைதிறம் பாமல் காக்கத் தோன்றினன் வந்து
தோன்ற''

என்று தன்கூற்ருகக் கூறுகின்ருன். இப்படிச் சொல்லுகின்ற கம்பன் இராமன் அறந்தவறவில்லை யென்பதை நிலை நாட்டாவிட்டால் தோற்றவனுவான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

வாலியை இராமன் பார்ப்பது பரம்பொருளைத் தரிசிப்பது போல இருந்தது என்பதை நாம் உணர்வதற்காகவே கம்பன்,

"கண்ணுற்றான் வாலி நீலக் கார் முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதே போலும் மாலைப்
புண்ணுற்ற தனைய சோரிப் பொறியொடும் பொடிப்ப [நோக்கி
எண்ணுற்றாய் என் செய் தாய் என்று ஏசுவான்
—இயம்பல் உற்றான்"

என்கின்றான். தன் பாணத்தால் உடனே மடிய வேண்டிய வாலி சிவபூஜையின் ஆற்றலால் அதைமறித்து நிற்பது கண்டு வியந்து அவனை மதித்து உரையாட விருப்பி இராமன் அவன் முன்வருகின்றான். இராமனைக் கண்ணுற்ற வாலி கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றான்.

''வாய்மையும் மரபும் காத்த மன்னவனின் மகன் நீ, இல்லறம் துறந்த நீ, என்தம்பிக்காக வில்லறம் துறந்து விட்டாய். பரதனுக்கு நீ முன்னவன். பிறரைத் தீமை செய்ய விடாமல் காக்கின்ற நீ தீமை செய்தால் நியாயமாகுமா? வீரத்தை அலறும்படியாக நீ செய்திருக்கிறாய். சீதையைப் பிரிந்து விட்டதால் திகைத்துப் போய் இங்ஙனம் செய்தாயா? அரக்கன் ஒரு தீங்கு செய்தால் அதற்காகக் குரக்கினத் தரசனாகிய என்னைக் கொல்லும்படி எந்த அறநூல் சொல்லு கிறது? இரக்கத்தை எங்கே உகுத்தாய்? என்மீது என்ன பிழை கண்டாய்? நேர்மை ஒழுக்கமெல்லாம் என்னைப் போல மெலியவர்களுக்குத் தாமோ? உன்னைப் போன்ற வலியவர் களுக்குத் தேவையில்லையா? போயும் போயும் கலிகாலம் ஒரு குரங்கின் மீதுதான் வரவேண்டுமா? உனக்கு யார் துணையும் வேண்டுவதில்லை. நீ நாட்டிலே ஒரு விதமாகவும், காட்டிலே ஒரு விதமாகவும் செயல் செய்யலாமா? வீரக்கழல் கட்டியவர்கள் என்ன கொடுமை செய்தாலும் அதனை இப்பொழுது வீரம் என்று சொல்லுகின்ற காலம் வந்து விட்டதா? என்னி டத்து நீ முறையில்லாத காரியத்தைச் செய்திருக்கும் போது இராவணன் முறையில்லாத காரியத்தைச் செய்தான் என்று கோபிப்பதில் அர்த்தமுண்டா? நாங்கள் இருவரும் போர் செய்யும்போது நீ ஒருவன் மீது அன்புகொண்டு மறைந்து

நின்று மற்றவன்மீது அம்புவிடுவது எப்படி நியாயமாகும்? இது வீரமும்அன்று, வாய்மையும் அன்று. கருணையும் அன்று. என் உடம்பு இந்த மண்ணுக்குப் பாரமும் அன்று; உனக்குத் துணை வேண்டுமென்றால் சிங்கத்தை விட்டு ஏன் முயலைத் துணைக்கொண்டாய்? சூரியன் மரபுக்கே ஒரு மறுவை உண்டாக்கி விட்டாய் அன்றோ? ஒருவன் வலிந்து வந்து என்னுடன் சண்டை போட நீ ஒளிந்து நின்று என் உயிரை உண்டுவிட்டு என் நேரில் வந்து நிற்பது வீரமாகுமா? நீ வாலியைக் கொல்லவில்லை; அறத்தின் வேலியை அழித்திருக்கின்றாய். நிராயுதன் மார்பில் அம்பெய்தது கோழைத்தனமேயன்றி வீரமன்று'' என வாலி மிகக் கடுமையாக இராமனை நோக்கி பேசுகிறான்.

பகையில்லாத என்மீது—ஒரு குற்றமும் இல்லாத என் மீது ஏன் நீ ஒளிந்து நின்று அம்புபோட்டாய் என்பதே வாலி வினவுகின்ற வினாக்களின் சுருக்கமாகும்.

இனி இராமன் இதற்கு விடை கூறத் துவங்குகின்றான். "நீ நெடுநாள் பிலத்துவாரத்திலிருந்து வராததால், ''யானும் பிலம் புகுந்து சாவேன்'' என உன் தம்பி பிலத்துக்குள் புக முயலும்போது, படைவீரர்களும் முற்றும் உணர்ந்த பெரியோர்களும் அவனைத் தடுத்து அரசுப் பொறுப்பேற்கும்படி செய்திருக்கின்றனர். திரும்பி வந்த உன்னைக் கண்டதும், அவன் மிகவும் மகிழ்ந்து உண்மை நிலையினை எடுத்துச் சொல்லி அரசையும் உனக்குத் திரும்ப நல்கி 'சரண், சரண்,'' என்று கதறி இருக்கின்றான். நீ அவனுக்கு இரக்கம் காட்டாமல் அடித்தும், உதைத்தும் கொல்ல முயன்றிருக்கின்றாய்.

''ஊற்றம் உற்றுடையான் உனக்கு ஆர அமர்
தோற்றும் என்று தொழுதுயர் கையனைக்
கூற்றம் உண்ணக் கொடுப்பேன் என் றெண்ணினாய்
நாற்றிசைக்கும் புறத்தையும் நண்ணினான்."

சுக்கிரீவன் தொழுதுயர் கையனாய் இருந்தும், நீ அவனைக் கூற்றம் உண்ணக் கொடுக்க எண்ணியது எவ்வளவு பெரிய

கொடுமை? அவன் தஞ்சம் புகுந்த மலே, நீ ஏற முடியாத சாபத்தை உடையதாய் இருந்ததாலேயேஅவன் உயிர் பிழைத்திருக்கின்ருன். இல்லாவிடில் இறந்து போயிருப்பான். நீ இரக்கத்தை எங்கே உகுத்தாய்? பின்னவன் என்றும் பேணுது கொல்ல முயன்றிருப்பதோடு, அவன் மனேவியையும் கைம் பற்றிக் களங்கப்படுத்தியிருக்கிருய். இதுதான் நியாயமா?

"ஈரமாவதும் இல்பிறப் பாவதும்
வீரமாவதும் கல்வியின் மெய்ந்நெறி
வாரமாவதும் மற்ருெரு வன்புணர்
தாரமாவது தாங்கும் தருக்கரோ"

"தருமம் இன்னதெனும் தகைத் தன்மையும்
இருமையும் தெரிந்து எண்ணலே எண்ணிஞல்
அருமை உம்பிதன் ஆருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினே எய்தப் பெருதியோ?

பிறன் மனேவியை விரும்பிய உன்னே எங்ஙனம் மன்னிப்பது? உனக்கும் எனக்கும் சொந்தப் பகையில்லே. ஆனுல் எளியவன் ஒருவனே வலியவன் ஒருவன் துன்பப் படுத்திஞல், அந்த எளியவனுக்குத் துணேயாகச் சென்று அவன் துயரை தீர்க்க வேண்டுவது என் கடமை.

"ஆதலானும் அவன் எனக்கு ஆருயிர்க்
காதலான் என லானும் நிற் கட்டனென்
ஏதிலாரும் இடருற்ருர் எனில்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ."

அடுத்த வீட்டுக்குள் திருடன் புகுந்து அடிக்கும்பொழுது நாம், நமக்கென்ன? என்று இருந்தால் அது குற்றம் செய்யாமை ஆகாது. நாம் ஒரு பாவமும், செய்யாவிட்டாலும், அந்த வீட்டுக்காரருக்குத் துணேபோகாமல் இருந்தது ஒரு பாவமே யாகும். உதவி செய்யப்போகாவிட்டாலும், "நான் சும்மா தானே என் வீட்டில் இருந்தேன், எனக்கு எப்படிப் பாவம் வரும்? '' என்று கேட்கக்கூடும். செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாவிட்டாலும் பாவம்தான். வாலிக்கும் இராம

னுக்கும் எந்தப் பகையும் இல்லாவிட்டாலும், சுக்கிரீவனுக்கு அவன் துயர் இழைத்ததால், எளியவனைக் காக்க வேண்டும் என்னும் கடமை பற்றி இராமன் துணை செய்ய வேண்டுவதாயிற்று. வாலி பிறனில் விழைந்து விட்டானாதலால் அவனைக் கொலைத் தண்டனைக்கு உள்ளாக்கவேண்டுவது நியாயமே. இதனாலேயே தான் அவன் மீது அம்பு தொடுத்ததாக இராமன் கூறுகிறான்.

வாலி இராமன் சொன்ன குற்றச்சாட்டுகளுள் சுக்கிரீவனைக் கொல்ல முயன்ற குற்றத்தை மறுக்கவில்லை. அது பற்றிப் பேசாது விட்டுவிடுகின்றான். இதனால் அந்தக் குற்றத்தை அவன் ஒப்புக் கொள்கிறான் என்பது தெளிவு. ஆனால் சுக்கிரீவனின் மனைவியைக் கைப்பற்றிய குற்றச்சாட்டுக்கு விடை கூற முயல்கிறான். அவ்விடையிலிருந்து அவன் அவளைக் களங்கப்படுத்தியிருக்கிறான் என்னும் செய்தியை ஒப்புக் கொள்கிறான் என்பது தெரிகிறது. ஆனால் அது ஒரு குற்றமான செயல் அன்று என்று அவன் சொல்கிறான். மனித சமுதாயத்தில் இருப்பது போன்ற திருமணச் சடங்குகளும் கற்பொழுக்க முறைகளும் குரங்குகளுக்கு இல்லை என்பது அவன் கூற முயல்கின்ற சமாதானமாகும்.

"ஐய நுங்கள் அருங்குலக்கற்பின் அப்
பொய்இல் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சிபோல்
செய்தி லன்எமைத் தேமலர் மேலவன்
எய்தின் எய்திய தாக இயற்றினான்"
"மணமும் இல்லை மறைநெறி வந்தன
குணமும் இல்லைக் குலமுதற்கு ஒத்தன
உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கலால்
நிணமும் நெய்யும் இணங்கிய நேமியாய்."

வாலி நன்கு கற்றவன். மிகப் பெரியவர்கள், தாம் செய்யும் தவறுக்கு இப்படித் தம் அறிவுத் திறமை கொண்டு போலிச் சமாதானம் சொல்வதை இன்றும் நாம் காண்கின்றோம். வாலியின் சமாதானத்தை இராமன் வன்மையாக மறுக்கிறான்.

"பொறியின் யாக்கைய தோபுலன் நோக்கிய
அறிவின் மேலதன் ருே அறத் தாறுதான்
நெறியும் நீர்மையும் நேர் நின்றுணர்ந்த நீ
பெறுதி யோபிழை உற்றுறு பெற்றிதான்."

"நீ பிறப்பால் விலங்குதான், ஆனுல் அறிவால் தேவன். ஒழுக்கம் அறிவைப் பொறுத்துக் கணிக்கப்படுமே யன்றி உடம்பைப் பொறுத்துக் கணிக்கப்படாது; தக்கது தகாதது என்பதை அறியாத மனிதன் விலங்கேயாவான்; அறிந்த விலங்கு மனிதனேயாகும். அதனிலும் அது வேதங்களைக் கரை கண்டிருந்தால் தேவனேயாகும். எனவே ஒருவன் மனைவியின் மாட்சியை அழித்த உன்னை மன்னிப்பதற்கில்லை'' என்பதே இராமன் மறுத்துக் கூறும் விடையாகும். இவ்விடை நியாயமானதே என்பதை நாம் மறுக்க முடியாது, இந்த அளவில் வாலி குற்றவாளி என்பதும், அவன் பிறனில் விழைதலாகிய உய்தியில் குற்றத்தைச் செய்திருப்பதால் கொலைத் தண்டனைக் குரியவன் என்பதும் நன்கு புலனுகும். பிறனில் விழைதல் என்னும் குற்றம் உய்தியில்லாத ஒரு குற்றம் என்பதை விளக்குவதே வாலி வதமாகும். கம்பன் இந்தக் கருத்தில்தான் வாலி வதையை அமைத்திருக்கிருன். பிறனில் விழைந்த குற்றத்தைத் சாமான்யமான ஒன்ருக நாம் கருதினுல் கம்பன் காட்டும் அருமை நமக்குப் புலனுகாது. கிட்கிந்தா காண்டத்தை நுணுக்கமாக ஆராய்ந்தால் கம்பன் இதனைப் பெரியதோர் குற்றமாகக் கொண்டு பாடல்களை அமைத்திருக்கின்ருன் என்பது நன்கு விளங்கும்.

வாலி கொல்லப்பட வேண்டியவன் என்பது சரியே. ஆனுல், அவனை ஒளிந்து நின்ரு கொல்ல வேண்டும்? கொல்லப்படவேண்டியவனை எப்படி கொன்ருல் தான் என்ன என்று கேட்பது தவறு என்பதை முன்னரே விளக்கியிருக்கிருேம்.

இராமன் ஏன் ஒளிந்து நின்று கொன்ருன் என்பதற்கு நாமாகக் காரணங்கள் கற்பிக்கக் கூடாது. கம்பன் என்ன சொல்கிருன் என்றே பார்க்கவேண்டும்.

கம்பன் வாலி வாயிலாக இக் கேள்வியைக் கேட்க வைத்திருக்கிறன். அப்படியானுல், அவனிடம் அதற்கு ஒரு விடை இருக்கத்தானே வேண்டும்? சரியான விடை தன்னிடம் இல்லாவிட்டால் வாலியை இவ்வாறு கேட்கும்படி, அவன் செய்திருக்க மாட்டான். வாலியை உயர்த்திக்காட்ட வேண்டும் எனக் கம்பன் நினைத்திருப்பானுனல்,

"மறைதிறம் பாத வாய்மை மன்னர்க்கு மனுவில்
சொல்லும்
துறை திறம்பாமல் காக்கத் தோன்றினன் வந்து
தோன்ற'

எனத் தன் கூற்ருகப் பாடியிருக்கமாட்டான். இராமனை உயர்த்துவதுதான், அவன் கருத்தாக இருக்கிறது. அப்படியானுல், ஒளிந்து நின்றதற்குரிய சரியான விடையைக் கம்பன் வைத்திருக்கவே வேண்டும். இயல்பிலேயே விடை இல்லாவிட்டால் இக் கேள்வியை எழுப்பாமலே விட்டிருப்பான். எழுப்பிச் சரியான விடை சொல்லாவிட்டால் அது கம்பன் திறமைக்கு இழுக்காகமுடியும்.

"அவ்வுரை அமையக் கேட்ட அரிகுலத்து அரசும் மாண்ட
செவ்வியோய் அனையதாகச் செருக்களத்து
உருத்தெய்யாதே
வெவ்விய புளிஞர் என்ன விலங்கியே மறைந்து வில்லால்
எவ்வியதென்னை என்ருன் இலக்குவன் இயம்பலுற்ருன்."

மறைந்து நின்று நீ ஏன் கொன்ருய், என வாலி இராமனை நோக்கிக் கேட்ட கேள்விக்கு இலக்குவன் விடையிறுக்கின்ருன். இலக்குவன் ஏன் விடை சொல்ல வேண்டும்? இலக்குவன் சொல்லுகின்ற விடையை நோக்கினுல்தான் அது புரியும். இலக்குவன் பின்வருமாறு விடை சொல்கிருன்.

"முன்பு நின் தம்பி வந்து சரண்புக முறைஇலோயைத்
தென்புலத்து உய்ப்பன் என்று செப்பினன் செருவில்
நீயும்
அன்பினை உயிருக்காகி அடைக்கலம் யானும் என்றி
என்பது கருதி அண்ணல் மறைந்து நின்று எய்தது
என்ருன்"

இராமன் தகுந்த விடை சொல்ல முடியாமையால், இலக்கு வனைக் காட்டி விடுகிருன் என நாம் நினைத்தால் அது இராமனின் தோல்வியாகாமல் கம்பனின் தோல்வியாக முடியும். ''முன்பு உன் தம்பி வந்து சரண்புகுந்தான், முறை யில்லாத உன்னைக் கொல்வதாக என் அண்ணனுகிய இராமன் அவனுக்கு வாக்களித்தான். இப்போது நேரே வந்து போர் செய்தால், நீ அண்ணனைக் கண்டதும், உன் உயிரின் மீது பற்றுக் கொண்டு, அவன் காலில் விழுந்து, சரணுகதி தர வேண்டும் என்று கேட்டால் என்ன செய்வது என்று எண்ணியே அண்ணன் மறைந்து நின்று கொன்ருன்'' என்பதே இலக்குவன் விடையாகும். இராமன் சரணுகதி நாயகன் என்பதையும், வாய்மை காப்பவன் என்பதையும் முறையில்லாதவனைத் தண்டித்து அறத்தை நிலைநாட்டு வோன் என்பதையும் இப்பாடலில் இலக்குவன் எடுத்துக் காட்டுகின்ருன். இராமன், தான் இத்தகைய குணங்களை உடையவன் என்பதைத் தன் வாயாலேயே சொன்னுல், அது தன் பெருமைக் குணங்களைத் தானே எடுத்துச் சொன்ன தாக முடியும். இது தற்புகழ்ச்சியின்பாற் படுமாதலால், இராமன் தானே சொல்லாமல் இலக்குவனைச் சொல்ல விடுத்து வாளா நிற்கின்ருன். இது இராமனுக்குச் சிறப்பே யன்றி இழிவன்று. தகுதியான விடை தன் கையில் இல்லா மையால் இலக்குவனைச் சொல்லச் சொல்கிருன், என நினைப் பது காவிய நயத்தை உணர முடியாத நம் மனே நிலையையே புலப்படுத்தும்.

தமிழ்நாட்டில் கம்ப இராமாயண விரிவுரையாளர்கள் இலக்குவன் விடையை அலட்சியப்படுத்தியே இதுவரை வாலி வதைக்குக் காரணம் கூறி வந்திருக்கின்றனர். எதிரே வருபவர் பலத்தில் வாலி, பாதி வாங்கிவிடுவான் என அஞ்சி, இராமன் ஒளிந்து நின்று அம்பு எய்திருக்கிருன் என எல்லோரும் கருதி வந்ததால் இலக்குவன் விடை சாமர்த் தியமானது என ஒதுக்கி விட்டனர். 'எதிரே வந்தார் பலத்தில்

வாலி பாதி வாங்குவான்' என ஒரு வரம் அவனுக்கு இல்லை என்பதை மேலே மெய்ப்பித்தோம். அவனோடு மோதி அவன் பிடியில் அகப்பட்டால்தான் அதுவும் அவன் நினைத்தால்தான் பாதி பலம் போகுமாதலால் இலக்குவன் விடை சாமர்த்திய மானதன்று என்பது இனிது பெறப்படும். வரபலத்திற்கு அஞ்சி இராமன் உண்மையில் ஒளிந்திருந்தால் வாலி ''சரணு கதி அடைவான் என அஞ்சி இராமன் ஒளிந்தான்'' என இலக்குவன் சொல்வது மனச்சாட்சி அற்ற பொய்யுரை ஆவதோடு உண்மை அறிந்தவர்கட்கு நகைப்பையும், இராம இலக்குவர் மீது பெரியதோர் வெறுப்பையும் உண்டாக்கும் என்பது தெளிவு. எனவே, இவ்விடத்தில் இலக்குவன் பொய் சொல்கிறான், என்றால் அது கம்பன் காவியத்திற்கே இழுக் காகும். இலக்குவன் விடையைக் கேட்டதும் வாலி மனமடங்கி ஞானம் பெறுவதாகக் கம்பன் பாடுகிறான். இலக்குவன் சொன்ன பொய்யை வாலி நம்பி ஞானம் பெற்றான் எனக் கம்பன் காட்டினால் ஞானம் என்பதே நகைப்பிற்கு இடமாகி அவன் காவியத்தையே கெடுத்துவிடும். பொய் சொல்ல வைப்பதற்கு வேறு இடமில்லையா? ஞானம் பெறுகின்ற இறுதி நேரத்தில் ஞானம் வழங்குகின்ற இராமனின் தம்பியைப் பொய் சொல்ல வைப்பது பொருத்தமாகுமா? யுத்தத்தின் இடையில் பொய் சொன்னால், ஒருவேளை அதனை யுத்த தந்திரம் என்ற முறையில் அமைதி காணலாம். ஞானம் பெறுகின்ற இடத்தில் பொய் சொன்னால் அது அமைதியையே காணமுடியாத நிலையினை உண்டாக்கும். கம்பனுக்கு மதிப்பளிப்பதாயிருந்தால் இலக்குவன் விடையை முழு உண்மை என்றே கொள்ள வேண்டும். இலக்குவன் பாட்டை இடைச் செருகல் என்று தள்ளினால் ஞானம் பெறுவதற்குரிய பாட்டில்லாமல் கதைத் தொடர்பு அறுந்து காட்டும். ஆகவே இதனை அவ்வாறு தள்ள இயலாது.

வரபலப் பிழையைத் தள்ளினால்தான் இலக்குவன் கூற்று நமக்கு விளங்கும். எதிரே வந்தால் பலம் பாதி போகாது.

இராமனின் வில்லாற்றல் முன்னே வாலி நிற்க முடியாது. மராமரச்சோதனையால் இது ஐயந்திரிபுக்கு இடமின்றி மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. விரைவும் வேகமும் வாய்ந்த இராமனின் அம்பு நேர் நின்று எய்யப்பட்டிருக்குமானால், வாலி தாவி இராமனைப் பிடிக்குமுன்னே அது அவன் மார்பினில் நுழைந்திருக்கும். வாலி இறந்தேயிருப்பான். எனவே, இராமன் அச்சமின்றி நேரே வந்திருக்கலாம். மறைந்திருக்க வேண்டிய அவசியமேயில்லை. பின் ஏன் மறைந்து நின்றான்?

வாலி இராமன் மீது அதிக ஈடுபாடு கொண்டவன். இதனை நாம் உணர்வதற்காகவே தாரை-வாலி உரையாடலை கம்பன் அமைத்திருக்கின்றான். இராமன் மீது ஈடுபாடு கொண்ட வாலி அவனை நேரில் கண்டால் நிச்சயம் சரணாகதி அடையவே செய்வான். யார் சரணாகதி அடைந்தாலும் இராமன் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். சுக்கிரீவனுக்கு முன் வாலி சரணாகதி அடைந்திருந்தால், இராமன் ஏற்றுக் கொண்டேயிருப்பான். ஆனால் அவன் பிறனில் விழைந்த குற்றத்தை அறிந்ததும், சுக்கிரீவனிடம் மனைவியை விடுவிக்குமாறு செய்து, அரசையும் அவனிடம் ஒப்புவித்து, வாலியைக் காட்டிற்குச் சென்று தவம் செய்யுமாறு பணித்திருப்பான். இப்படிச் செய்திருந்தால் பிறனில் விழைதல் என்னும் குற்றம் உய்தியில் குற்றமாகாமல் மன்னிப்புக்குரிய குற்றமாகிவிடும். இராமன் பிறனில் விழைதலை உய்தியில் குற்றமாகக் கொண்டவன். அதற்கு மரணத்தைத் தவிர வேறு தண்டனை யில்லை என்றும் கருதியவன். இதனால்தான் தரும தேவதை இயல்பாகவே வாலியை, இராமனை முன்னரே சந்திக்க இயலாமல் செய்துவிட்டது. சரணம் புகுதற்குத் தகுதியுடைய சுக்கிரீவனையே முதலில் சந்திக்குமாறும் அது செய்தது. சுக்கிரீவனைச் சந்தித்து விவரம் அறிந்ததும் வாலி சரணாகதி பெறுவதற்கு வாய்ப்பளிக்க இராமன் அறவே விரும்பவில்லை. பிறனில் விழைந்தானைத் தண்டிக்கவே அவன் விரும்பினான். இதனால்தான், வாலியை அழைத்து விசாரிக்கவும்-தூது

அனுப்பவும் அவன் முயலவில்லை. பிறனில்லைக் கெடுத்த வனுக்கு எந்த விதமான நீதி விசாரணையும் தேவையில்லை என்றே அறத்தின் நாயகனான இராமன் கருதுகிறான். இம் முடிவுக்கு வந்த இராமன் எப்படி வாலிமுன் நேரில் தோன்ற முடியும்? வாலியோடு போராடுவதற்கு இராமன் அஞ்சவில்லை. அதற்குரிய வில்பலமும் அவனுக்குண்டு. ஆனால், சரணாகதி அடைந்து விட்டால் என்ன செய்வதென்றே அஞ்சினான். முறையில்லாதானுக்குச் சரணாகதி அளிக்க விரும்பவில்லை யாதலால் ஒளிந்து நிற்க வேண்டிய நிலை அவனுக்கு ஏற்பட்டது. வரபலத்திற்கு அஞ்சி இராமன் ஒளிந்திருந் தானானால் என்ன சமாதானம் சொன்னாலும் அது குற்றமே யாகும். ஏனெனில் அந்த ஒளிவு போரில் நேர் நின்று வெல்ல முடியாது என்னும் காரணத்திற்காக நிகழ்ந்தது என்றாகி அறத்தின் நாயகனாகிய இராமனும் சூழ்ச்சி செய்தான் என்னும் குற்றத்திற்கு அவனை ஆளாக்கிவிடும். பிறனில் விழைந்தானைக் கொல்வேன் எனச் சுக்கிரீவனுககு அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றவும், பிறனில் விழைந்தானுக்கு உய்தியில்லை என்னும் உண்மையை அறிவுறுத்தவும் இராமன் ஒளிந்தமையால், அவன் உள்நோக்கம் புனிதமுடைய தாகின்றது.

எந்தக் குற்றத்தையும் அதன் உள்நோக்கம் கொண்டு தீர்மானிக்க வேண்டுமே அன்றிச் செயல் கொண்டு தீர்மானிக் கக்கூடாது. (The Court should determine the motive, before passing a sentence.) தீர்ப்பு வழங்கு முன்னர் நீதிமன்றம் குற்றம் செய்தவனுடைய நோக்கத்தை அறிய வேண்டும் என்பது இன்றைய சட்டத்திலும் காணப்படுகின்ற ஒரு விதியாகும்.

வாலி சுக்கிரீவனிடத்து இரக்கம் காட்டவில்லை, உடல் வலிச் செருக்கால் அவன் மனைவியையும் அபகரித்திருக் கின்றான். இதனால் அவன்மீது நாம் அனுதாபம் கொள்ள முடியாமற் போகிறது.

இராமன் நேரில்வந்து நின்று அம்பு தொடுத்திருத்தாலும், வாலி இறந்தேயிருப்பான். வரபலத்திற்காக அஞ்சி, இராமன் ஒளிந்திருந்து வாலியைக் கொன்றது கொடுமையாகத் தோன்றும். ஏனெனில் நேரில் வந்திருந்தால், வாலி வென்றிருப்பான் அன்றோ? ஆனால் நேர் நின்றாலும், வாலியை நிச்சயம் இராமன் கொன்றே இருப்பான் என்பதை அறிந்து கொண்டால் ''முடிவு ஒன்று தானே'' என்னும் உணர்வால் அதனைக் கொடுமை என நினைக்கும் எண்ணம் நீங்கிக் கொன்றமுறை நியாயமா?'' என்று கேட்கும் அளவில் நிற்போம்.

சுக்கிரீவனிடத்தில் வாலியை கொல்வதாக ஏன் இராமன் வாக்களித்தான்? ''முறையிலோயைத் தென்புலத்துய்ப்பன்'' என்பது இலக்குவன் கூற்று. வாலி முறையற்றதாகிய பிறனில் விழைதல் என்னும் உய்தியில் குற்றத்தைப் புரிந்துள்ளானதலால் அவனுக்கு மன்னிப்பளிக்காமல் கொலைத் தண்டனை அளிப்பதே நீதி என இராமன் தனக்குள் முடிவு செய்ததாலேயே அவனைக் கொல்வேன் என வாக்களித்தான். அவசரப்பட்டு வாக்களித்தான் எனச் சொல்வது அர்த்த மற்றது. இதனால், ஈண்டு வாய்மை காப்பதென்பது பிறனில் விழைந்தானைத் தண்டித்துப் பிறனில் விழையாமையாகிய அறத்தை உலகிடை நிறுத்துதலே என்பது போதரும்.

வாலியின் முன் தான் போய் நின்றால் அவன் சரணாகதி அடையக்கூடும் என ஏன் இராமன் எதிர்பார்க்க வேண்டும். சுத்த வீரனாகிய வாலி இறுதிவரை போர் செய்ய எண்ணலாம் அன்றோ? ''வாலியைக் கொல்வேன்'' என்று தன் வலிமையை நம்பி வாக்குறுதி அளித்தானே அன்றி வாலியின் வலியை அளந்து வாக்குறுதி அளிக்கவில்லை. வாலியை நன்கு அறிந்த சுக்கிரீவனும் அநுமனும் மராமரச் சோதனையைத் தான் அளவு கோலாக வைத்தனர். இதனால் வாலிக்கு மேற்பட்ட வலி தனக்குண்டு என்பதை உலகிற்கு மெய்ப்பித்தாகி விட்டது என இராமன் கருதுகின்றான் ''மராமரச் சோதனையின்

போது, தான் செய்த வில் நாணொலி உலகமெங்கணும் கேட்ட தால், வாலியும் அவ் வொலியைக் கேட்டுத்தன் ஆட்கள் மூலம் எல்லாச் செய்திகளையும் அறிந்திருப்பான். தான் அவன் நேரே சென்ருல், நான்கு வேதங்களையும் கரைகண்ட அவன், மனச்சான்றின் ஒறுப்பினுல் பிறனில் விழைந்த குற்றத்தை உணர்ந்து, சரணுகதியை வேண்டக்கூடும்'' என இராமன் எண்ணியே, மராமரச்சோதனை வரை மறைந்து நிற்பதைப் பற்றி ஒன்றும் சொல்லாதிருந்து அது முடிந்ததும், வாலியைக் கொல்ல முற்படும் பொழுது, திடீரெனச் சுக்கிரீவனிடம் இது பற்றிச் சொல்கிருன்.

வில் நாணொலி கேட்டுத்தான், தாரையும் தன் ஆட்கள் மூலம் இராமன் வந்த செய்தியை அறிந்திருக்கவேண்டும். வாலி தன் உடல் பலச் செருக்கால் இது பற்றி விசாரிக்காமல் அலட்சியமாக இருந்திருக்கின்ருன். இதுபற்றி விசாரிக்கா விட்டாலும், வாலி இராமன் மீது அளவற்ற ஈடுபாடு கொண் டவன் என்பதை அவனுக்கும் தாரைக்கும் இடையில் நடை பெற்ற உரையாடல் வெளிப்படுத்துவதால், இராமன் நேரில் வந்து நின்ருல் நிச்சயம் சரணுகதியை வேண்டியிருப்பான் என நாம் எதிர்பார்க்கலாம். எனவே, இராமன் எதிர்பார்த்தது நடக்கக்கூடியதே என்பது தெளிவு.

குற்றத்தை உணர்ந்தால், மன்னிப்பளிக்கலாம் அன்ருே? யார் கேட்பினும் சரணுகதி வழங்க வேண்டிய இராமன் வாலிக்கு மட்டும் ஏன் மறுக்க வேண்டும்? "பிறனில் விழைந்த குற்றம் பிறன் தாரம் சம்பந்தப்பட்ட ஒன்ருதலால், உணர்ந் தால் மட்டும் போதாது, அதற்குரிய தண்டனையையும் அனுபவித்துத்தான் தீர வேண்டும் ''என்பது இராமனின் கொள்கை. இதனுலேயே யாருக்குச் சரணுகதி அளித்தாலும், பிறனில் விழைந்தானுக்குச் சரணுகதி அளிக்க அவன் விரும்பவில்லை.

வேறு எந்தக் காவியத்திலும் காணப்படாத அளவு தன் காவியத்தில் பிறனில் விழைந்த குற்றம் கடுமையாகக் கண்டிக்

கப்பட வேண்டுமெனக் கருதிய கம்பன், சரணுகதி நாயகனுகிய இராமன் இக்குற்றத்திற்குச் சரணுகதி அளிக்க மறுக்கின்ருன் என்றும், அறத்தின் நாயகனுகிய அவன் இதற்காகப் போர் அறத்தையும் மீறி ஒளிந்து நின்று அம்பு தொடுக்கின்ருன் என்றும் காட்டுகின்ருன்.

''பிறனில் விழைந்தானைத் தண்டிக்கிறேன்'' எனக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது முக்கியமா? ஒளிந்து நின்று கொல்லக்கூடாதென்ற போர் அறவிதியைக் காப்பாற்றுவது முக்கியமா? இவ்விரண்டிலும் பிறனில் விழைந்தானைத் தண்டிப்பதாகத் தான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதே முக்கியம் என்றும் அதனுல் உலகிற்கு விளையும் நன்மையை நோக்கப் போர் அறவிதியை மீறுவது குற்றம் அன்று என்றும் இராமன் தீர்மானித்தே, ஒளிந்து நின்று அம்பு தொடுக்கின்ருன். அறம் பிறழ்வதற்கு மிக மிக அஞ்சும் அறத்தின் நாயகன் பிறனில்விழைந்த குற்றத்தின் கடுமையை காட்டுவதற்காகப் போர் அறவிதியினின்றும் பிறழுகின்ருன் என்ருல், அக்குற்றம் எவ்வளவு கொடியதென்பதை உணர வேண்டும் என்பதே கம்பன் உட் கிடக்கை. இராமன் போர் அறவிதியை எவ்வளவு வேதனையோடு மீறியிருக்கின்ருன் என்பதைக் காட்டுவதே ''இல்லறந் துறந்திலாதோர் இயற்கையை எதிர்ந்து போரில், வில்லையும் துறந்து வாழ்வேற்கு'' என அரசியற் படலத்தில் வரும் பாடலாகும். அது பற்றிப் பின்னர் ஆராய்வோம்.

பிறனில் விழைந்தானைத் தண்டித்துப் பிறனில் விழையாமையை உலகில் நிலை நாட்டுவதே பேரறம் என்றும் அதனை நோக்கப் போர் அறம் சிறியதென்றும், பேரறத்தைக் காப்பாற்றுவதற்காக மிக்க வேதனையோடு சிறிய அறமாகிய போர் அறத்தை மீறுவது குற்றம் அன்றென்றும் இராமன் வாயிலாகக் கம்பன் காண்கின்ற முடிவை மறுப்பவர்கள், ''போர்'' என்றும் விலக்கப்படக்கூடிய ஒன்றே ஆதலால் அதற்குரிய

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

விதியைக் காப்பாற்றுவதனினும் பார்க்க—மனித சமுதாயத்திற்கு என்றென்றும் இன்றியமையாத வாழ்வறமாகிய பிறனில் விழையாமையைக் காப்பாற்றுவது எவ்வளவு முக்கியம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

என்ன இருந்தாலும், போர் அறத்தை மீறியது குற்றமன்றோ என வினவலாம். கங்கை நீரில் அழுக்குச் சேர்ந்தாலும், அது தன் தூய்மை கெடாது விளங்குவது போலப் பேரறத்தைக் காப்பாற்றுதலாகிய செயலில், சிற்றறத்தை மீறுதலாகிய அழுக்குச் சேர்ந்தாலும், அச்செயல் தன் தூய்மை கெடாது குற்றமற்ற ஒன்ருகவே விளங்கும்.

மதுரையிலிருந்து தேவகோட்டைக்குச் செல்லும் பேருந்துவண்டி ஒன்றில் பாஸ்கரநாயர் என்பவர் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தார். ஒருநாள் அவர் மதுரையிலிருந்து தேவகோட்டைக்குப் பேருந்து வண்டியை ஓட்டி வரும்போது, மேலூர் அருகே நெடுஞ்சாலையின் நடுவில் நான்கு வயதுக் குழந்தை ஒன்று புரியாமல் ஓடிவருவதைத் திடீரெனக் கண்டார். குழந்தை வண்டியின் அருகே வந்து விட்டதால், உடனே நிறுத்தினுலும் அது குழந்தை மீது ஏறித்தான்நிற்கும் என்பது புலனுகியது. வலப்பக்கம் திரும்பிப் பார்த்தார். பசுமாடு ஒன்று அமைதியாகச் சென்றுகொண்டிருந்தது. பசுவை அடித்தாலும் குற்ற மில்லை; குழந்தை தப்பினுல் போதும் என்று எண்ணி அவர் வண்டியை வலப்பக்கம் திருப்பினுர். அது பசுமீது ஏறிச் சென்று, நின்றது. மாடு அவ்விடத்திலேயே மாண்டது; குழந்தை உயிர் தப்பியது. பசுவின் சொந்தக்காரர், இழப்பீடு தரவேண்டும் என நாயர் மீது வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி, ''குழந்தையைக் காக்கவேண்டும் என்னும் நோக்கத்தில், பசுவைக் கொல்ல நேர்ந்ததால் அது குற்றமாகாது; இத்தகைய சூழ்நிலையில் நாயர் வேறு என்ன செய்யமுடியும்? பசுவின் சொந்தக்காரர், அவர் என்ன செய்ய

வேண்டுமென எதிர்பார்க்கிருர்? குழந்தையை அடித்துத் தன் பசுவைக் காப்பாற்றியிருக்க வேண்டுமென நினைக்கின்ருரா? நாயர் செய்ததுதான் சரி. இதுதான் செய்யப்பட வேண்டிய ஒன்றுமாகும். இதில் இழப்பீடு கேட்பதற்கோ, அபராதம் விதிக்க வேண்டும் என்பதற்கோ சிறிதும் இடமில்லை. நாயரை நான் மன்னிக்கின்றேன் என்பதன்று இதன் பொருள். அவர் செய்ததே சரி என்பதே என் தீர்ப்பு'' எனக்கூறி நாயரை விடுதலை செய்தார். இது போலப், "பேரறத்தைக் காப்பாற்றுவதற்காக இராமன் சிற்றறமாகிய போர் அறத்தை மீறியது சரியே; இதில் அவனை மன்னிக்க வேண்டும் என்பதன்று; அவன் செய்ததே சரி; அதுவே செய்யப்பட வேண்டிய ஒன்று'' என்று நாம் முடிவு செய்ய வேண்டியவர்களாகிருேம்.

பசுவின் சொந்தக்காரர் மீது நாயருக்கு ஏற்கனவே விரோதம் இருந்து, குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கமிருந்தாலும், விரோதத்தையும் ஓரளவு நினைவு கொண்டு பசுவை அடித்திருந்தால் குழந்தை காப்பாற்றப் பட்டிருந்தாலும் அதுகுற்றமேயாகும். இராமன் பேரறத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கு இருந்தாலும், வரபலமுடைய வாலி முன்சென்ருல் தோற்றுப்போய் விடுவோம் என எண்ணி, மறைந்து நின்று அம்பெய்திருந்தால், பேரறம் காப்பாற்றப்பட்டிருந்தாலும், நோக்கில் சூழ்ச்சி இருந்திருந்ததால் அது குற்றமாகவே கொள்ளப்படும். ''நேர் வந்து நின்ருர் பலத்தில் பாதி பெறுவதென்பது'' கம்பனில் காணப்படாத ஒன்ருதலால், இராமனுக்கு அந்த எண்ணம் தோன்ற அறவே இடமில்லை. சிறிய அறம் என்ருலும் தன்னல நோக்கோடு மீறப்பட்டிருந்தால் அது குற்றமேயாகும். நோக்குத் தூயதாக இருந்தால் சிறிய அறம் மீறப்படுவதால் விளையும் தீமையைச் சரிப்படுத்தி இருதரப்பார்க்கும் நன்மை விளையுமாறு செய்வது அறக்கடவுளின் இயல்பாகும். வாலி சிவபூஜகனுதலால் வீடு பேறு அடைதற்குரிய எல்லாத் தகுதியும் பெற்றிருந்தும், பிறனில் விழைந்த குற்றத்தால் தடையுண்டு

நிற்கிருன். இராமனின் தண்டனை அம்மாசினை நீக்கி விடுகிறது. வாலி ஞானம் பெறுகிருன். இராமன் பேரறம் காப்பாற்றியவனுகிருன். இவ்வாறு இருவர்க்கும் அறக்கடவுள் நன்மையை விளைவிக்கின்றது.

ஒளிந்து நின்றதன் காரணமாக இராமன் அறம் தவறி விட்டான் என்றே வாலி நினைத்திருந்தான். பிறனில் விழைந்த தனக்குச் சரணுகதி கொடுக்கக்கூடாதென்பதற்காகவே இராமன் ஒளிந்திருந்து கொன்ருன் என இலக்குவன் கூறியதைக் கேட்டதும்“தான்செய்த குற்றம் தன்னைச் சரணுகதிக்குக் கூடத் தகுதியற்றதாக்கி விட்டதே'' என அறிந்து துணுக்குற்ருன். குற்றத்தின் கடுமை பளிச்செனப் புலனுகியது. தண்டனை அவசியமே என உணர்கின்ருன். அஞ்ஞான இருள் நீங்கி அவனிடத்தே இருந்த ஞான ஒளி மீண்டும் சுடர்விடுகிறது.

''கவிக்குலத்தரசு மன்னன் கட்டுரை கருத்திற் கொண்டான்
அவியுறு மனத்தனுகி அறத்திறன் அழியச் செய்யான்
புவியுடை அண்ணல் என்பதெண்ணினன் பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சிச் சொன்னுன்''

''தாயென உயிர்க்கு நல்கித் தருமமும் தகவும் சால்பும்
நீயென நின்ற நம்பி நெறியினோர்க்கு நேர்மை
நாயென நின்ற எம்மால் நவையற உணரலாமே
தீயன பொறுத்தி என்ருன் சிறியன சிந்தியாதான்''

இங்கே ''தீயன பொறுத்தி என்ருன் சிறியன சிந்தியா தான்'' என்பதில் ''தீயன'' என்பது வாலி சுக்கிரீவனிடத்து இரக்கமின்றி நடந்து கொண்டதையும், அவன் மனைவியை அபகரித்ததையும் குறிக்கும். தன் செயல்கள் தீயன என உணர்ந்து அவன் இராமனிடம் மன்னிப்புக் கேட்கிருன். இங்ஙனம் மன்னிப்பு கேட்கும் அவனைச் ''சிறியன சிந்தியா தான்'' எனக் கம்பன் கூறுகின்ருன். 'சிறியன' என்பதும் தீயனவற்றையே குறிக்கும் என்றும், இதுவரை தான் செய்த

தீமைகளைச் சிந்திக்காமலிருந்த வாலி இப்பொழுது அவற்றைச் சிந்தித்துச் சொல்கின்ருன் என உணர்த்துவதற்கே, கம்பன் ''சிறியன சிந்தியாதான்'' என்று கூறுகின்ருன் என்றும் ஒரு புதிய உரை அண்மையில் கூறப்பட்டிருக்கிறது. ஒரேஅடியில் ''தீயன'' என்றும் '' சிறியன'' என்றும் வறுவதால், இவ் விரண்டிற்கும் வேற்றுமை கண்டு பொருள் கூறிஞல்தான் சிறப்பு. ''இராமன் ஒளிந்து நின்று கொன்றது, நிராயுதன் மீது அம்பு தொடுத்தது, இருவர் போர் செய்யும் போது முன் அறிவிப்பின்றி அம்பு தொடுத்தது முதலானவற்றைத் தீயன என வாலி கருதி இராமன் மீது சினம் கொண்டான். இராமன் பேரறத்தைக் காப்பாற்றுவதற்காகவே இவ்வாறு செய்தான் என அறிந்ததும், தீயனவாகத் தோன்றிய அவை அவனுக்கு எண்ணுதற்கும் தகுதியற்ற சிறியனவாகத் தோன்றுகின்றன. அவற்றைச் சிந்திக்காமல் விட்டு தான் இதுவரை தீமை, என உணராதிருந்த செயல்களைத் தீமைஎன உணர்ந்து அவற்றைப் பொறுக்குமாறு, இராமனிடத்து வேண்டுகிருன். இராமன் ஒளிந்து நின்று கொன்றதை மிகப் பெரிய ஒரு தீமையாக உலகம் கருதி விவாதிக்கும் என்பதை முன் கூட்டியே அறிந்த கம்பன், பிறனில் விழைந்த தீமையை நோக்க அது தீயதா காமல் விவாதிப்பதற்கே அருகதையற்ற சிறியதாய் விடுகிற தென்பதை நமக்கு உணர்த்தவே இவ்வாறு கூறுகிருன். ''மூவர் நீ, முதல்வன் நீ, முற்றும் நீ, மற்றும் நீ'' என்றும் ''ஆவிபோம் வேலைவாய் அறிவு தந்தருளிஞய்'' என்றும், ''உன் சரமலால் பிறிது வேறுளதோ தருமம்'' என்றும், ''என் பழவினைத் தண்டமே அடியனேற் குறு பதம் தருவதே'' என்றும், ''வெற்றரசு எய்தி எம்பி வீட்டரசு எனக்கு விட்டான்'' என்றும் வாலி கூறி இராமனைச் சிவ பரம்பொரு ளாகவே கொண்டு தொழுகின்ருன். இவ்வாறெல்லாம் வாலி பக்குவத்தால் சொல்கிருனே அன்றி இராமன் அவனுக்கு வீடுபேறு அளிப்பதற்காக சொல்லவில்லை என்பதை நாம் மறக்க கூடாது. யாரையும் வெறுக்காத ஒரு நிலையை அடைவது.

ஞானம் தோன்றிய தென்பதற்குச் சிறந்த அடையாளம். தன் மரணத்திற்கே காரணமாகத் தன்முன் நிற்கும் தம்பி சுக்கிரீவன் மீது எவ்வித வெறுப்பும் இல்லாமல் அவனை இராமனிடத்தில் அடைக்கலமாக ஒப்புவித்து, ''தீவினைஇயற்றுமேனும் எம்பி மேற்சீறி, என்மேல் ஏவிய பகழி என்னும் கூற்றினை யேவல்'' என வாலி சொல்வது ஞானம் பெற்றதன் அடையாளம் என்பது தெளிவு. தன் மகனாகிய அங்கதனை அழைத்து வருமாறு சுக்கிரீவனிடத்துச் சொல்லும்போது, "உய்த்தனை கொணர்தி உன்றன் ஓங்கரு மகனை'' என அவனைச் சுக்கிரீவனுக்கு மகனாக்கிக் கூறுகின்றான். இஃதும் ஞானத்தின் அடையாளம்.

அங்கதன் துன்பமுடையோரைக் கனவிலும் பார்த்தறி யாதவன். வாலி அவனை அவ்வாறு வளர்த்திருக்கின்றான். இதனால் வாலி சுக்கிரீவனைத் துயருருத்திய தன்மையை அவன் உணர முடியாமல் போகிறது. இந்த நிலையில், "சிந்தையிற் செய்கையாலோர் தீவினை செய்திலாதாய்'' என அங்கதன் வாலிமீது விழுந்து புலம்புவது இயல்பேயாகும். இது அவன் தந்தையிடத்துக் கொண்ட ஈடுபாட்டினைக் காட்டுமேயன்றி வாலியின் நிறைகுறையினை அளந்து கூறுகின்றான் என்பதைக் காட்டாது. தாரை அழும்போது கூறுவதையும், இவ்வாறே கொள்ளவேண்டும். "பொய்யுரையாத புண்ணியா'' என அவள் கூறுவது, அவள் அவனிடத்தில் வைத்திருக்கும் அளவற்ற மதிப்பையே காட்டும். வாலி தாரையிடத்தே பேரன்புடைய வனாக இருந்திருக்கிறான். உருமையின் தொடர்பால் இந்த அன்பு பாதிக்கப்படவில்லை. பாதிக்கப்படாத நிலையில் வீழ்ந்து கிடக்கின்ற வாலியின் பெருமையைக் கூறி அழுவதுதானே ஒரு பெண்ணுக்குள்ள இயற்கை ஆகும்? இராவணன் சீதை யின் நினைவால் மண்டோதரியிடத்து மனம் திறந்து பேசாமல் இருந்திருக்கின்றான். இதனால்தான் அவள் அதனைச் சொல்லி அழ வேண்டியதாயிற்று. தாரையின் நிலைவேறு; மண்டோதரியின் நிலை வேறு. வாலி பொய்யுரை

யாதவனுக இருந்தமையால்தான், இராமனிடத்தில் தான் உருமையை அபகரித்த செய்தியை மறுக்கவில்லே. வாலியே உருமையின் தொடர்பை உடன் பட்டுப்பேசுவதால் தாரையின் கூற்றை வைத்து அதுபற்றி ஐயப்படுவது பொருளற்ற தாகும்.

அங்கதனை அடைக்கலமாக ஒப்புவித்த பின் வாலி தான் பிடித்திருந்த இராமபாணத்தை நெகிழவிடுகிருன். அங்கதனை இராமன் அடைக்கலம் ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக தன் பொன்னுடை வாளை நீட்டி, "நீ இது பொறுத்தி" என்ருன். "பொறுத்தி" என்பதற்கு "இவ்வாளை நீ ஏந்துக" என்றே பலர் பொருள் கொள்வர். பொறுப்பாயாக என இதற்கு பொருள் கொண்டு இராமன் இவ்விடத்தில் தான் வாலியைக் கொன்றது குற்றம் எனக்கருதி மன்னிக்க வேண்டு கிருன் எனச் சிலர் பொருள் சொல்வர். "பொறுப்பாயாக" என்று பொருள் கொண்டாலும் அது இராமனின் நெகிழ்ந்த உளப்பண்பைக் காட்டுமேயன்றித் தான் செய்தது குற்றம் என அவன் கொள்கிருன் என்பதைக் காட்டாது. இதுபற்றிப் பின்னர், "இல்லறம் துறந்திலாதோர்" என்னும் பாடல்பற்றி ஆராயும்போது கவனிப்போம். வாலி பாணத்தை நெகிழ விடுத்ததும், அது அவன் மார்பகத்தில் ஊடுருவிச் செல்ல வாலி இறக்கிருன். இதனைக்கம்பன், "அந்நிலே துறந்து வாலி வானுக்கு அப்புறத்து உலகனுனன்" என்று கூறுகிருன்.

"யான், எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்னும் திருக்குறளை மனத்திற் கொண்டே கம்பன் இவ்வாறு கூறுகிருன். புண்ணியஞ் செய் தோர் வானுலகமாகிய சொர்க்கத்திற்கே செல்வர். ஞானம் பெற்ரோர் அதற்கு மேற்பட்ட நிலேயதாகிய வீடுபேற்றை அடைவர். வாலி, "வானுக்கு அப்புறத்து உலகனுனன்" எனக் கூறுவதால் சொர்க்கத்திற்கும் மேற்பட்ட வீடுபேற்றை அவன் எய்தினுன் எனக்கம்பன் கருதுகிருன் என்பது பெறப் படும்.

தாரை புலம்பும் போது கூறுகின்ற ஒருபாடல் மிக முக்கியமானது.

"அணங்கார் பாகனை யாசை தோறுமுற்று
உணங்கா வொண்மலர் கொண்டு என்பொடும்
இணங்காக் கால மிரண்டொ டொன்றினும்
வணங்கா தித்துணை வைக வல்லையோ"

வாலியின் சிவபூஜைத் திறத்தைத் தாரையின் இக்கூற்று இனிது புலப்படுத்தும். "பஞ்சின் மெல்லடியாள் பங்கன் பாதுகமல்லது யாவும் அஞ்சலித்தறியாச் செங்கை ஆணையான்" என அங்கதன், வாலி இராமனைத் தொழுது முடித்த பின்னர் வந்து அழும்போது கூறுகின்றான். சிவபெருமானைத்தவிர வேறுயாரையும் வாலி அஞ்சலி செய்யமாட்டான் என அங்கதன் கூறுவதால் இராமனை வாலி சிவபரம்பொருளாகவே கொண்டு இறைஞ்சி இருக்கிறான் என நாம் கொள்ள வேண்டி இருக்கிறது. இவ்வாறு கொள்வது வைணவ சம்பிரதாயத்துக்குப் பொருந்துமா எனச் சிலர் ஐயப்படலாம். அர்ச்சுனன், "தான் இன்னும் சிவ பூஜை செய்யவில்லையே" என்று சொன்னபோது திருமாலாகிய கண்ணன் பின் வருமாறு கூறியதாக வில்லிபுத்தூரார் தாம் பாடிய பாரதத்தில் கூறுகிறார் :

"மருவறு காகை மலரினால் எமைப்
பொருவரும் பூசனை புரிதிஜய நீ
இருவரும் ஒருவரே என்பது இன்றுபோய்
அருவரை அவனடி அடைந்து காண்டியே."

அர்ச்சுனன் கண்ணனையே சிவபரம் பொருளாகக் கொண்டு சிவாகம விதிப்படி பூஜை செய்தான் என வில்லி பாரதம் கூறுகிறது. எனவே இராமபிரானை வாலி சிவபரம் பொருளாகக் கொண்டு சிவநாம, இராம நாம பேதம் இன்றி அஞ்சலி செய்தான் எனக் கொள்வது கம்பனில் தெளிவாக இல்லாவிட்டாலும் இராமாயண பாரத இதிகாச மரபுக்கு ஏற்புடைத்ததேயாகும்.

வாலிக்கு அங்கதனைக் கொண்டு ஈமக்கடனை நிறை வேற்றிய பின்னர் இலக்குவனைச் சுக்கிரீவனுக்கு முடிசூட்டும் படி இராமன் ஆணையிடுகிறான். இலக்குவன் சுக்கிரீவனுக்கு முடிசூட்ட அவன் அங்கதனை இளவரசனாகவும், தாரையைத் தாயாகவும் கொண்டு அவன் அரசு புரிகின்றான்.

சுக்கிரீவனுக்கு இராமன் அரசியல் அறிவுரை கூறும் பொழுது, "மங்கையர் பொருட்டால்" என்னும் பாடலில், "அங்கவர் திறத்தினாலே அல்லலும் ப ழி யு ம்" வரும் என்கிறான். இங்கே, "அவர்திறம், " என்பதால் மங்கையர் திறத்தால் அல்லலும் பழியும் வரும் என்பதே பொருள் ஆகும். பெண்களால் வந்த பழியை இராமன் குறிக்கிறானே அன்றி வாலியால் தனக்கு நேர்ந்த பழியை அவன் இதில் குறிக்கவில்லை. அநுமனிடத்தே இராமன்,

"நிரம்பினான் ஒருவன் காத்த நிறை அரசு
நின்ற வரம்பிலாத தனைமற்றோர் தலைமகன் வலிதிற்
கொண்டால்
அம்புவது நலனும் தீங்கும்" என்று

கூறுகின்றான். "வாலியின் அரசாட்சியை யாரும் குறைகூறமுடி யாது. ஊருக்கு அவன் நல்லவன்; உடன் பிறந்தானுக்கே அவன்தீயவன். பிறனில் விழைந்ததாலேயே அவன் தண்டிக்கப் பட்டான். அவனைக் கொன்று அரசேற்றதை வலிதிற் கொண்டதாகவே அவனிடத்து ஈடுபாடு கொண்ட மக்கள் நினைப்பர். எனவே ஆதரவும் எதிர்ப்பும் நாட்டில் இருக்குமாத லால் அறிவிற் சிறந்த நீ உடனிருந்து ஆலோசனை சொல்லவேண்டும்" என அநுமனிடத்தே இராமன் கூறு கிறான். இதனால் வாலியைத் தான் கொன்றது பிழையென இராமன் கருதுகிறான் எனக் கூற வராது.

சுக்கிரீவனிடத்தே இராமன் கூறுகின்ற ஒரு பாடல் சிந்தனைக்குரியது.

"இல்லறந் துறந்தி லாதோ ரியற்கையை யெதிர்ந்து போரின்
வில்லறந் துறந்து வாழ்வேற் கின்னன மேன்மை யில்லாச்
சில்லறம் புரிந்து நின்ற தீமைகள் திருமாறு
நல்லறந் தொடர்ந்த நோன்பி னவையற நோற்ப லென்ருன்"

இங்கே வில்லறந் துறந்தது என்பது சீதையைத் தூக்கிச் சென்ற இராவணனை இன்னும் கொல்லா திருப்பதைக் குறிக்கும் என வை. மு. கோ. கூறுகிருர். "புரிந்து நின்ற தீமைகள்" என்பதற்குத் "தான்பூண்ட மானுட வடிவத்திற்கு ஏற்றவாறு மனைவியை பிரிவதற்குக் காரணமாகத் தான் செய்த தீவினைகள் நீங்கும்படி", என அவர் பொருள் கூறுகிருர். இராவணனிடத்தே இராமன் இன்னும் போர் புரியவில்லை. இங்கே போரில் வில்லறம் என்பதால் அது நடந்த போரைக் குறிக்குமே யன்றி நடவாத போரைக் குறிக்காது. இராவணனைக் கொல்லாதிருப்பதை வில்லறம் துறத்தல் என இராமன் கருதியிருந்தால் வாளா "வில்லறம்" என்று கூறியிருப்பானேயன்றிப் போரில் வில்லறம் என்று கூறியிருக்க மாட்டான். இராவணனை இன்னும் கொல்லாதிருப்பது வில்லுக்குப் பழி என்றே இராமன் பலவிடத்தும் கூறுகின்ருன். அதனை "வில்லறம் துறத்தல்" என்று எவ்விடத்தும் கூறவில்லை.

வாலியிடத்து நடந்த போரில் தான் வில்லறம் துறந்ததையே இராமன் திட்டவட்டமாக இவ்விடத்தில் குறிப்பிடுகிருன். இப்போரில் புரிந்து நின்ற தீமைகள் தீரவே தான் நோன்பு நோற்பதாக அவன் கூறுகிருன். அவன் செய்த தீமைகள் யாவை ?

1. அரசனுகிய வாலியைப் போர்விதிப்படி முன்கூட்டியே அறிவித்துப் போருக்கு அழைக்காதது ஒரு தீமை.
2. நிராயுதனுகிய அவனை அம்பெய்து கொன்றது ஒரு தீமை.
3. ஒளிந்து நின்று கொன்றது ஒரு தீமை.

4. தம்பியைப் போர் செய்ய அனுப்பி அவன் அண்ணனுடன் போர்செய்யும்போது எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ஒளிந்து நின்று அம்பெய்தது ஒரு தீமை.

இந்நான்கு தீமைகளையும் இராமன் மனத்தில் நினைந்தே அவற்றிற்குப் பரிகாரமாக நோன்பு நோற்க முயல்வதாகச் சொல்கிறான்.

இராமன் அறம் பிறழ்வதற்கு எவ்வளவு அஞ்சுபவன் என்பதைக் காட்டும் ஓர் உயர்நிலைப் பாட்டாக இது மிளிர்கிறது. அறத்தின் நாயகன் சாமானியமாக அறம் மீற மாட்டான். பிறனில் விழைந்தானைத் தண்டித்தலும், தன்னிடத்தே சரணாகதி அடைந்தானைக் காப்பாற்றுதலும் தன் பெருங்கடனென இராமன் கொண்டான்.

வாலிக்கு முன்கூட்டியே அறிவித்தோ, நேரில் சென்றோ போர் செய்தால் அவன் சரணாகதி அடையக்கூடும் என எண்ணினான். சரணாகதி அடைந்தால் பிறனில் விழையாமையாகிய அறத்தை நிலைநாட்டாது போகவேண்டிய ஒரு நிலை ஏற்படுமென அவன் அஞ்சினான். பிறனில் விழையாமையைக் காப்பாற்றுவதற்காக போர் அற விதிகள் அனைத்தையும் அவன் மீறுவதற்குத் துணிந்தான். போர் அற விதிகளை மீறுவது தீமையே என அவன் உணர்ந்தும் பிறனில் விழையாமையாகிய அறத்தை நிலை நாட்டுவதே முக்கியம் எனக் கருதி இத்தனை தீமைகளையும் ஏற்றுக்கொண்டான். நன்கு சிந்தித்தே ஒரு முடிவுக்கு வந்து அவன் ஒளிந்து நின்றதால் இப்பொழுது அதனைக் குறித்து வருந்துகின்றான் எனச் சொல்வது பொருத்தமாகாது. அப்படிச் சொன்னால் இலக்குவன் கூற்று அர்த்தமற்றதாகிவிடும். போர் அறத்தைக் காப்பாற்றுவதற்காகத் தான் போர் அறவிதிகளை மீறியது சரியே என அவன் எண்ணினாலும் அவ்விதிகளை மீறியது தீமையே எனக்கருதி நோன்பு நோற்க முனைகிறான். இப்பாடல் உணர்த்தும் கருத்து இஃதேயாகும். இது அறம் பிறழுதற்கு அஞ்சும் இராமனின் தீவிர மனப்பண்பைக் காட்டுமேயன்றி

வாலியைக் கொன்றது குற்றமெனக் காட்டாது. வாலியை ஒளிந்து நின்று கொன்றது சரியே என்பதை இலக்குவன் வாக்காக வைத்துக் காட்டிய கம்பன், இங்கே இராமன் வாக்கில் வைத்து மிக நுணுக்கமாக அவன் மனப்பண்பின் கூர்மையைக் காட்டுகிறான். இங்கே இராமன் வருந்துவது கழிவிரக்கத்தின் பாற்படுமேயன்றி பிழையுணர்ச்சியின் பாற்படாது. அறம் மீறுதலை ஒரு விதியாகக் கொள்ளக்கூடாது என்பதற்காகவே இராமன் நோன்பு நோற்கிறான். பேரறத்தை நிலைநாட்டச் சிற்றறங்களை மீறுவது ஒரு புறனடையாகவே கொள்ளப்படும். இருப்பினும் இராமனைப் போன்ற அறவோர் தம் மனப்பண்பின் கூர்மை காரணமாக வருந்துவது இயல்பேயாகும். அங்கதனிடத்தே, ''நீ இது பொறுத்தி'' என்பதற்கு, ''இதனைப் பொறுப் பாயாக'' எனப் பொருள் கொண்டாலும் அது இராமனின் உயரிய மனப் பண்பைக் காட்டுமேயன்றி வாலி வதையைக் குற்றமென அவன் கருதுகிறான் எனக் காட்டாது.

பசுவை அடித்துக் கொன்ற பாஸ்கரநாயர் வீட்டிற்கு ஒரு நண்பர் சென்றார். அவர் ஒரு பசு மடம் வைத்திருப்பதைக் கண்டு வியந்தார். ''ஏன் பசு மடம் வைத்திருக்கிறீர்கள்?'' என்று அந்த நண்பர் கேட்ட பொழுது, ''மேலூர் நெடுஞ்சாலையில் பசுவைக் கொன்றதிலிருந்து மனச்சாட்சி உறுத்திக் கொண்டே இருந்தது; அதற்காகப் பசு மடம் வைத்திருக்கிறேன்'' என்று நாயர் கூறினார். ''நீங்கள் செய்தது சரியென்று நீதி மன்றமே தீர்ப்பளித்திருக்கும் போது, ஏன் பசுமடம் வைத்து பரிகாரம் தேடுகிறீர்கள்'' என அந்த நண்பர் மறித்துக் கேட்ட பொழுது, நாயர், ''நான் செய்தது சரிதான். குழந்தையைக் காப்பாற்ற அப்படிச் செய்து தான் ஆகவேண்டும். இருந்தாலும் ஒரு பசுவைக் கொன்று விட்டோமே என்னும் உணர்ச்சி என் உள்ளத்தே தோன்றிக் கொண்டே யிருந்ததால் பசுமடம் வைத்திருக்கிறேன்,'' என்று சொன்னார். இது குற்றம் செய்ய அஞ்சும் நாயரின் சீரிய மனப்பண்பைக்

காட்டுகிறதேயன்றி அவர் செய்தது பிழை என்பதைக் காட்டவில்லை. இது போலவே இராமனும் தான் செய்தது சரியென்று நினைத்தாலும் வில்லறம் துறந்தது ஒரு தீமையே எனக் கருதி அதற்குப் பரிகாரமாகவே நோன்பு நோற்க முற்படுகிருன். மானுட அவதாரம் எடுத்த இராமன் இவ்வாறு நோன்பு நோற்பதன் மூலம் அறவோர் இலக்கணத்தை நாம் அறியுமாறு செய்கின்ருன். அறங்களுக்குள் சில சமயம் மோதுதல் ஏற்படும். அப்போது பெரியோர்கள் ஒன்றைக் கடைப்பிடித்து மற்ருென்றை நெகிழ விடுவர். செயலாற்ற வேண்டிய அவர்கள் இவ்வாறு ஒரு முடிவிற்கு வர வேண்டுவது அவசியமாகிறது. ஆனல் நெகிழ விட்ட நிலை குறித்து அவர்கள் வருந்துவது இயல்பேயாகும். நாம் இதனை வைத்து அவர்கள் செய்தது குற்றம் எனத் தீர்மானித்தால் அறவோரின் உளப்பண்பை அறியாதவர்களாகி விடுவோம். எனவே இப்பாடலை வைத்து இராமன் செய்தது குற்றம் எனக்கொள்வது தவருகும்.

இதுவரை வாலி வதம் பற்றிப் பல கோணங்களில் ஆராய்ந்தோம். அவ்வதம் சரியே என்ற முடிவுக்கும் வந்தோம். எனினும் இன்னும் சில ஐயப்பாடுகளையும் வினக்களையும் வாலி வதத்தின் கண் எழுப்ப இடமுண்டு.

வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் இடையே ஏற்பட்ட குடும்பச் சண்டையில் இராமன் தலையிடலாமா என்பது சிலரது வினு. குடும்பச்சண்டையிலும் அண்ணன், தம்பியை அடித்துக் காயப்படுத்தினல் அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுப்பதை இன்றும் காண்கிருேம். அரசனுகிய இராமனிடம் சுக்கிரீவன் தான் அண்ணனல் துன்புறுத்தப் படுவதாகத் தெரிவித்ததால் இராமன் தலையிட்டு நடவடிக்கை எடுத்திருக்கிருன். இதனைத் தவறு என்று எப்படிச்சொல்வது?

வானப்பிரஸ்தனுன இராமன் அரசனுவானு? அரச கடமையை மேற்கொள்ள அவனுக்கு உரிமை உண்டா? இது

மற்ற வினுக்கள். பரதன் அரசை இராமனிடம் திருப்பி வழங்கி விட்டான்; இராமனும் அதனை ஏற்றுக்கொண்டுவிட்டான். ஆகவே இராமன் தான் அரசன்; பரதன் அவனின் பிரதிநிதி யாகத்தான் ஆள்கின்ருன். தண்டகாரணிய முனிவர்களிடம், ''அரக்கரைக் கொன்று அறத்தை நிலைநாட்டுவேன்'' என இராமன் வாக்களிக்கிருன். அரசுரிமையை அவன் இழக்கா மல் இருந்ததால்தான் வன வாசத்தில் இவ்வாறு வாக்களிக்க அவனுல் முடிந்தது. கைகேயி பதினுன்கு ஆண்டுகள் இராமனைத் தவம் மேற்கொள்ளச் சொன்னுளே அன்றி வானப்பிரஸ்தன் ஆகும்படி சொல்லவில்லை. வானப் பிரஸ்தம் என்ருல் கணவ னும் மனைவியும் சேர்ந்து தவம் மேற்கொள்ளல் வேண்டும். வானப்பிரஸ்த நிலையைக் கைகேயி கருதியிருந்தால், சீதையையும் உடனழைத்துக்கொண்டு காட்டிற்குச் செல்லும் படி இராமனுக்குக் கட்டளை இட்டிருப்பாள். அவள் அவ்வாறு சொல்லவில்லை. சீதை தன் சொந்த விருப்பத்தின்மீதே காட் டிற்கு உடன் செல்கிருள். இதிலிருந்து வானப்பிரஸ்தம் கைகேயி கருத்தன்று என்பது இனிது விளங்கும் வானப் பிரஸ்தத்துக்குச் சென்றவர்கள் சந்நியாசி ஆகலாமே அன்றி மீண்டும் இல்லறத்திற்கு வந்து, முடிசூடி அரசாட்சி செய்ய முடியாது. மேலும் வானப்பிரஸ்தனுன இராமன் சீதையைப் பிரிந்த நிலையில் விரகதாபம் கொண்டு அரற்றுவது பெரிய தோர் அபசாரமாக முடியும். வானப்பிரஸ்தம் என்பது கம்பன் கருத்தாக இருந்தால், விரத்தாபம் பற்றி இத்தனை பாடல்கள் பாடி இருக்கமாட்டான். எனவே இராமன் பதினுன்கு ஆண்டு கள் வானப்பிரஸ்தம் போன்ற ஒரு தவநிலையை மேற்கொண் டான் எனக் கொள்ளவேண்டுமே அன்றி உண்மையான வானப்பிரஸ்த நிலையை மேற்கொண்டான் எனக் கொள்ளக் கூடாது.

அரசனுகிய வாலியை அரசர்க்குரிய முறைப்படி இராமன் நடத்தவில்லையே என்பது இன்னெரு வினு. பிறன்மனைவி யைச் சிறைவைத்திருந்தால் அரசியல் காரணமும் இருக்

கக்கூடும் என எண்ணி அரச மரியாதை காட்டலாம்; பிறன் மனைவியைக் கெடுத்த பிற்பாடு அரசமரியாதை அளிப்பது தவறு. பிறன் மனைவியைக் கெடுத்தவன் அரச பதவிக்குத் தகுதி அற்றவன். அவனை அரசனாகவே கொள்ளக்கூடாது என்பது இராமன் கருத்து. இதனாலேயே இராமன் வாலியை அரச மரியாதையுடன் நடத்தவில்லை.

இராமன் கருணையங்கடல். பிறனில் விழைந்த குற்றம் எவ்வளவு பெரியதென்றாலும், அதற்கு உய்தியே இல்லை என்று வைத்துக் கொண்டாலும் கருணையங் கடலாகிய இராமன் வாலி சரணாகதி அடைவதற்கு ஒரு வாய்ப்பை அளித்து மன்னிப்பதுதானே பெருமை. சரணாகதிக்கும் வாய்ப் பளிக்காமல், மன்னிக்கவும் எண்ணமில்லாமல் இராமன் நடந்து கொண்டது அவன் கருணைக்கு இழுக்காகாதா? மன்னிப்பைவிட பேரறம் வேறொன்று உண்டா? இந்த ஐயம் நியாயவுணர்ச்சியுள்ள யாவர் மனத்திலும் தோன்றவே செய்யும்.

வாலியைப் பற்றி முதன் முதல் அநுமன் இராமனுக்குப் பின் வருமாறு தெரிவிக்கிறான்.

" இரவிதன் புதல்வன் தன்னை யிந்திரன் புதல்வ னென்னும்
பரிவிலன் சீறப்போந்து பருவரற் கொருவனாகி
அருவியங் குன்றி னெம்மோ டிருந்தன னவன்பாற் செல்வம்
வருவதோ ரமைவின் வந்தீர் வரையனும் வளர்ந்த தோளீர்".

இதிலிருந்து வாலி இந்திரன் புதல்வன் என்பதையும் சுக்கிரீவன் சூரியன் புதல்வன் என்பதையும் இராமன் அறிந்து கொள்கிறான். "இந்திரன் சேய்" என்றால் "இந்திரனின் அம்சம்" என்றுதான் பொருள். பால காண்டத்திலும் இந்திரன் வாலியாகப் பிறக்கிறான் என்று கம்பன் கூறுகிறான். இந்திரன் ஏற்கனவே பிறனில் விழைந்தவன். கௌதம

முனிவரின் மனைவியாகிய அகலிகையைச் சார்ந்து அவன் சாபம் பெற்றான். முனிவரோ பிறனில் விழைந்த இந்திரனை இறந்து போகும்படி சபிக்கவில்லை. அவன் உடம்பெங்கும் வெறுப்புடை உறுப்புகளாகத் தோன்றும்படியாகவே சபித்தார். பின்னர் இந்திரன் வருந்தியதைக் கண்டு அவனை மன்னித்துச் சாபத்தை மாற்றி அவனுக்கு மட்டும் வெறுப்புடை உறுப்புகளாகத் தெரியும்படியும், பிறர்க்கு அவை தாமரைக் கண்களாகத் தோன்றும் படியும் செய்தார். எனவே இந்திரன் முன்னமேயே பிறனில் விழைந்த செயலுக்காக மென்மையாகத் தண்டிக்கப்பட்டு மன்னிப்பளிக்கப் பெற்றிருக்கிறான். இந்த வரலாற்றை, இராமனின் பாத தூளி பட்டதும் கல்லாகக் கிடந்த அகலிகை மீண்டும் தன் பழைய உருவைப் பெற்றபோது, விசுவாமித்திரர் இராமனுக்குக் கூறியிருக்கிறார். பாலகாண்டத்தில் கம்பன் இந்நிகழ்ச்சியைப் பாடியுள்ளான். இதனால் இராமனுக்கு இந்திரனின் பூர்வ விருத்தாந்தம் தெரிந்திருக்கிறது: அநுமன் வாயிலாக அந்த இந்திரனே வாலியாகப் பிறந்திருக்கிறான் என்பதையும் அறிந்து கொள்கிறான். பிறனில் விழைந்த வாலியின் உணர்வு இப்பிறப்பிலும் தொடர்ந்துள்ளதை இராமன் அறிந்து கொள்கிறான்.

முன்னமேயே கடுமையாகத் தண்டிக்கப்பட்டிருந்தால் வாலியின் இப் பிறப்பில் அந்த உணர்வு தொடர்ந்திருக்காது என இராமன் கருதுகிறான். எனவே அவனுக்கு மீண்டும் மன்னிப்பளிப்பது பயன்தராது என இராமன் உணர்கிறான். வாலி இப் பிறப்பில் சிவபூஜை செய்து உன்னத நிலையை அடைந்துள்ளான். ஆனால் பூர்வ உணர்வுத் தொடர்பால் மீண்டும் பிறனில் விழைந்து தான் அடைய வேண்டிய பேற்றை அடையாமல் தடையுண்டு நிற்கிறான். ஆகவே மறுபடியும் மன்னிப்பளித்தால் அவன் ஈடேற்றம் அடைய மாட்டான். உடல் வலிச்செருக்குமிக்க அவனுக்கு மரண தண்டனை அளித்தால் காமவுணர்வு நீங்கப் பெற்றுப் பெரும் பதம் அடைய அவனுக்குச் சந்தர்ப்பம் உண்டு என்று இராமன்

கருதுகிருன். இதனுலேயே அவனுக்குச் சரணுகதி அளிக்கின்ற வாய்ப்பைக் கொடுக்காமலும், மன்னிப்பளிக்காமலும் ஒளிந்து நின்று கொல்கிருன். இவ்வாறு நோக்கினுல் இராமனின் கருணைக்கு இழுக்கு எதுவும் இல்லை என்பது புலனுகும். கம்ப இராமாயணத்தில் இருந்தே இக் குறிப்புகளை நாம் பெறுவதால் இராமன் செய்த முடிவை நாம் சரி என்றே கொள்ள வேண்டியவர்கள் ஆகிருேம்.

வாலி பொய்யுரையாத புண்ணியன் எனத் தாரை அரற்றுகிருள். வாலி, இராமன் விஞவிய பொழுது தான் உருமையைச் சிறைப்படுத்தியிருப்பதாகக் கூறியிருக்கலாம். ஆனுல் அவன் பொய்யுரையாத புண்ணியன் ஆதலால் அதனை மறுக்காமல், உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கலால் மணமும் இல்லை; மறை நெறி வந்தன குணமும் இல்லை'' என உடன்பட்டு கூறுகிருன். ''உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கம்'' என அவன் கூறுவதால் உருமையை அவன் களங்கப்படுத்தியிருக்கிருன் என்பது தெளிவாகிறது. ''விரும்பினுன்'' ''வௌவினுன்'' என்று கூறுவன எல்லாம் அவன் உருமையைக் களங்கப்படுத்தினுன் என்பதை உறுதிப்படுத்த மாட்டா எனக் கருதும் திறனுய்வாளர்கள் இப்பாடலை நோக்குதல் வேண்டும். இதில் வாலி உருமையைக் கெடுத்ததைப் பொய்யுரையாத தம் பண்பிற்கேற்ப உடன் பட்டு பேசுகிருன். ஆனுல் அதற்குச் சமாதானம் சொல்லும் பொழுது பொய்யுரைக்க முயல்கிருன். மணமும் இல்லை; மறநெறி வந்த குணமும் இல்லை, என அவன் கூறுவது பொய்யாகும். "உருமை என்றிவற்கு உரியதாரமாம்'' என அநுமன் சுக்கிரீவனுக்கு உரிய மனைவி உருமை எனக் கூறுகிருன். மணமில்லாவிட்டால் உரியதாரம் எப்படி வரும்? தாரை விதவைக் கோலம் பூண்ட நிலையைக் கம்பன் கூறும் பொழுது, "மங்கல அணியை நீக்கி மணியணி துறந்து வாசக் கொங்கலர் கோதை மாற்றி'' என்று சொல்கிருன். மணமில்லாத போது மங்கலவணி எப்படி வரும்? மறைவழி இல்லாத போது பூச்சூடுதலை

ஏன் ஒழித்தல் வேண்டும்? கிட்கிந்தையிலுள்ள அரச குடும்பத்தில் மணமுறை இருந்திருக்கிறது. குடிமக்களிடத்தில் அது அவ்வளவு இடம் பெருமல் இருந்திருக்கலாம். வாலி தப்பிக் கொள்வதற்காக குடிமக்கள் வழக்கை தன்மீது ஏற்றிப் பொய் கூறுகிருன். பொய்யுரையாத அவன் மோகம் காரணமாகப் பொய்யுரைக்க வேண்டியதாகிறது. இதிலிருந்து அவன் உள்ளத்தில் மோக உணர்ச்சி மிகுதியாய் இருந்திருக்கிற தென்பது பெறப்படும். எனவே மன்னிப்பைவிடத் தண்டனை அவனுக்கு பயனளிக்கும் என்பது தெளிவு.

இன்னும் சிலர் வாலி கொடியவன் எனக் காட்ட முயலுகின்றனர். கொடியவன் என்ருல் அவன் வீரசுவர்க்கத்திற்கும் மேற்பட்ட முடிந்த நிலையாகிய வீடு பேறு அடைந்தான் எனக் கம்பன் சொல்வதற்கு ஏற்ற மில்லாமல் போகும். அவனிடத்தில் நல்லியல்புகழ் பலவாகவும், தீய இயல்புகள் சிலவாகவும் இருந்தன எனக்கொள்வதே கம்பன் கருத்திற்கேற்றதாக இருக்கும். இராமன் வாலிக்கு வீடுபேறு அளிப்பதாகச் சொல்லவில்லை. 'வில்லிடை வாளியின் வீட்டி' என்று தான் சொல்லுகிருன். அதாவது வாலியைக் கொல்வதாகவே அவன் வாக்களிக்கிருன். இதனை உறுதிப்படுத்தியே இலக்குவனும் 'தென் புலத்துய்ப்பன் எனச் செப்பினன்' எனச் சொல்லுகிருன். இராமனுக்குத் தான் தெய்வம் என்பது தெரியாது. இராவண யுத்தம் முடிந்த பின்னர் தேவர்கள் பிரமன் வாயிலாக இராமனுக்கு அவன் தெய்வம் என்பதை உணர்த்துகின்றனர் இதனைக் கம்பன் யுத்த காண்டத்தில் தெளிவாகக் கூறுகிருன். எனவே இராவணயுத்தம் முடியும்வரை இராமன் தன்னை மானுடனுகவே கருதிக் கொண்டிருந்திருக்கிருன் என்பது புலனுகும். அவனைப்பார்க்கின்ற மற்றவர் அவனைத் தெய்வம் என்று உணர்கின்றனர். ஆனுல் இராமனே தன்னைத் தெய்வம் என்று உணராமல் இருக்கிருன். ஆகவே அவன் வாலிக்கு வீடு பேறு அளிக்க எண்ணுகிருன் எனச்சொல்வது பொருத்தமாகாது. வாலிக்குத் தண்டனை அளிப்பது அவனுக்கு

பெரும்பதம் பயக்கும் என்ற அளவில்தான் இராமன் கருதுகின்றான். வாலி தன் பக்குவத்தால் இராமனைத் தெய்வமாகக் காண்கிறான். பாரதத்தில் கிருஷ்ணன் கண்ணனுக்குக் காட்சி கொடுத்தது போல், இராமன் வாலிக்கு தன் அருளுருவக் காட்சியைக் காட்டவில்லை. வாலியே தன் சிவபூஜைத் திறத்தால் இராமனை பரம்பொருளாகக் கண்டு ஞானம் பெறுகிறான். தண்டனையால் அவனை மறைத்திருந்த ஆணவம் நீங்குகிறது. தன் தகுதியால் அவன் வீடுபேறு அடைகிறான். இதனை அவன் இராமன் மீது ஏற்றிக் கூறுகிறான். இதுதான் கம்பன் காட்டும் வாலி வதக் கருத்தாகும். இராமன் மானிடனாகத் தன்னைக் கருதிக்கொள்வதால்தான், அவன் செயல் பற்றி ஆராய்கின்ற உரிமை நமக்குக் கிடைக்கிறது. மானிட நிலையில் அவன் செய்யும் செயல்கள் ஆராய்ச்சிக்குரியன எனக் கம்பன் கருதுவதாலேயே வாலி வாயிலாக கேள்விக் கணைகளைத் தொடுத்து விளக்கிக் காட்டியிருக்கிறான். ஆகவே கம்பன் வழி நின்று வாலிவதைதயை ஆராய நமக்கு உரிமை இருக்கிறது.

"வாலிவதம் சரியா" என்னும் தலைப்பில் கம்பன் வ க்குகளைக் கொண்டு நாம் செய்த இவ்வாராய்ச்சியின் மூலம் வாலி வதம் சரியே என நிலை நாட்டுவதில் கம்பன் வெற்றி பெற்று விட்டான்.

வாழ்க கம்பன்புகழ்! வளர்க கன்னித்தமிழ் !!

இன்னும் பல இதில் சேர வேண்டும்.

பிழைத் திருத்தங்கள்

பக்கம்	வரி		பிழை	திருத்தம்
2	1		மந்திர	மந்தர
6	6	(பாடல்)	என்உயிர்	என் இன்உயிர்
9	15	(பாடல்)	ஆணையான்	ஆற்றலான்
33	3		அவனே	அவளே
34	26		அவன்	அவள்
40	19	(பாடல்)	அழிவந்து	அழிவு வந்து
48	27	(பாடல்)	வாலியங்கு	வானியங்கு
51	23	(பாடல்)	பெரும்	பெறும்
54	15		எண்ணுகிறுன்	எள்ளுகிறுன்
55	13	(பாடல்)	தேய்த்தலில்	துய்த்தலில்
55	14	(பாடல்)	காய்வரை	கானிடை
64	16	(பாடல்)	பெருதியோ	பெறுதியோ
72	3		ஒளிந்திருந்து	ஒளிந்திருந்தால்
74	21		வில்லையும்	வில்லறம்
77	21	(பாடல்)	நெறியி ஞேர்க்கு	நெறியினின் நோக்கு
78	5		வறுவதால்	வருவதால்
79	14		துயருருத்திய	துயருறுத்திய
80	4		வைைத்து	வைத்து
80	20		ஊடுறுவிச்	ஊடுருவிச்
82	14	(பாடல்)	அரசு	அரசு இறுதி
82	17	(பாடல்)	அம்புவது	அரும்புவ
86	30		இது	இவையே
88	24	(பாடல்)	வரையனும்	வரையினும்
89	18		வாலியின்	இந்திரனின்

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.